ஸ்ரீமத

# சங்கரபகவத்பாதாசார்யர்

# சரித்திரம்.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

ஸ்ரீரங்கம்:

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.

1907.

*Copyright Registered.*

# PREFACE.

THIS book is a reprint of the several articles contributed to the SRI VANI VILASINI. The minor stotras mentioned therein are given here in full for the benefit of the readers. The narrative itself is written not with the modern critical spirit but with the view of infusing in the minds of the readers a profound love and veneration for the life and teachings of the master-philosopher who has been acknowledged by all the scholars as the greatest intellectual giant the world has ever seen.

Swami Vivekananda, in the course of hislecture on "The Sages of India," thus speaks of him.

"But India has to live and the spirit of the Lord descended again. He who declared that 'I will come whenever virtue subsides' came again and this time the manifestation was in the south and up rose that young Brahmin, of whom it has been declared that at the age of sixteen he had completed all his writings; the marvellous boy Sankaracharya rose. The writings of this boy of 16 are the wonders of the modern world, and so was the boy. He wanted to bring back the Indian world to its pristine purity, but think of the extent of the task before him. I have told you a few points about the state of things that existed in India. All these horrors that you are

trying to reform are the outcome of that reign of degradation. The Tartars and the Belluchis, and all the hideous races of mankind, came to India and became Buddhists and assimilated with us and brought their national customs and the whole of our national life became a huge page of the most horrible and the most bestial customs. That was the inheritance which that boy got from the Buddhists and from that time to this the whole work in India has been a reconquest of this Buddhistic degradation by the Vedanta. It is still going on, it is not yet finished. Sankara came, a great philosopher, and showed that the real essence of Buddhism and that of the Vedanta are not very different but the disciples did not understand the master and had degraded themselves, denied the existence of the soul and of God and had become athiests. That was what Sankara showed and all the Buddhists began to turn to the old religion."

As Manilal N. Dvivedi says, fascinating, wierd music; lucid, chaste, powerful, balanced expression; universal, unsectarian, fearless, loving exposition;—these are some of the characteristics of his varied literary style. He was a real master of the Philosophy he preached; he can express it in half a verse, or a quarto volume of many hundred pages. He would readily break a lance with any adversary, athiest, materialist, ritualist, magician, ascetic, Yogi or Tantric. His writings largely reflect the spirit of the age he lived in; but the magic of the master whose wand can weld all difference into the homogeneous unity of his spell is unmistakable throughout. The glory of his literary activity is his masterly commentary on the Upanishads, the Bhagavad Gita and the Brahma Sutras, to say nothing of the numerous precious poems, large and small, which survive to the present day on the lips

of many a follower of the Adwaita Philosophy. The permanent charm of his name lives undoubtedly in the Adwaita Philosophy he taught then and for ever to India and the world at large. Such was the mighty Spirit that underlay the shell bearing the name of Sri Sankara and undoubtedly the Philosophy he taught and explained is pre-eminently Universal. There is no shade of opinion, no method or discovery of Science, no department of experience, which may not find its proper place within the ample folds of Adwaita philosophy. It is the source of much needed peace and happiness to mankind, it is the law and life of every great action, it is the balm of all evil. One touch of it makes "the whole world kin." It puts new life in action, new meaning in words, new vitality in forms, new things in thought. The Adwaita Philosophy is the gospel of Nature; --Nature, not as understood by dogmatic materialism, but Nature, the source and support of all life and all love. It throws a bridge across the wide gulf of country and country, nation and nation, caste and caste, individual and individual. Thus it melts all shadow of separateness into the substance of unity. Says the Master in his inimitable Manisha Panchakam: "In that thing, the inner being of all, the billow-less ocean of native bliss and light, what means this nightmare of separateness, creating distinction of Brahmana and Chandala and so on." All philosophy has from of old been defined as the search after the one in the many, and if any one has successfully solved the problem of 'one in many,' 'Unity in variety,' in its social, religious and political application, it is this one man of his age—nay of all age—Sri Sankaracharya. Let this Universal aspect of his teaching be never absent from the minds of our readers.

It is such a mighty personage, that we have attempted to depict in these pages and if a perusal of the book tends to instil into the minds of our readers supreme Bhakti towards the Guru, we shall deem ourselves amply rewarded.

Srirangam,
*4th January 1907.*

***J. K. Balasubrahmanyam.***



ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசாரிய ஸ்வாமிகள்.

நயும் பிறையும் மற்றவு மறைத்துக் காலடி யினிலவ தரித்த
நயாம் ஸரஸ வாணியை ஜயித்து மதம்பல வற்றையுந் தொலைத்தே
கயின் நெலலிக் கனியென விளங்க அத்வைத மதத்தினைத் தெரித்த
பகவத் பாதர்தம் பாத சரோருகந் தலைக்கணி யெமக்கே.

ஸ்ரீமத்

# சங்கரபகவத்பாதாசாரியர் சரித்திரம்.

## I.

## அவதாரம்.

இம்மஹானின் சரித்திரத்தை எழுத ஆரம்பித்ததைப் போலத் துணிவுகரமான காரியம் வேறொன்றுமில்லையாயினும், நமது பரதகண்டம் மிகவும் சீர்குலைந்து, ஜனங்களுக்கெல்லாம் பரமார்த்தமான வஸ்து இன்னதென்று தெரியாமல், எங்கே பார்த்தாலும் தர்மம் அமிழ்த்தப்பட்டு, அதர்மம் மேலிட்டு, மிகவும் கோரமான வியாபாரங்களெல்லாம் மதமென்கிற வியாஜத்தினால் நடத்தப்படவே, அச்சமயத்தில் ப்ரஹ்மஞானத்தைப் பரவச்

செய்து, துராசாரங்களையெல்லாம் தொலைத்து, அத்வைதமத த்தை ஸ்தாபித்து, ஜனங்களை நல்ல மார்க்கத்தில் திருப்பு வதற்காகவென்றே உதித்த இந்த மஹாபுருஷரது அவதார மகிமையையும், இவரது அத்வைதமதத்தின் பெருமையை யும், இவர் தமது ஆயுள்காலமாகிய 32-வயதிற்குள்ளாகச் செய்த பல அற்புதகாரியங்களின் விவரத்தையும், ஆரியர்க ளாகிய நாம் அறிந்துகொள்ளவேண்டியது முக்கியமாதலா லும், அவ்விதம் அறிந்துகொள்ளும் விஷயத்தில் நமக்கு ஓர் உத்ஸாஹமும் பெருமையும் உண்டாதலாலும், இதை ஒரு வாறு இங்கு எழுதத் துணிந்தோம். இவருடைய புத்தி கௌச லத்தைக் கண்டு மயங்காதவர்களில்லை. நமது தேசத்திலுள்ள வர்கள்தாமிவரிடத்தில் தங்களுக்குள்ள ஓர் பிரியத்தினால் இவரைக் கொண்டாடுகிறார்களென்று சொல்லலாமாயினும், ஐரோப்பியர்கள் அமெரிக்கா தேசத்தார்கள் முதலிய யாவ ருமே இவருடைய கிரந்தங்களைப் படித்து இவரது புத்தியின் மஹிமையிலீடுபட்டு, மயங்கி, வியக்கின்றார்கள். ஆகவே நாம் இவரை மஹானென்றும், பரமபரிசுத்தனென்றும், அவ தாரபுருஷனென்றும், ஈச்வரனே உருவெடுத்து வந்த தென்றும் கொண்டாடுவது ஆச்சரியப்படத் தக்கதன்று. விசிஷ்டாத்வைதியான காலஞ்சென்ற பண்டிதர் பாஷ்யா சாரியென்பவர் இவரைப்பற்றிப் பின்வருமாறு கூறி யுள்ளார் :—

“ஸ்ரீ சங்கராசாரியாரிடத்தும், அவர்களின் கிரந்தங்களி னிடத்தும் நமக்கு வெகு அதிகமான கௌரவமுண்டு. அவர்களின் மனத்தின் பெருமையும், காம்பீர்யமும், உறுதி யும், விஷயங்களை எடுத்துரைப்பதில் அவர்களின் பக்ஷபாத மின்மையும், அவர்களின் தெளிவான நடையும், இவைக

# அவதாரம்.

ஒவ்வொன்றுமே நமக்கு அவர்களிடத்துள்ள கௌரவத்தை அதிகரிக்கச்செய்கின்றது."

இத்தன்மையான பெரியோர்களின் சரித்திரத்தை ஆராய்வதற்குமுன் அவர்கள் அவதாரகாலத்தில் நமது நாடு இருந்த நிலைமையைச் சற்று விசாரிப்போம்.

ஸ்ரீ கிருஷ்ணாவதாரமாய்ச் சிறிது காலத்திற்கெல்லாம் உலகத்திலெங்குமே மதவிரோதங்களும், நாஸ்திகமதங்களும் ஏற்பட்டு, ப்ராஹ்மண க்ஷத்திரிய த்வேஷங்கள் உண்டான பொழுது, பகவான் கீதையில் செய்த உபதேசங்களை அனுஷ்டானத்தில் நடத்திக்காட்டுவதற்காகவே தாமே கௌதம புத்தராக அவதரித்து நாடெங்கும் தர்மத்தை உபதேசித்து கர்மயோகத்தை அனுஷ்டித்துக் காட்டினார்.

பகவத்கீதையில்

स्वल्पमप्यस्य धर्मस्य त्रायते महतो भयात् ।

ஸ்வல்பமப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத் |

'இந்த தர்மத்தில் ஸ்வல்பம் செய்தபோதிலும் மஹத்தான பயத்திலிருந்தும் காக்கப்படுகிறான்.'

स्त्रियो वैश्यास्तथा शूद्रास्तेऽपि यान्ति परां गतिम् ॥

ஸ்த்ரியோ வைஶ்யாஸ்ததா ஶூத்ராஸ்
தேऽபி யாந்தி பராம் கதிம் ||

'ஸ்திரீகளென்ன வைசியர்களென்ன சூத்திரர்களுங்கூட உன்னதமான பதவியை அடைகிறார்கள்' என்று உபதேசித்த அதே த்வனி மறுபடியும் உண்டாயிற்று.

ஸம்ஸாரபந்தங்களைக் களைந்து, கடின சங்கிலிகளை முறித்து, யாவர்க்குமே மோக்ஷத்திற்கு அதிகாரத்தைக்

குறித்துச் சொல்லும் கீதாவாக்யமானது திரும்பவும் கேட்கப்பட்டது. ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மாவின் கம்பீரத்வனியானது மீளவும் மேகம்போல் கர்ஜித்தது.

**इहैव तैर्जितः स्वर्गः येषां साम्ये स्थितं मनः ।**

இஹைவ தைர்ஜித: ஸ்வர்க:
யேஷாம் ஸாம்யே ஸ்திதம் மன: |

'எவர்களுடைய மனமானது ஸமபாவத்தில் உறுதியாக நிற்கின்றதோ, அதாவது எவர்களுக்கு உறுதியான ஸமபுத்தியிருக்கின்றதோ அவர்கள் இச்சன்மத்திலேயே ஸ்வர்க்கத்தை ஜயித்தவர்களாகிறார்கள்.'

**एवं तु पण्डितैर्ज्ञात्वा सर्वभूतमयं हरिं ॥**

ஏவம் து பண்டிதைர்ஜ்ஞாத்வா
ஸர்வபூதமயம் ஹரிம் |

'இவ்விதமாக ஓரே பிரபு ஸர்வவியாபியாயிருப்பதைக் கண்டு ஞானியானவன் ஆத்மாவுக்கு ஆத்மாவினால் தீங்கு செய்யாமல் மேலான கதியை அடைகின்றான்.'

இவ்வாறான உயர்ந்த உபதேசங்களை அனுஷ்டித்துக் காட்டுவதற்காக அல்லவோ உபதேஷ்டாவாகிய பகவான் **சாக்யமுனி** ரூபமாக தீனர்களுக்கும் அநாதைகளுக்கும் உபதேசகராகி, ஜனங்களின் ஹ்ருதயத்தைக் கவருமாறு தேவபாஷையைவிட்டு ஸாமான்ய பாஷையில் பேசி, தரித்திரர்களுடனும் மற்றுமுள்ள கீழ்ப்பட்ட ஜாதிகளுடனும் பழகுவதற்காகவே ராஜ்யத்தையும் ஒழித்து, பஞ்சமனையும் ஸமபுத்தியோடு பார்த்தார். இவ்வுபதேசத்தினுண்மையையும் பெருமையையும் அறியாமல் பலவித நாகரிகமில்லா ஜனங்க

# அவதாரம்.

ளெல்லோருமே பௌத்தமதம் அவரவர்களிஷ்டப்படி ஸுலபமாயிருந்ததைக்கண்டு அதில் விரைவாயும், ஏராளமாயும் வந்து சேர்ந்து, கொஞ்ச காலத்திற்குள் அவரவர்கள் ஆசாரப்படிக்குள்ள பற்பலவிதமான கொள்கைகளையும் அவரவர்கள் முன்னோர்கள் வழக்கமாய்ப் பூஜை செய்த பாம்புகள், பேய்கள், பிசாசுகள் முதலிய அநேக கோரரூபங்களையும் ஏற்படுத்திவிட்டார்கள். இவ்விதமாகக் கொஞ்சகாலத்திற்குள் உண்டான குரூரமான கர்மாக்களையும், ஆபாஸமான புஸ்தகங்களையும்பற்றி விஸ்தரிப்பது அனாவசியம். அக்காலத்திய அக்கிரமங்களைச் சொல்வதென்றால் நாவுமெழாது. இதையே நேரில் ஸமாதியிலிருக்கும் **ஸதாசிவப்ரஹ்மேந்திரர்** சொல்லியிருக்கிறார்.

**कलिना बलिनाऽखिलेऽखिलेऽपिस्खलिते श्रोत्रपथेऽपथे प्रवृद्धे ।**
**जपहोमतपस्सु नामशेषेष्वपि यातेषु सुभाषितेषु शोषम् ॥**

கலிநா பலிநாऽகிலேऽகிலே
ऽபிஸ்கலிதே ஶ்ரோத்ரபதேऽபதே ப்ரவ்ருத்தே
ஜபஹோமதபஸ்ஸு நாமஶேஷேஷ்வ
பி யாதேஷு ஸுபாஷிதேஷு ஶோஷம் ॥

**जिनबुद्धकपालिशक्तिवह्नीन्द्विनसेवासु समन्ततः श्रितासु ।**
**शिथिले द्विजवेदवेदिवादे प्रथिते चाद्वयवेदबाह्यमोदे ॥**

ஜிநபுத்தகபாலிஶக்திவஹ்நி
ந்த்விநஸேவாஸு ஸமந்ததஃ ஶ்ரிதாஸு
ஶிதிலே த்விஜவேதவேதிவாதே
ப்ரதிதே சாத்வயவேதபாஹ்யமோதே ॥

# அவதாரம்.

உலகத்திலெங்குமே கலிபுருஷன் பலமாக வியாபித்து, ஸமஸ்த வைதிக தர்மங்களையும் போக்கி, ஸன்மார்க்கத்தைத் தொலைத்து, துன்மார்க்கத்தை விருத்தி செய்வித்து, ஜபமென்ன, ஹோமமென்ன, தபஸென்ன, இவைகளையெல்லாம் பெயர் தான் மிச்சமாகச்செய்து, பெரியோர்கள் செய்த உபதேசங்கள் யாவுமே பறந்துபோகும்படி அடித்து எங்கே பார்த்தாலும், ஜைனமென்றும், சாக்தமென்றும், காணாதமென்றும், பைரவமென்றும், மல்லாரியென்றும், பாஸ்வதமென்றும், பௌத்தமென்றும், காபாலிகமென்றும், இவை போன்ற இன்னும் வேறுவேறு மதங்களுமுண்டாகி ஜகத்தெங்கும் மிகவும் சீர்கெட்டு அதர்மம் பூர்ணமாய் வியாபித்திருந்த ஸமயத்தில், தேவதைகள் தாங்கமாட்டாமல், தேவலோகத்தில் எல்லோரும் ஒருங்குகூடி ப்ரஹ்மாவிடம் போய் முறையிட்டார்கள். உடனே ப்ரஹ்மா ஸமஸ்த தேவதைகளுடன் கைலாஸகிரிக்குச் சென்று ஸாக்ஷாத் பரமேச்வரனிடம் பூலோகத்தின் அலங்கோல நிலையைத் தெரிவிக்க, அவர் கீதையில்

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

பரித்ராணாய ஸாதூநாம்
விநாஶாய ச துஷ்க்ருதாம் |
தர்மஸம்ஸ்தாபநார்த்தாய
ஸம்பவாமி யுகே யுகே ||

'ஸாதுக்களை ரக்ஷிப்பதற்கும், பாபிகளைத் தொலைப்பதற்கும் தர்மத்தை நன்கு ஸ்தாபிப்பதற்கும் நான் யுகந்தோறும் உண்டாகின்றேன்' என்று சொல்லியிருக்கிறபடி தாம் பூமியி

அவதரித்து, துஷ்டாசாரங்களைத் தொலைத்து, ஸன்மார்க்கத்தை ஸ்தாபித்து, வைதிக கர்மத்தை நிலைநாட்டி வருவதாக வாக்களித்தனர். ஆகவே ஈசுவராவதாரமே ஸ்ரீ சங்கரரெனச் சொல்லலாகும்.

இவர் அவதாரத்தின் காலத்தைக் குறிப்பிட்டுக் காண்பிப்பதற்கு சரியான ஆதாரங்கள் ஒன்றுமில்லை. இவர் அவதரித்த கிராமமோ கொச்சின் ஷோரனூர் இருப்புப் பாதையில் ஓர் தங்குமிடமாகிய அல்வாய் என்னும் ஊருக்கு ஆறு மயில் கிழக்கேயுள்ள **காலடி** யென்கிற ஓர் சிறு கிராமம். இந்தக் கிராமத்தைப்பற்றி ஒரு கதையுண்டு. ராஜசேகரனென்னும் ராஜா ஓர் இரவில் தன்னுடைய இராஜதானிக்கு ஸமீபத்தில் ஈசுவரன் ஒரு ஸ்வயம்புலிங்கமாக ஆவிர்ப்பவித்திருப்பதாக ஸ்வப்னம் கண்டு, குறிப்பிட்ட இடத்தில் போய்ப்பார்க்கையில், அது வாஸ்தவமாயிருக்க, தத்க்ஷணமே அங்கு ஒரு கோவில் கட்டுவித்து, அக்கோவிலின் பூஜைக்காக பிராமணர்களுக்கு அதே இடத்தில் வசதியான ஓர் அக்கிரஹாரம் ஏற்படுத்தினன். ஈசுவரனது காலடியில் அவ்வக்கிரஹாரம் ஏற்படுத்தப்பட்டதால், அதற்குக் **காலடி** என்று பெயர் வந்ததுபோலும். அந்த அக்கிரஹாரத்தில் ஒருவர் கல்வியில் சிறந்தவராதலால் வித்தியாதிராஜர் என்று பெயர் பெற்றவர். அவருக்கு சிவகுரு என்று ஒரே குமாரர். அக்குமாரருக்கு அத்யயனம் முடிந்த பிறகு கிருஹஸ்தாச்ரமத்தில் புகுந்தும் மக்கட்பேறில்லாமையால் மிக்க மனவருத்தமுற்று தம்பதிகளிருவரும் மஹாதேவனை மறாது தொண்டுசெய்து வந்தனர். ஓரிரவில் அந்தம்மாள் தூங்குமளவில், ஸாக்ஷாத் பகவான் கிழவடிவங் கொண்டு அவள் முன்வந்து, தீர்க்காயுஸ்ஸுள்ள அறிவில்லா

மக்கள் ஆயிரக்கணக்காய் வேண்டுமோ? அல்லது அல்பாயுஸ்ஸும் அதிமேதையுமுள்ள ஒரே புத்திரன் வேண்டுமோ? என்று வினவ, அவள் பிந்தியதே போதுமென விடைபகர்ந்தாள். ஆகவே, மும்மூர்த்திகளையும் முதற்பிள்ளையாகக் கொண்ட அத்திரி மஹாமுனிவர் அருங்குலத்தில், அதாவது ஆத்திரேய கோத்திரத்தில், மஹாதேவன் அருள் பெற்ற மறையோர் மணியான ஸ்ரீமத் சிவகுரு என்பவருக்கு முக்கண்ணன் ஸ்வப்னத்தில் வரமளித்தபடி ஸகல ஸத்குணங்களும் குடிகொள்ளும் ஓரிடமாய் உலகத்தில் வாழும் உயர்குலத்தாருயிருக்குயிராய் ஸாக்ஷாத் லக்ஷ்மீ புத்திரனையும் பழிக்கும் திருமேனிகொண்டு, மலையாளநாட்டு மாசிலாமணியாய்க் காலடி கிராமத்தில் ஓர் அருமைப் புதல்வர் அவதரித்தனர். அவரையே உலகத்தார் **ஸ்ரீசங்கரபகவத்பாதரென** வழங்குவது. அவர் சிறு வயதில், வெகுகாலம் மைந்தரில்லாது மனமுருகிநின்ற தாய்தந்தையரானந்திக்க அருமையான அநேக பாலசேஷ்டைகளுடன் வளர்ந்துவந்து மூன்று வது வயதில் பிதாவாகிய சிவகுரு என்பவர் மண்ணுலகை விட்டு விண்ணுலகிற்கேக, **मातृदेवो भव** என்னுமுபநிஷத் வாக்யத்தை யனுஸரித்துத் தமது தாயாரைத் தெய்வமாகப் பாவித்துக்கொண்டு, அவ்வக் காலங்களில் அந்தணர்களுக்குரிய கர்மாக்களை நிறைவேற்றப்பெற்று, ஐந்தாம் வயதிலேயே அரிய காயத்திரி மந்திரம் பெறும்படி இவரது பெருமையைக் கண்டு களித்த கல்விமான்களுரைக்க, அவ்வாறே உபநயனம் செய்விக்கப்பெற்று, பிராம்மணர்களின் ஒழுக்கத்தின்படி ஓர் ஆசார்யரிடம் வேதங்களை அப்பியாஸம்செய்து ஆச்ரமத்திற்குரிய பிக்ஷாடன விரதங்கொண்டனர். ஓர் ஸமயத்தில் ஓர் ஏழைப்பிராமணர் கிருஹத்தில் நுழைந்து, ஏதேனும் பிக்ஷை

யனை ய விரும்பி, அவ்விடத்து ஒன்றுமில்லாமையால் அங்குள்ள மங்கையர் மனம் வாடி மஹானுபாவராகிய இவருக்கு ஏதேனும் கொடுக்கக் கிட்டவில்லையே என்று அகமெங்கும் ஆராய்ந்து கடைசியாய் ஓர் நெல்லிக்கனியைக் கண்டெடுத்து, அக்கனியை அவர் கரங்களில் ஈந்தாள், அவர் அக்கோதையின் குணத்தைக் கண்டு வியந்து, கருணைமாரி பொழிந்து, “கனகதாரை” என வழங்கும் ஓர் ஸ்தோத்திரத்தினால் பாற்கடல் மகளினைப் பரவித் துதிக்க, விரைவில் அத்தேவியாரும் அந்த கிருஹம் முழுவதுமே பொன் நெல்லிக் கனிமாரி பொழிந்தனர்.

இவ்வாறு அநேக அற்புதகிருத்தியங்களை இளமையிலேயே செய்து கொண்டு குருமுகமாய் ஸமஸ்த வித்யைகளையும் ஒரே தடவையில் கேட்டுத் தெரிந்துகொண்டனர். எட்டாவது வயதிலேயே இந்த ஸ்ரீசங்கராகிய கல்பவிருக்ஷமானது, தர்க்கம், வியாகரணம், நியாயம், வைசேஷிகம், பூர்வமீமாம்ஸை, உத்தரமீமாம்ஸை, ஆகிய ஆறு சாஸ்திரங்களையும் வேராகவும் இதிஹாஸம், புராணம் முதலியவைகளை அடிக்கட்டையாகவும், வேதத்தைக் கிளைகளாகவும், ஆறு வேதாங்கங்களையும் தளிராகவும், தர்மசாஸ்திரம், ப்ரஹ்மஸூத்ரம் முதலியவைகளைப் புஷ்பமாகவும், மந்திரத்தைக் காயாகவும், ஞானத்தைப் பழமாகவும் அடைந்து செழிப்புற்று ஓங்கி வளர்ந்து நின்றது.

இங்ஙனம் பலரும் துதிக்க பிரம்மசர்யாச்ரமத்தில் சில நாள் ஸந்தோஷமாய்க் காலம் கழிந்து வருமளவில் இம்மஹானுக்குத் தமது புத்திரியை விவாஹம் செய்விக்க வேண்டுமென்று பிரார்த்திக்காதவர்களில்லை. ஸாக்ஷாத் பரமாத்மாவை மாப்பிள்ளையாக அடைகிறதென்றால் அதைவிட

வேறு பாக்கியமும் மனுஷ்யனுக்கு வேண்டுமோ? அதுதான் ஸுலபமாய்க் கிடைக்கக் கூடியதோ? இருந்தபோதிலும் அதை அபேக்ஷியாதவர்களு மிருப்பார்களோ? பெண்களுக்கு நல்ல வரன் ஸம்பாதிப்பதில் இருக்கும் கஷ்டம் தெரிந்தவர்களுக்கு எவ்வளவு ஜாதகங்கள் நமதாசார்யஸ்வாமிகளின் தாயாரிடம் வந்திருக்குமென்பது நான் சொல்லாமலே நன்கு விளங்கும். அந்தம்மாள் ஜாதகங்களையெல்லாம் அநேக ஜ்யோதிஷர்களைக் கொண்டு பார்த்துவரும்பொழுது, அகஸ்தியமாமுனிவர் இடையில்வந்து பையன் ஜாதகத்தில் ஆயுர்பாவம் மிகவும் ஸ்வல்பமாயிருப்பதாக வற்புறுத்த, அதையுங் கவனியாமல் பல பெயர்கள் கன்னிகாதானம் செய்ய விரும்பியபொழுது நமதாசார்யர் தமக்கு ஸந்யாஸத்தில் அதிக இச்சை யிருப்பதாகத் தமது மாதாவுக்குத் தெரிவிக்கவே, அம்மாது அப்படிச் செய்வது கூடாதென்றும், தனது விதியை நொந்துகொண்டு தனக்கு அவரைத்தவிர வேறு பாக்கியமில்லையென்றும், அவர் ஸந்யாஸியானால் தான் ஆயுளளவும் ஓரியாக இருக்கவேண்டி நேரிடுமென்றும், தனது காலத்திற்குப் பிறகு தனக்குக் கொள்ளி போடுகிறதற்குக் கூட ஒருவருமில்லாமல் போய்விடுமென்றும், வெகுவாகப் புலம்பினாள். அதற்கு நமது ஸ்வாமிகள் தாம் யதியாயிருந்தபோதிலும், எங்கு ஸஞ்சரித்துக்கொண்டிருந்தபோதிலும், மாதாவை ஒருநாளும் மறப்பதில்லையென்றும், அவள் எந்த வேளையில் நினைத்தாலும், தத்க்ஷணமே வருவதாகவும், அவளது நிர்யாணகாலத்தில் தாம் கிட்டவிருந்து உத்தரகர்மாக்கள் யாவற்றையும் தாமே செய்வதாகவும், இது விஷயத்தில் சற்றேனும் யோசிக்கவேண்டாமென்றும், ஸந்யாஸாச்ரமம் எல்லாவற்றிலும் அதிக மேம்

மாட்டேனென்றும், அதற்குமாதா அனுமதி கொடுக்கவேண்டுமென்றும், தெரிவித்தனர். இவ்விதம் தாயாரும் புத்திரரும், அந்நங்கை இல்லறம் கொள்ளவேண்டுமென்றும், இம்மஹான் துறவறமே புகுவது சிலாக்கியமென்றும் ஒருவரையொருவர் ஸம்மதியை நாடி நிற்குமளவில், ஓர் நாள் சூர்ணிப்புழை என வழங்கும் ஓர் நதியில் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்ய இருவரும் சென்றனர். அந்நதியில் ஸ்வாமிகள் அமிழ்ந்து ஸ்நானம் செய்கையில் காலில் ஓர் முதலை பற்றியிழுப்பதைக்கண்டு மனமுருகிய அன்னையிடம் ஆபத்தில் துறவறம் பூண அநுஞ்ஞையை யாசித்தார். அம்முதலையும் ஸந்யாஸம் செய்துகொள்ளும் பக்ஷத்தில் தான் விட்டுவிடுவதாக வாக்களித்தமையால் அம்மாது சிரோமணியும் உடனே அநுமதி கொடுக்க, அந்த நதியிலிருந்தவண்ணமே துரியாச்ரமத்தை கிரஹித்தனர். இச்சமயம் வேறு ஜன்மமென்று சொல்வதால் இப்பொழுதுதான் ஈசுவரர் இச்சரீரத்தில் பிரவேசித்ததாய்ச் சொல்லப்படுகிறது. ஈசுவரர் அயோனிஜராயினும், குமாரனைப்போல வளர்ந்தவராதலாலும், இச்சமயத்தில்தான் பிரவேசித்ததாகச் சொல்வது அங்கதமாகவே இருக்கின்றது. ஸந்யஸித்துக்கொண்ட அக்க்ஷணமே முதலையினின்றும் விடுபட்டுக் கரையிலிருந்த மாதாவிடம் வந்து அவளைப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்துகொண்டு, அந்தம்மாளின் நிர்யாண காலத்தில் தாம் எங்கிருந்தபோதிலும் ஓடிவந்து ஆகவேண்டிய எல்லாக் கர்மங்களையும் செய்வதாக உறுதிசொல்லி, காலடியில் அவளைத் தன்னினத்தாரோடு பகவத்தியானம் செய்துகொண்டு காலத்தைக் கழிக்கச் செய்து தாம் குருமுகமாய் உபதேசம் பெற்றுக்கொள்ளவேண்டி அத்தேசம் விட்டகன்று தமக்குத் தகுந்த குருவைத் தேடிச்சென்றனர்.

## 2.

## குருபரம்பரை.

முன்னொருகாலத்தில் திருப்பாற்கடலில் பரமாத்மாவாகிய ஸ்ரீமந் நாராயணன் ஆதிசேஷன்மேல் பள்ளிகொண்டிருக்கையில், எப்பொழுதும் அதிலோலமாய் மஹாவிஷ்ணுவை வகித்துவந்த ஆயிரந்தலையனான ஆதிசேஷனுக்கு இருந்தாற்போலிருந்து ஒரு ஸமயத்தில் பரமாத்மாவின் பாரம் தாங்கமாட்டாமல் தத்தளித்துப் பெருமூச்சுவிட்டு நாக்குப் பிதுங்கிப்போகிற ஸ்திதி வந்துவிடவே, யாது காரணம்பற்றி இவ்விதம் நேர்ந்ததென்று தெரிந்துகொள்ளவேண்டி அந்த ஸர்ப்பசிரேஷ்டனும் ஸ்ரீமந் நாராயணனையே பிரார்த்தித்தனன். இந்தப் பிரார்த்தனைக்கிணங்கி தயாநிதியான கோவிந்தனும் கிருபைகூர்ந்து புன்னகை கொண்டு பின்வருமாறு கூறினர். "நான் மூச்சை அடக்கி யோகத்தை அடைந்து மனத்தை நிலை நிறுத்தி மஹா மாயையாகிற திரையை விலக்கி அதற்கப்பால் நோக்கினதும்—ஆகா! ஸ்ரீசிவகாமிநாதனது நித்தியானந்தத் திருநடனத்தின் மஹிமையை என்னென்று சொல்லுவேன்! வலதுகைகளில் ஒன்றில் "சப்த நிஷ்

டம் ஜகத்" என்னும் சுருதிவாக்கியத்திற்கிணங்க, இந்த ஜகத்துக்கெல்லாம் காரணபூதமாயுள்ள சக்தியைக் கையிலடக்கியிருக்கிறார் என்பதைக் குறிக்க உடுக்கை ஒன்றை ஏந்தியும், மற்றொன்றினால் ஞானத்தின் மிகச்சிறந்த அதிகாரமான சக்தியைக் காண்பித்துக்கொண்டும், இரு துடைகளில் ஒன்றில் குருவாகிய தமது உபதேசத்தின் பிரமாணயத்தை ஸ்தாபிக்க ஆத்மாவின் ஜ்யோதிஸ்ஸை எடுத்துக்கொண்டும், மற்றொன்றினால் அதிசஞ்சலமாயுள்ள மனமாகிற மானைத் தூரத்தில் தள்ளிக்கொண்டும், அகம்பாவமாகிற புலியைக்கொன்று அதன் தோலை அரையில் அணிந்துகொண்டும், பிறப்பிறப்புக்குக் காரணமாயுள்ள முழு வில்லா மோஹமாயையாகிற முயலகனை ஒரு காலால் மிதித்து நசுக்கிக்கொண்டும், மற்றொரு பாதத்தை ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தியாகிய மூன்றவஸ்தைகளுக்கும் மேம்பட்டதாயுள்ள துரீயாவஸ்தையைக் காட்டுவதற்காக உயர்த்தூக்கிக்கொண்டும், மிகவும் குளிர்ந்ததும் ஆசுவாஸகரமாயுள்ளதுமான ஞானத்தைக் காட்டும் கங்கையையும் ஜ்யோதிர்மயத்வத்தையும், ஆநந்தமயத்வத்தையும் காட்டும் சந்திரனையும் சிரஸில் தரித்துக்கொண்டும், பார்ப்பதற்கு மிக்கவரிதும் பரமமான தத்வத்தை யுபதேசிப்பதுமான ஆனந்தத்தாண்டவமாடினார் கைலாஸபதி. அந்த அற்புதக் காட்சியைக் கண்ணுற்றும் என்னால் அதன் பெருமையை வர்ணிப்பது அஸாத்தியம். யோகத்தால் நான் அந்த ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டிருந்ததால் என் சரீரம் கனமடைந்து உம்மால் தாங்கக் கூடாமல் போயிற்று" என மொழியவே அந்த பணீசுவாரும் அத்தாண்டவத்தை தர்சிப்பதில் மிக்க அவாக்கொண்டு, அந்த பாக்கியம் தமக்குக் கிட்டும்படி கிருபை செய்தருள

வேண்டுமென்று லக்ஷ்மீபதியை வணங்கி நின்றனர். அவரும் அவ்வேண்டுகோளுக் கிசைந்து அப்படியே யாகட்டுமென்று, பூலோகத்தில் தில்லைவனமாகிய சிதம்பர க்ஷேத்திரத்தில் நேத்திரோத்ஸவமான நர்த்தனத்தை நடராஜர் காண்பிப்பா ரென்றும், அதை தரிசித்து விட்டுப் பின்பு பாணினி மஹரிஷி செய்த வியாகரணத்திற்கு காத்யாயனர் இயற்றிய வார்த்திகத்துக்கு மஹாபாஷ்யத்தைச் செய்து ஜனங்களைக் கிருதார்த்தர்களாக்கி விட்டுத் திரும்பவேண்டுமென்றும் ஆதிசேஷனுக்கு அனுக்கிரஹித்தனர். அந்தப் பன்னகேசுவரரும் உடனே பூமியில் பதஞ்சலி மஹரிஷியாக அவதரித்துக் கடோரமான தவம் புரிந்து சிவபெருமானது திருவருள் பெற்றுத் தில்லைவனத்தில் ஆனந்தத் தாண்டவத்தை தரிசித்துக் களிகூர்ந்து பரவசராகி மஹேசுவரனை ஸ்தோத்திரம் செய்து நிற்கையில், அந்தமஹாதேவனும் மஹாபாஷ்யத்தை விவரணம் செய்துவிட்டு தேவலோகத்துக்குப் போகும்படி கட்டளையிடப் பெற்று அவ்வண்ணமே வியாகரண மஹாபாஷ்யத்தை விரைவில் செய்து முடித்தார். இந்த பாஷ்யத்தைக் கற்றுக்கொள்ள வேண்டி ஆயிரம் சிஷ்யர்கள் இவரருகிற்சென்று தங்களுக்கு அதை உபதேசிக்கும்படி வேண்டினார்கள்.

பதஞ்சலியும் ஒரு திரைபோட்டு அதற்கோர் பக்கத்தில் தாம் இருந்துகொண்டு மற்றொரு பக்கத்தில் ஆயிரம் சிஷ்யர்களையும் உட்காரச்செய்து, அந்தத் திரையை விலக்கி யாரேனுமொரு சிஷ்யன் தம்மைப் பார்க்கில் அவன் தமக்கு மிகவும் அப்பிரியனாவான் என்று அவர்களுக்கு முன்னமே நன்கு வற்புறுத்தித், திரைக்குள்ளாகத் தமது நிஜரூபமாகிய ஆதிசேஷனது ஆயிரம் முகங்களாலும் ஆயி

# குருபரம்பரை.

ரம் சிஷ்யர்களுக்கும் ஏககாலத்தில் மஹாபாஷ்யத்தை உபதேசித்தருளினர். சிறிது காலம் இவ்வாறு சென்ற பிறகு அந்த பாஷ்யம் முடியும் சமயத்தில் ஒருநாள், இவர் ஆயிரம் பேருக்கும் ஒரே சமயத்தில் கற்றுக்கொடுக்கிறாரே, இவருக்கு எத்தனை முகம் என்பதைப் பார்க்க வேண்டும் என்று சிஷ்யர்களுக்கு ஆவல் உண்டாகி திடீரென்று திரையை விலக்கிவிட்டார்கள். அத்திரை விலகவே ஆதிசேஷனது ஆயிரம் முகங்களினின்றும் வந்த விஷத்தினால் சிஷ்யர்கள் எல்லோரும் பஸ்மமாய்விட்டார்கள். குருவின் வாக்யத்தைக் கவனியாமல் அவமதித்ததின் பலனிதுவே. இதை நோக்கி இப்படி நேர்ந்துவிட்டதேயென்று பதஞ்சலி மஹரிஷி ஆலோசித்துக்கொண்டிருக்கையில் திரைக்கு வெளியில் ஒரு சிஷ்யன் வந்து, தான் ஜலமோசனத்திற்காக வெளியில் போயிருந்ததாகவும், அச்சமயத்தில் தனது ஸஹபாடிகளான மற்ற 999-பேர்களும் திரையை விலக்கிப் பார்த்துச் சாம்பலாய் விட்டார்களென்றும், தான் செய்த குற்றத்தை மன்னித்துக் காத்தருளல் வேண்டுமென்றும் தெரிவித்தான். அதற்கு அந்த மஹரிஷி மிக்க கோபமுள்ளவராகி, தாம் உத்தரசாந்தி மந்த்ரபாடம் சொல்லிவைக்கும் முன்னர் அதைக் கவனியாமல் வெளியில் சென்றதற்காக அச்சிஷ்யனை பிரம்மராக்ஷஸனாகக்கடவாய் என்று சபித்தார். இதைக் கேட்டதும் அந்த சிஷ்யன் மறுபடியும் மிகவும் மன்றாடி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவே அம்முனிவரும் சாந்தராகி ஆதிசேஷ ரூபத்தை விட்டொழிந்து மனுஷ்ய ரூபமாகிய பதஞ்சலி ரூபத்தை அடைந்து, அவனை நோக்கி "நீ பயப்பட வேண்டாம். ஜகத்தில் கர்மத்தின் கதியைத் தடுக்க யாரால் முடியும்? அதன்படி உனக்கு இது நேர்ந்ததே

யொழிய வேறில்லை. நீ பிரம்மராக்ஷஸ்ஸாக இருந்துகொண்டே, உனக்கெதிரில் வரும் பண்டிதர்களையெல்லாம் '**பச்**' என்னும் தாதுவு (பகுதி) க்கு நிஷ்டையில் என்ன ரூபம்? என்று கேள். எவன் "**பக்வம்**" என்று சொல்லுகிறானோ அவனுக்கு மஹாபாஷ்யம் அனைத்தையும் கற்பித்துக்கொடுத்தால் நீயும் சாபத்திலிருந்து விடுதலையடைவாய்" என்று சொல்லித் தம்மிருப்பிடம் சென்றனர்.

அச்சீடனும் அதே மாதிரி பிரம்மரக்ஷஸ்ஸாக மாறி ஒரு ஆலமரத்தின் மேலேறி, அங்கு வருபவர்களையெல்லாம்



மேற்கூறிய வியாகரணக் கேள்வியைக்கேட்டும் அதற்கு "**பசிதம்**" என்று பதிலுரைப்பவர்களையெல்லாம் பக்ஷித்துக்கொண்டும் வந்தான். இங்ஙனம் வருமளவில் ஓர் நாள் அந்த ரக்ஷஸ்ஸானது அம்மரத்தடியில் வந்த ஒரு பிராமணனை அதே கேள்வியைக்கேட்க அவன் அதற்கு 'பக்வம்' என்று பதிலுரைக்கவே, தனக்கு சாபவிமோசனகாலங் கிட்டிவிட்டதாக எண்ணி மிக்க சந்தோஷத்துடன் அந்தப் பிராமணனை "நீ யார், இங்கு என்ன காரியமாய் வந்தாய். பாணினீய வியாகரணத்தில் உனக்கு ருசியிருந்தால் என்னிடமிருந்து பதஞ்சலி மஹாபாஷ்யத்தைக் கற்றுக்கொள்" என்று சொல்லவே அவனும் தன் பெயர் சந்திரகுப்தனென்றும், தான் உஜ்ஜயினியிலிருந்து மஹாபாஷ்யத்தைப் படிப்பதற்காகவே அங்கு வந்ததாகவும் கூறினான். உடனே அந்த ரக்ஷஸ்ஸும் பாஷ்யம் முழுவதையும் கற்றுக்கொடுத்தது. இவனும் அதைக் கற்றுக்

கொண்டு ஆலிலைகளைப் பொறுக்கி அவற்றில் நகங்களால் முழுவதும் எழுதிவந்தான். இவ்விதமாக அன்னபானாதிகளின்றி ஒரே பிடியாய் எழுதிவர இரண்டு மாதத்தில் பாஷ்யம் முடிந்தது. ஆதிசேஷனுடைய சிஷ்யனும் சாபம் தொலைந்தவனாய் தேவலோகத்தை யடைந்தான். சந்திரகுப்தனும் நகத்தால் பாஷ்யத்தை யெழுதிய ஆலிலைகளையெல்லாம் ஒருங்கு சேர்த்து மூட்டையாகக் கட்டித் தலைமேல் தூக்கிக் கொண்டு தன்னூரை நோக்கிச் சென்றான். வழியில் ஓர் நதியில் தெளிவாயோடிய தீர்த்தத்தைத் தாகந்தீர அருந்தி, களையால் அதன் கரையிலேயே தலையிலிருந்த மூட்டையை வைத்துவிட்டு அருகாமையில் சயனித்துறங்கிவிட்டான். இவன் அவ்விதம் மெய்மறந்து தூங்குங்கால் ஓர் ஆடு வந்து பாஷ்யம் எழுதி வைத்திருந்த ஆலிலை மூட்டையில் பல இலைகளைத் தின்றுவிட்டது. தூக்கம் கலைந்தெழுந்தவுடன் சந்திரகுப்தனும் தன் மூட்டையிலிருந்த இலைகளுக்கு நேர்ந்த கதியைப்பார்த்து மனவருத்தமுற்றவனாய் ஒன்றுந்தோன்றாமல் கீழே சிதறிக்கிடந்த இலைகளையெல்லாம் ஒருங்கு சேர்த்தான். அச்சமயத்தில் அங்கு நான்கு கன்னிகைகள், ஒவ்வொருத்தி ஒவ்வொரு வர்ணத்தைச் சேர்ந்தவளாக வருவதைக்கண்டு அவர்களுடைய ரூபலாவண்யத்தால் திகைத்தான். அந்நான்கு பேர்களும் இவன்மேலாசைகொண்டு இவனையே வரித்தார்கள். இவ்வாறு நான்கு பேரையும் மணம்புரிந்துகொண்டு தன்னுலியன்றமட்டும் மஹாபாஷ்யத்தை ஒழுங்குபடுத்தி எழுதி முடித்தான். இவனுக்கு நான்கு பத்தினிகளுள் பிராம்மணஸ்திரீயிடம் பிறந்தவன் வரருசி; க்ஷத்திரியஸ்திரீயிடம் பிறந்தவன் விக்கிரமார்க்கன்; வைசிய ஸ்திரீயிடம் பிறந்தவன் பட்டி; சூத்திரஸ்திரீயிடம் பிறந்தவன் பர்த்ரு

ஹரி. இந்நான்கு புத்திரர்களும் வயது முதிர்ந்து வியாபகர்களாகவே அவர்களுக்கு மஹாபாஷ்யத்தை முழுவதும் கற்பித்துவிட்டுச் சந்திரகுப்தன், சுகப்ரம்ஹத்தின், சிஷ்யரும், மாண்டூக்யோபநிஷத் காரிகையின் கர்த்தாவுமாகிய **கௌடபாதரிடம்** உபதேசம் பெற்று, நான்காவதாச்ரமமாகிய ஸந்யாஸத்தைக் கைப்பற்றி, அநேக தீர்த்த யாத்திரைகள் செய்து கடைசியாக இமயமலையில் பதரிகாச்ரமத்தில் ஸ்ரீமந் நாராயணன் ஸந்நிதியில் ஓர் ஆச்ரமத்திலிருந்துகொண்டு **கோவிந்தஸ்வாமி** என்று பிரஸித்தி பெற்று ஆதிசேஷனே மீண்டும் அவதரித்ததுபோல் விளங்கினர்.

இது இங்ஙனம் நிற்க, தமக்குத் தகுந்த குருவைத் தேடிச்சென்ற நமதாசார்யஸ்வாமிகள் பற்பல க்ஷேத்ரங்களுக்குச் சென்று இறுதியில் இமயமலையையடைந்து அங்குள்ள முனிசிரேஷ்டர்களால் ஓரொட்டைச்சாண் குகையில் ஸ்ரீமத் கோவிந்த தேசிகர் தவம்புரிவதை யறிந்துகொண்டு அக்குகை சேர்ந்து அதை மூன்று தரம் பிரதக்ஷிணம்செய்து அதன் வாயிலாக அஞ்ஜலிபத்தராய்ப் பின்வருமாறு கோவிந்தபகவத்பாதரைத் துதிசெய்தனர்.

पर्यङ्कतां भजति यः पतगेन्द्रकेतोः
पादाङ्गदत्वमथवा परमेश्वरस्य ।
तस्यैव मौलिधृतिसार्णवशैलभूमेः
शेषस्य विग्रहविशेषमहं भजे त्वाम् ॥

പര്യങ്കതാം ഭജതി യഃ പതഗേന്ദ്രകേതോഃ
പാദാങ്ഗദത്വമഥവാ പരമേശ്വരസ്യ ।
തസ്യൈവ മൗലിധൃതിസാര്ണ്ണവശൈലഭൂമേഃ
ശേഷസ്യ വിഗ്രഹവിശേഷമഹം ഭജേ ത്വാം ॥

# குருபரம்பரை.

"மஹாவிஷ்ணுவுக்குப் படுக்கையாகவும், மஹேசுவரனுக்குச் சரண பூஷணமாகவும், பூமி, மலை, ஸமுத்திரம் முதலியயாவையும் தலையில் வகித்தவனும் உள்ள ஆதிசேஷனுடைய விசேஷ அவதாரமாகிய தங்களை நான் பஜிக்கிறேன்."

दृष्ट्वा पुनर्निजसहस्रमुखीमभैषुरन्तेवसन्त इति तामपहाय भूयः ।
एकाननेन भुवि यस्त्ववतीर्य शिष्यानन्वग्रहीन्ननु स एव पतञ्जलिस्त्वम् ॥

த்ருஷ்ட்வா புநர்நிஜஸஹஸ்ரமுகீமபைஷு-
ரந்தேவஸந்த இதி தாமபஹாய பூய: ।
ஏகாநநேந புவி யஸ்த்வவதீர்ய ஶிஷ்யா
நந்வக்ரஹீந்நநு ஸ ஏவ பதஞ்ஜலிஸ்த்வம் ॥

"முற்காலத்தில் ஆயிரம் தலைகளுடன் ஸ்வரூபத்திலிருந்தபொழுது சிஷ்யர்களெல்லோரும் பயந்தார்களென்பதற்காக அவ்வளவு தலைகளையும் விட்டொழித்து ஒரு முகத்துடனவதரித்து சிஷ்யர்களை அனுக்கிரஹித்த பதஞ்சலிபகவானல்லவா தாங்கள்."

இவ்விதமாகத் தம்மை இன்னொன்று உண்மையாய் அறிந்து இவர் சொல்வதைக் கேட்டதும், ஸ்ரீகோவிந்தபகவத்பாதர் ஸமாதி கலைந்து இவரை 'நீர் யார்' என்று வினவினார்.

இக்கேள்விக்குத்தான் ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் அத்புதக்கிருஷ்டமான "தசசுலோகீ" என்று சொல்லப்படும் பத்து சுலோகங்களால் விடையளித்தனர். இதே பத்து சுலோகங்களைத்தான் "நிர்வாணதசக" மென்றும் "ஸித்தாந்த பிந்து" வென்றும் சொல்லுவார்கள். இவைகளின் பெருமையையும், அர்த்த புஷ்டியையும், சொற்சுவையையும், தாத்பர்யத்

தின் சாம்பீர்யத்தையும் எடுத்துரைப்பதானால் இரண்டாயிரம் நாபடைத்த ஆதிசேஷனாலும் முடியாது. ஸகல வேதங்களினாலும், உபநிடதங்களினாலும், ப்ரஹ்மஸூத்ரத்தினாலும் மனோவாக்குக்கெட்டாத எந்த வஸ்துவின் தத்வம் சொல்லப்படுகிறதோ அதே தத்வத்தை இந்தப் பத்து சுலோகங்களுள் அடக்கியிருக்கின்றார். இவ்வரிய நூலுக்கு நிகராக வேறொன்றையுங் கூறுவது ஒவ்வாது. இதைக்கேட்டதும் ஸாக்ஷாத் கோவிந்தபகவத்பாதரே தயங்கி நின்றார் என்றால், அதன் மஹிமையை விளக்கவும் வேண்டுமோ!



# 3.

# தசசுலோகீ.

ஸ்ரீமத் சங்கராசாரியஸ்வாமிகளருளிச்செய்த தசசுலோகியின் பெருமையோ பெருமை. அதனை முற்றுமெடுத்துரைக்க யாரால் முடியும்? வெகு காலம் தவம்புரிந்து, உலகத்தை மறந்து, ஸாதன சதுஷ்டயத்தையுமடைந்து, ஆத்ம தத்வத்தை அனுபவித்துக் கேவலம் ப்ரஹ்ம நிஷ்டர்களாய் விளங்கும் ஞானிகள் மட்டுமே இதனது மஹிமையை அறியக்கூடும். இதற்கு விசேஷமான வியாக்கியானம் செய்திருக்கும் மஹானான மதுஸூதன ஸரஸ்வதி கூட முடிவில் நமதாசார்ய ஸ்வாமிகளின் ஸாமர்த்தியத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்.

न स्तौमि तं व्यासमशेषमर्थं समग्रसूत्रैरपि यो बबन्ध ।
विनापि तैस्सङ्ग्रथिताखिलार्थं तं शङ्करं नौमि सुरेश्वरं च ॥

# தசசுலோகீ.

நமாமி தம் வ்யாஸமஶேஷயோகம்
ஸூத்ரைஸ்ஸமஸ்தைரபி யோ பபந்த |
விநாபி ஸூத்ரைஸ்ஸகலம் ததர்த்தம்
தம் ஶங்கரம் நௌமி ஸுரேஶ்வரம் ச ||

"யாதொரு வேதவியாஸமுனியானவர் ஸமஸ்தமான ஸூத்திரங்களாலும் பரமார்த்த தத்வத்தை விளக்கமுடியாதவரானாரோ அவரைத் துதிசெய்கிறேன். ஒருவித ஸூத்திரங்களுமன்றியே ஸமஸ்த அர்த்தத்தையும் நன்கு உணர்த்தினவரான ஸ்ரீசங்கரரையும் அவரது சிஷ்யராகிய ஸுரேசுவரரையும் கூட நமஸ்காரம் பண்ணுகிறேன்." இந்த சுலோகத்தில் 'ஸூத்ர' என்னும் பதத்திற்குக் 'கயிறு' என்னும் சிலேடையர்த்தமுண்டு. தாத்பரியம் யாதெனில் அநேக கயிறுகளைக்கொண்டு கூட பரமார்த்த தத்வத்தை வேதவியாஸரால் சுருக்கிக் கட்ட முடியவில்லை. ஸ்ரீசங்கரரோவெனில் ஒருவித கயிறுமின்றி ஆத்ம தத்வத்தை நன்கு கட்டிவிட்டார் என்பதாம். இதனால் ஸ்ரீசங்கரரின் அபார ஸாமர்த்தியம் நன்றாக விளங்குகிறது காண்க.

இத்தகைய பெரியோர்களெல்லாம் கண்டு தியங்குமிடத்தில் நாம் செல்வது மிகத் துணிபாதலால் இங்கு சுலோகங்களைப் பதிப்பிப்பதோடு ஒழிவோம். இந்த கிரந்தமானது சிறிதாகவிருந்த போதிலும் வெகு அர்த்தத்தை அடக்கிக் கொண்டு சிந்தாமணிபோல் விளங்குகின்றது. ஈசுவர கிருபை இருந்தால் பின்னர் ஒருக்கால் இதன் ஒவ்வொரு சுலோகங்களையும் தனித்தனியே எடுத்து அவைகளின் தாத்பரியத்தையும் நமது சிற்றறிவிற்குப் புலப்பட்ட வரையில் கொஞ்சம் கொஞ்சமாக வெளியிடுவோம்.

# ॥ दशश्लोकी ॥

न भूमिर्न तोयं न तेजो न वायुः
न खं नेन्द्रियं वा न तेषां समूहः ।
अनेकान्तिकत्वात्सुषुप्त्येकसिद्ध-
स्तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम ॥ १ ॥

न वर्णा न वर्णाश्रमाचारधर्मा
न मे धारणाध्यानयोगादयोऽपि ।
अनात्माश्रयाहं ममाध्यासहाना-
त्तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ २ ॥

न माता पिता वा न देवा न लोका
न वेदा न यज्ञा न तीर्थं ब्रुवन्ति ।
सुषुप्तौ निरस्तातिशून्यात्मकत्वा-
त्तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ ३ ॥

न साङ्ख्यं न शैवं न तत्पाञ्चरात्रं
न जैनं न मीमांसकादेर्मतं वा ।
विशिष्टानुभूत्या विशुद्धात्मकत्वा-
त्तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ ४ ॥

न चोर्ध्वं न चाधो न चान्तर्न बाह्यं
न मध्यं न तिर्यङ् न पूर्वापरा दिक् ।

वियद्व्यापकत्वादखण्डैकरूप-
स्तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ ५ ॥

न शुक्लं न कृष्णं न रक्तं न पीतं
न कुब्जं न पीनं न ह्रस्वं न दीर्घम् ।
अरूपं तथा ज्योतिराकारकत्वा-
त्तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ ६ ॥

न शास्ता न शास्त्रं न शिष्यो न शिक्षा
न च त्वं न चाहं न चायं प्रपञ्चः ।
स्वरूपावबोधो विकल्पासहिष्णु-
स्तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ ७ ॥

न जाग्रन्न मे स्वप्नको वा सुषुप्ति-
र्न विश्वो न वा तैजसः प्राज्ञको वा ।
अविद्यात्मकत्वात्त्रयाणां तुरीय-
स्तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ ८ ॥

अपि व्यापकत्वाद्धि तत्वप्रयोगा-
त्स्वतस्सिद्धभावादनन्याश्रयत्वात् ।
जगत्तुच्छमेतत्समस्तं तदन्य-
त्तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ ९ ॥

न चैकं तदन्यद्द्वितीयं कुतस्स्या-
न्न वा केवलत्वं न चाकेवलत्वम् ।
न शून्यं न चाशून्यमद्वैतकत्वा-
त्कथं सर्ववेदान्तसिद्धं ब्रवीमि ॥ १० ॥

# தசச்லோகீ.

॥ தஶஶ்லோகீ ॥

ந பூமிர்ந தோயம் ந தேஜோ ந வாயு:
ந கம் நேந்த்ரியம் வா ந தேஷாம் ஸமூஹ: ।
அநைகாந்திகத்வாத் ஸுஷுப்த்யேகஸித்த:
ததேகோऽவஶிஷ்ட: ஶிவ: கேவலோऽஹம் ॥ ௧ ॥

ந வர்ணா ந வர்ணாஶ்ரமாசாரதர்மா
ந மே தாரணாத்யாநயோகாதயோऽபி ।
அநாத்மாஶ்ரயாஹம் மமாத்யாஸஹாநாத்
ததேகோऽவஶிஷ்ட: ஶிவ: கேவலோऽஹம் ॥ ௨ ॥

ந மாதா பிதா வா ந தேவா ந லோகா
ந வேதா ந யஜ்ஞா ந தீர்த்தம் ப்ருவந்தி ।
ஸுஷுப்தௌ நிரஸ்தாதிஶூந்யாத்மகத்வாத்
ததேகோऽவஶிஷ்ட: ஶிவ: கேவலோऽஹம் ॥ ௩ ॥

ந ஸாம்க்யம் ந ஶைவம் ந தத்பாஞ்சராத்ரம்
ந ஜைநம் ந மீமாம்ஸகாதேர்மதம் வா ।
விஶிஷ்டாநுபூத்யா விஶுத்தாத்மகத்வாத்
ததேகோऽவஶிஷ்ட: ஶிவ: கேவலோऽஹம் ॥ ௪ ॥

ந சோர்த்வம் ந சாதோ ந சாந்தர் ந பாஹ்யம்
ந மத்யம் ந திர்யங் ந பூர்வாபரா திக் ।
வியத்வ்யாபகத்வாதகண்டைகரூப:
ததேகோऽவஶிஷ்ட: ஶிவ: கேவலோऽஹம் ॥ ௫ ॥

ந ஶுக்லம் ந க்ருஷ்ணம் ந ரக்தம் ந பீதம்
ந குப்ஜம் ந பீநம் ந ஹ்ரஸ்வம் ந தீர்க்கம் ।



D

அரூபம் ததா ஜ்யோதிராகாரகத்வா-
த்ததேகோऽவசிஷ்ட: சிவ: கேவலோऽஹம் ॥ ௬ ॥

ந சாஸ்தா ந சாஸ்த்ரம் ந சிஷ்யோ ந சிக்ஷா
ந ச த்வம் ந சாஹம் ந சாயம் ப்ரபஞ்ச: ।
ஸ்வரூபாவபோதோ விகல்பாஸஹிஷ்ணு-
ஸ்ததேகோऽவசிஷ்ட: சிவ: கேவலோऽஹம் ॥ ௭ ॥

ந ஜாக்ரந்ந மே ஸ்வப்நகோ வா ஸுஷுப்தி-
ர்ந விச்வோ ந வா தைஜஸ: ப்ராஜ்ஞகோ வா ।
அவித்யாத்மகத்வாத்த்ரயாணாம் துரீய-
ஸ்ததேகோऽவசிஷ்ட: சிவ: கேவலோऽஹம் ॥ ௮ ॥

அபி வ்யாபகத்வாத்தி தத்வப்ரயோகாத்
ஸ்வத:ஸித்தபாவாதநந்யாச்ரயத்வாத் ।
ஜகத்துச்சமேதத்ஸமஸ்தம் ததந்ய-
த்ததேகோऽவசிஷ்ட: சிவ: கேவலோऽஹம் ॥ ௯ ॥

ந சைகம் ததந்யத்த்விதீயம் குத: ஸ்யா-
ந்ந வா கேவலத்வம் ந வாऽகேவலத்வம் ।
ந சூந்யம் ந சாசூந்யமத்வைதகத்வா-
த்கதம் ஸர்வவேதாந்தஸித்தம் ப்ரவீமி ॥ ௰ ॥

## 4.

## பத்மபாதர் சிஷ்யரானது.

இவ்விதமாக ஸமஸ்தலோகத்திலுமுள்ள எல்லாப் பிராணிகளுடைய புண்யவசத்தாலும் தமது வாயிலாக எல்லாவற்றிற்கும் மேம்பட்டதான ஆத்மஞானுபவத்திற்குப் பளிங்குபோல் வழி காட்டக்கூடிய நிர்வாணதசகமாகிய, அமிருதமயமான வாக்கை வெளியிட்டதைக் கேட்டதும் ஸாக்ஷாத் கோவிந்தபகவத்பாதர் ஒன்றும் தோன்றாமல் திகைத்தவராய், ஆனந்த பரவசராய், அத்வைத ஸாகரத்தில் மூழ்கினவராய், உலகத்தையே முற்றும் மறந்தவராய், ப்ரஹ்மத்தினிடத்தில் லயித்தவராய், ஸமாதியிற் சிறிது காலமிருந்து பிறகு தெய்வ வசத்தால் தியானம் கலைந்து ஸ்ரீசங்கரரை நோக்கி "**ஸ்வாமி!** தங்களை யான் ஞானக்கண்ணால் நன்று கண்டுகொண்டேன். மும்மூர்த்திகளுளொருவரான ஈசுவரனே நேரில் அவதரித்துத் தங்கள் வடிவமாக உலகானுக்கிரஹத்திற்காக இப்படித் தோன்றியிருப்பது எனக்கு நன்றாகத் தெரியும். பிரத்யக்ஷானுபவத்தாலுணரவேண்டிய இந்த சுலோகங்களைத் திருவாய் மலர்ந்தருளிய தங்களுக்குக் கூடவா இன்னொருவருபதேசம். இருந்தபோதிலும் உலக மரியாதைக்காகத் தாங்களிவ்வித மபேக்ஷிப்பது உசிதமே" என்று கூறித் தமது சரணங்களை

அக்குகையின் வாயில் வழியாகக் காண்பித்தார். அவைகளைக் கண்டதும், உலகத்தில் யதிகளுக்கெல்லாம் குருவின் சரணங்களைப் பூஜை செய்யவேண்டியதுதான் நேரான ஒழுக்கம் என்பதைப் புலப்படுத்துவதற்காகவே, ஸ்ரீசங்கரரும் வெகு பரபரப்புடன் அந்தப் பாத பத்மங்களைப் பூஜித்துப் பின்னும் பலவித உபசாரங்களால் தமது குருவை ஸந்தோஷிப்பித்தனர். ப்ரீதியடைந்த மனத்தினையுடையவராக ஸ்ரீகோவிந்த பகவத்பாதரும் நமதாசார்ய ஸ்வாமிகளுக்குப் ப்ரஹ்மதத்வத்தை உபதேசித்தருளினார்.

இவ்வாறாக ஸ்ரீகோவிந்த தேசிகரிடம் கிரம ஸந்யாஸம் பெற்றுக்கொண்டு சிறிதுகாலம் அவருக்குப் பரிசரணைகள் செய்துவிட்டு வேதவியாஸமா முனியியற்றிய ப்ரஹ்ம ஸூத்திரத்திற்கு பாஷ்யம் செய்யும்படி அவர் அனுக்ரஹிக்க அவரிடம் விடைபெற்றுக் காசிமா நகருக்குச் சென்றார் பரமஹம்ஸரான ஸ்ரீசங்கரபகவத்பாதர். பரமஹம்ஸர் என்னும் சொல் இம்மஹானுக்கே தகும். ஸம்ஸாரமாகிற நீருடன் ப்ரஹ்மமாகிற பால் கலந்து வெகு காலமாக ஒன்றாகிக் கலங்கிப்பிரிக்கக் கூடாமலிருந்த ஸமயத்தில் ஒரு கணப்பொழுதில் அதி ஸுலபமாய் எல்லோரும் எளிதிலுணரும்படி மிகவும் சுத்தமாக அந்தப்பாலைப் பிரித்து எடுத்துவிட்டதல்லவா இந்தப் பரமஹம்ஸம். 'நான்' (அஹம்) என்னும் பதத்திற்குப் பொருள் யாது? அச்சொல்லால் எந்த வஸ்து குறிக்கப்படுகின்றது? அது தேகத்தைக் குறிக்கிறதா, பிராணனைக் குறிக்கிறதா, மனதைக் குறிக்கிறதா, புத்தியைக் குறிக்கிறதா, ஆனந்தத்தைக் குறிக்கிறதா, என்று இவ்வாறு பலவாறாக ஸந்தேகங்களுண்டாய், ஒவ்வொருவரும் அவரவர்களுக்குத் தோன்றினவாறு பேதற்றிய

காலத்தில் அவர்களையெல்லாம் நிராகரித்து 'நான்' (அஹம்) என்னும் பதத்தால் குறிக்கப்படும் பொருள் (ஸ:) அந்தப் பரமாத்மாவே என்று நன்றாக வற்புறுத்தியவரல்லவா இச் சிறந்த ஹம்ஸர். (ஸம்ஸ்கிருதத்தில் ஹம்ஸ: என்னும் சொல் "அஹம்" "ஸ:" என்னும் இரண்டு பதங்களின் திரிபு). இவருடைய கீர்த்தி எங்கே பார்த்தாலும் பரவியது. பல திக்குக்களிலிருந்தும் அனேகர் வந்து வணங்கி இவரிடம் சிஷ்யராகத் தலைப்பட்டனர்.

இச்சமயத்தில் சோழமண்டலத்தில் அநேக தேவாலயங்களால் இருகரைகளும் அலங்கரிக்கப்பெற்று நீர்வளம், நிலவளம் முதலிய பல குணங்களுக்கும் ஆதாரமாய், ஸஹ்ய பர்வதத்திலுற்பத்தியாய், காவேரி எனப்பெயர் கொண்ட மஹாநதியின் கரையில், சுருதி, ஸ்மிருதி, புராண, இதிஹாஸம் முதலியவைகளில் நன்கு பயின்ற பிராமணர்கள் பலர் குடியேறிய ஓர் அக்கிரஹாரத்தில் ஒரு பிராமணருக்கு அருந்தவப்பயனாய் அவதரித்தது ஒரு குழந்தை. அவரும் அம் மகவுக்கு ஸநந்தனன் என்று பெயரிட்டார். அக்குழந்தையும் தனது பிதாவினிடம் ஒவ்வொரு ஸம்ஸ்காரங்களையும் அடைந்து, மறை முறை மாறாது உபநயனமும் செய்யப் பெற்று வாலிபத்திற்றானே ஸமஸ்த வித்யைகளிலும் பயின்று தேர்ந்தது. பிறகு அவரது யௌவனத்தில் அவரை விவாகம் செய்துகொள்ளும்படி பலர் விரும்ப அவர் அதிவிஷ்டமில்லாதவராய் இச்சம்சாரக் கடலைக்கடக்கப் பெருங் கருவியான ஆத்ம வித்யையின் தன்மையறிய ஆவலுற்று அவ்வுண்மையை உபதேசிக்க வல்லவரான ஆசிரியமணிகளைத்தேடி, பல க்ஷேத்திரங்களையும் நாடித் தம் மனத்திற் கிசைந்த ஆசிரியன் கிடைக்காது வருத்தமுற்று, இறுதியில்

## பத்மபாதர் சிஷ்யரானது.

ஸ்ரீ கங்காநதியின் கரையிலுள்ள காசிமாநகரம் சேர்ந்து, சுகமுனியின் திருவுருவங்களோவென மயங்கத்தக்க புல ஸந் யாஸிகள் அங்கு அத்வைத விசாரம் செய்வதைக் கண் ணுற்று, இதற்குக் காரணம் யாதென்று வினவ, அவர்களும் தென்னாட்டில் பிறந்து, இந்நாட்டாரை ஆட்கொள்ள அத் வைதவித்யையே உருவமெடுத்ததெனச் சொல்லத்தக்க எமது தவப்பயன், ஸ்ரீமத் சங்கரபகவத்பாதரென்னும் திரு நாமம் வகித்து ஓர் துறவி மன்னவர் இவ்விடமிருப்பதே யென விடை பகர, அதைக்கேட்டு ஆனந்தமடைந்து ஸ்ரீசங் கரரது ஸந்நிதானத்திற்சென்று அவரது திருவடித்தாமரை களைத் தமது சிரமேற்கொண்டு தமக்கு அத்வைதஸித்தாந் தத்தை யுபதேசித்துத் தம்மை தன்யனுக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தனர். இவ்வாறு தமது அடியில் சரணுகதி செய்த அச்சிஷனை எடுத்தணைந்து அவரது வரலாற்றைக் கேட்டு மனமகிழ்ந்து, வைராக்கியத்தைப் புகழ்ந்து, ஸம் ஸாரத்தை யிகழ்ந்து, அவருக்குச் சந்யாஸத்தைக் கிரமமாக ஈந்தருளினர். இது முதல் இவரே நமது ஸ்வாமிகளுக்கு முக்கிய சீடர்களுள் முதல்வரென வழங்குவது. மற்றைய சிஷ்யர்களைக் காட்டிலும் இவரிடத்தில் குருவுக்கு அதிகப் பிரீதியுண்டு. இப்பேரன்பைக் கண்டு அவர்களுக்கெல்லாம் இவரிடத்தில் பொறாமை வரவர அதிகரித்தது. இதை உண ர்ந்த ஆசார்யஸ்வாமிகளும் மற்றவர்களுக்கு இவரது குரு பக்தியை முற்றிலும் விளக்கக் கருதி, ஒருக்கால் கங்கையில் பூரணமாய் பிரவாஹம் பெருகிவரும் ஸமயத்தில் அதன் ஓர் கரையில் நின்று, மற்றொரு கரையிலிருந்த ஸநந்தனரை உடனே வாவென்றழைக்க அச்சிஷ்யமணியும், ஸம்ஸார மென்னும் ஓர் பெருங்கடலினின்றும் கரையேற்றும் வலிமை

## பத்மபாதர் சிஷ்யரானது.

பெற்ற நமதாசாரியரடிமலர்கள் நம்மை இவ்வாற்றின் கரையேற்றத் தடையென்ன? என நம்பி அவ்வாற்றிலிறங்கி விரைவாய் நடந்துவர, அம்மஹாநதியின் நடுவில் இவர் அடி-வைக்குமிடங்களிலெல்லாம் ஒவ்வொரு தாமரைப்புஷ்பங்கள் மிகவும் ஆச்சரியமாய் உண்டாய் இவரது திருவடிகளைத் தாங்கின. இவ்விதமான அற்புதத்துடனிக்கரை சேர்ந்ததும் ஆசார்ய **ஸ்வாமிகளின்** பாதபத்மங்களைப் பணிந்து நின்ற அவரை **ஸ்வாமிகளும்** அணைத்தகமகிழ்ந்து "தாமரைமலரின் தலையிலடிவைத்தவனை உனக்கு நாம் **பத்மபாதரென** யோக்கியதா நாமமளித்தோம்" என, உகந்தருள, அன்று முதல் அவருக்குப் பத்மபாதரெனக் காரணப்பெயர் வழங்கியது. இவ்வாச்சரியத்தைக்கண்ட மற்ற சிஷ்யர்களும் இவர் மீது பொறாமை விட்டொழிந்தனர்.



## 5.

## வியாஸதர்சனம்.

இவ்வாருக அநேக சிஷ்யர்களின் நடுவில் வாராணஸீ க்ஷேத்திரத்தில் ஸ்ரீசங்கராசார்யர் பரப்ரஹ்மஸ்வரூபமாக விளங்கிவரும் தருணத்தில் ஒரு நாள் நமது ஸ்வாமிகள் ஸ்நானத்திற்காக மணிகர்ணிகா கட்டத்திற்குப் போகுமளவில் எதிரில் ஓர் சண்டாளன் நான்கு நாய்களுடன் வருவதைக்கண்டு சிஷ்யர்கள் அவனைத் தூர விலகும்படி கூவினார்கள். அதைக்கேட்டதும் அந்தச் சண்டாளன் சொன்னதாவது "அத்வைதத்தைக உபதேசிக்கும் ஆசார்யசிகாமணியே! தாங்கள் உபதேசிப்பதுமட்டுந்தான் அத்வைதம்போலிருக்கிறது. அனுஷ்டானத்தில் அத்வைதமில்லை போலும். அன்னமயத்திலிருந்து அன்னமயத்தையே அல்லது சைதன்யமயத்திலிருந்து சைதன்யமயத்தையே தூரத்தில் பிரிக்கிறதற்கு விரும்புகிறீர்களோ. கங்கா ஜலத்தில் தோன்றும் சூரியனுக்கும் குட்டத்துக்கள்ளில் தோன்றும் சூரியனுக்கும் ஏதாவது பேதமுண்டா. கங்கப் பாத்திரத்தின் உள்ளிருக்கும் ஆகாசத்திற்கும், மட்பாண்டக்

தின் உள்ளிருக்கும் ஆகாசத்திற்கும் ஏதாவது பேதமுண்டா? அப்படியிருக்கத் தங்களுக்கேன் இவ்வாறான பேதம் தோற்றியது.

'நான் பிராம்மணன், மிகவும் பரிசுத்தன். நீ பறையன் தூரத்திலோடிப்போ' என்னும் தப்பான எண்ணம் தங்களுக்கு யாது காரணம் பற்றிக்கிட்டியது. எல்லாச் சரீரங்களுக்குள்ளும், அசரீரியானதும், ஒன்றானதும், பூர்ணமானதும், அநாதியானதுமான வஸ்து ஒன்று இருக்கவில்லையா. இதென்ன ஆச்சரியம்! தங்களைப்போலொத்த மஹான்கள் கூட ஸர்வேசுவரனுடைய மாயவலையிற் சிக்குகிறீர்களே" என்றான். இதைச் செவியுற்றதும் ஆசார்ய ஸ்வாமிகளுக்கு ஆனந்தம் மேலிட்டு **மனீஷாபஞ்சகம்** என்று சொல்லப்படும் பின்வரையப்பட்டுள்ள ஐந்து சுலோகங்களால் "பிராமணராயிருந்தாலும் ஸரி அல்லது நாய் மாம்ஸத்தைப் புசிக்கும் பறையனாயிருந்தாலும் ஸரி, எவனொருவன் சிறிதேனும் பேதஞானமின்றி உறுதியான புத்தியுடன் ப்ரஹ்மமே ஸத்யம் மற்றவையெல்லாம் பொய்யென உணருகின்றானோ அவனே எனக்குப் பூஜ்யனான குருவாகிறான்" என்று அந்தச் சண்டாளனுக்கு விடையளித்தார்.

# ॥ मनीषापञ्चकम् ॥

जाग्रत्स्वप्नसुषुप्तिषु स्फुटतरा या संविदुज्जृंभते
या ब्रह्मादिपिपीलिकान्ततनुषु प्रोता जगत्साक्षिणी ।
सैवाहं न च दृश्यवस्त्विति दृढप्रज्ञापि यस्यास्तिचे-
च्चाण्डालोऽस्तु स तु द्विजोऽस्तु गुरुरित्येषा मनीषा मम ॥



E

ब्रह्मैवाहमिदं जगच्च सकलं चिन्मात्रविस्तारितम्
सर्वं चैतदविद्यया त्रिगुणया शेषं मया कल्पितं ।
इत्थं यस्य दृढा मतिः सुखतरे नित्ये परे निर्मले
चाण्डालोऽस्तु स तु द्विजोऽस्तु गुरुरित्येषा मनीषा मम ॥२॥

शश्वन्नश्वरमेवविश्वमखिलं निश्चित्य वाचा गुरोः
नित्यं ब्रह्म निरन्तरं विमृशता निर्व्याजशांतात्मना ।
भूतं भावि च दुष्कृतं प्रदहता संविन्मये पावके
प्रारब्धाय समर्पितं स्ववपुरित्येषा मनीषा मम ॥ ३ ॥

या तिर्यङ्नरदेवताभिरहमित्यन्तः स्फुटा गृह्यते
यद्भासाहृदयाक्षदेहविषया भान्ति स्वतोऽचेतनाः ।
तां भास्यैः पिहितार्कमण्डलनिभां स्फूर्तिं सदा भावय-
न्योगी निर्वृतमानसो हि गुरुरित्येषा मनीषा मम ॥ ४ ॥

यत्सौख्यांबुधिलेशलेशत इमे शक्रादयो निर्वृताः
यश्चित्ते नितरां प्रशान्तकलने लब्ध्वा मुनिर्निर्वृतः ।
यस्मिन्नित्यसुखांबुधौ गलितधीर्ब्रह्मैव न ब्रह्मवि-
द्यः कश्चित्स सुरेन्द्रवन्दितपदो नूनं मनीषा मम ॥ ५ ॥

|| 𑌇𑌤𑌿 𑌮𑌨𑍀𑌷𑌾𑌪𑌞𑍍𑌚𑌕𑌮𑍍 ||

𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑍍𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌸𑍁𑌷𑍁𑌪𑍍𑌤𑌿𑌷𑍁 𑌸𑍍𑌫𑍁𑌟𑌤𑌰𑌾 𑌯𑌾 𑌸𑌂𑌵𑌿-
𑌦𑍁𑌜𑍍𑌜𑍃𑌮𑍍𑌭𑌤𑍇
𑌯𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌪𑌿𑌪𑍀𑌲𑌿𑌕𑌾𑌨𑍍𑌤𑌤𑌨𑍁𑌷𑍁 𑌪𑍍𑌰𑍋𑌤𑌾
𑌜𑌗𑌤𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑍀 ।

# வியாஸதர்சனம்.

𑌸𑍈𑌵𑌾𑌹𑌂 𑌨 𑌚 𑌦𑍃𑌶𑍍𑌯𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌤𑌿 𑌦𑍃𑌢𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌪𑌿
𑌯𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌿 𑌚𑍇-
𑌚𑍍𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌸 𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌗𑍁𑌰𑍁-
𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌷𑌾 𑌮𑌨𑍀𑌷𑌾 𑌮𑌮 ॥ ௧ ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌾𑌹𑌮𑌿𑌦𑌂 𑌜𑌗𑌚𑍍𑌚 𑌸𑌕𑌲𑌂 𑌚𑌿𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌾-
𑌰𑌿𑌤𑌂
𑌸𑌰𑍍𑌵𑌂 𑌚𑍈𑌤𑌦𑌵𑌿𑌦𑍍𑌯𑌯𑌾 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌯𑌾 𑌶𑍇𑌷𑌂
𑌮𑌯𑌾 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌮𑍍 ।
𑌇𑌤𑍍𑌥𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌦𑍃𑌢𑌾 𑌮𑌤𑌿𑌃 𑌸𑍁𑌖𑌤𑌰𑍇 𑌨𑌿𑌤𑍍𑌯𑍇
𑌪𑌰𑍇 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑍇
𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌸 𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌗𑍁𑌰𑍁-
𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌷𑌾 𑌮𑌨𑍀𑌷𑌾 𑌮𑌮 ॥ ௨ ॥

𑌶𑌶𑍍𑌵𑌨𑍍𑌨𑌶𑍍𑌵𑌰𑌮𑍇𑌵𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌖𑌿𑌲𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯 𑌵𑌾𑌚𑌾 𑌗𑍁-
𑌰𑍋𑌃
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑌿𑌰𑌨𑍍𑌤𑌰𑌂 𑌵𑌿𑌮𑍃𑌶𑌤𑌾 𑌨𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌜-
𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌭𑍂𑌤𑌂 𑌭𑌾𑌵𑌿 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌂 𑌪𑍍𑌰𑌦𑌹𑌤𑌾 𑌸𑌂𑌵𑌿𑌨𑍍𑌮-
𑌯𑍇 𑌪𑌾𑌵𑌕𑍇
𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌾𑌯 𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌂 𑌸𑍍𑌵𑌵𑌪𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑍇𑌷𑌾
𑌮𑌨𑍀𑌷𑌾 𑌮𑌮 ॥ ௩ ॥

𑌯𑌾 𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌨𑌰𑌦𑍇𑌵𑌤𑌾𑌭𑌿𑌰𑌹𑌮𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌃 𑌸𑍍𑌫𑍁𑌟𑌾
𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇
𑌯𑌦𑍍𑌭𑌾𑌸𑌾 𑌹𑍃𑌦𑌯𑌾𑌕𑍍𑌷𑌦𑍇𑌹𑌵𑌿𑌷𑌯𑌾 𑌭𑌾𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑌤𑍋
𑌽𑌚𑍇𑌤𑌨𑌾𑌃 ।

[illegible] || ௪ ||

[illegible] || ௫ ||

பின்பு அவனை நோக்குங்கால் அவ்விடத்தில் சண்டாளனையும் காணோம். அவனுடைய நாய்களையும் காணோம். அவர்களுக்குப் பதிலாக ஸாக்ஷாத் விசுவேசுவரரும் நான்கு வேதங்களும் பிரத்யக்ஷமாய் வந்திருந்தார்கள். இக்காட்சியைக் கண்டதும் ஸ்ரீசங்கரர் மிக வியந்து ஈசுவரனைப் பலவாறாகத் துதிசெய்தனர். அவரும் ஸந்தோஷமடைந்தவராய் பாதராயண ஸூத்திரத்திற்கு பாஷ்யம்செய்து அத்வைத மதத்தை ஜகத்தில் பரவும்படி செய்ய இவருக்கு அனுக்கிரஹித்து அந்தர்த்தானமாயினர்.

சிறிது காலத்திற்குள், பாஷ்யம் இயற்றக்கூடிய இத்தகைய வலிமைபெற்ற நமதாசார்யஸ்வாமிகளும், ஸஹஸ்ர நாம பாஷ்யம், உபநிஷத் பாஷ்யங்கள், கீதா பாஷ்யம், ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யம், முதலிய மிக உத்கிருஷ்டமானவும் நிகரில்லாதவுமான அநேக பாஷ்யங்களைச் செய்து முடித்தனர்.

# வியாஸதர்சனம்.

இந்த பாஷ்யங்களை வாசிப்பவர்களுக்கு மட்டுமே இவைகளது பெருமை நன்றாக விளங்கும். இவைகளிலிருந்தே ஆசாரியரின் புத்திவலிமையை நன்கு ஊகிக்கலாம். வேறெவ்வித அத்புத காரியங்களையும் இவர் செய்யாமலிருந்திருந்தாலும் கூட, இந்த பாஷ்யங்களை இயற்றின அத்புதமொன்றே இவரை யாவர்க்கும் மேம்பட்ட மஹானென்றும், அவதார புருஷரென்றும் கூறுவதற்குப் போதுமான ஆதாரமாகும். வேறொரு ஸாதாரண மனுஷ்யனால் இத்தகைய பாஷ்யங்களியற்றுதலென்பது ஒருக்காலும் நடவாத காரியமென்பது திண்ணம். நமது நாட்டில் மட்டுமல்ல, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய பிற நாடுகளில்கூட இந்த பாஷ்யங்களைப் பார்த்து இவரது புத்தி கௌசலத்தைப் புகழாதவர்களில்லை.

இவ்வுயர்ந்த பாஷ்யங்களை யியற்றியபிறகு ஒரு ஸமயம் கங்கா நதீ தீரத்தில் சிஷ்யர்களுக்கு ஸூத்ரபாஷ்ய பாடம் சொல்லிவைத்துக்கொண்டிருக்குமளவில் ஆசார்யஸ்வாமிகளிடம், ஸூத்ரங்களையே செய்த ஸாக்ஷாத் வேதவியாஸ பகவான், ஒரு கிழப்பிராமணர் வேஷம் பூண்டு நெருங்கி, இவரை "நீர் யார், என்ன பாடம் சொல்லிவைக்கிறீர்" என்று வினவினர். இதற்குச் சிஷ்யர்கள் இவர் இன்னாரென்றும் இவர் சொல்லிவைக்கும் பாடம் இன்னதென்றும் மறுமொழியளிக்கவே ஸூத்ர பாஷ்யத்தில் ஆசார்யஸ்வாமிகளைப் பல கேள்விகள் கேட்கவாரம்பித்தார். அவைகளுக்கெல்லாம் இவர் பிரத்யுத்தரம் சொல்ல அவர் மீண்டும் ஆக்ஷேபிக்க, இவ்வாறு மஹத்தான தர்க்கம் ஒருவருக்கொருவருண்டாய் வெகு காலமாயும் ஒருவராவது ஒழிவதாக இல்லாததையறிந்து, சிஷ்யர்களுள் முதன்மையரான பத்மபாதர் அவ்விருவர்க்குமுடைய நிஜரூபத்தை அறிந்தவராத

லால் அவர்களை அணுகி "ஈசுவராவதாரமாகிய ஸ்ரீசங்கராருக்கும், ஸ்ரீமந் நாராயணனவதாரமாகிய வியாஸ பகவானுக்கும் இவ்வாறு விவாதம் பெருகினால் தாஸனாகிய யான் என் செய்வேன்" எனத் தெரிவித்தனர். அதைக் கேட்டதும் அவ்விருவர்களும் சாந்தமடைந்து ஒருவரையொருவர் மெச்சினர். கிருஷ்ணத்வைபாயன வியாஸரும் ஆசார்யஸ்வாமிகளது கரத்திலிருந்து பாஷ்யத்தைக் கிரஹித்து அதை நன்காராய்ந்து தமது தாத்பர்யத்தையே எங்கே கண்டாலும் நன்கு விளக்கியிருப்பதைப் பார்த்து வெகுவாக ஆமோதித்து, பாஷ்யகர்த்தாவை மிகப் புகழ்ந்து, அவருக்குள்ள பதினாறு வயது முடிகிறதற்கு இன்னும் இரண்டு மணி நேரம் தான் இருப்பதாகவறிந்து, தமது தவப்பயனால் அவருக்கு இன்னொரு பதினாறு வருஷகாலம் ஆயுளை ஈந்து, அதற்குள் எங்குப்பார்த்தாலும் பாஷ்யத்தைப் பரவச்செய்து அத்வைத மதத்தை ஸ்தாபித்து திக்விஜயம் செய்யும்படி அவரை அனுக்கிரஹித்து அந்தர்த்தானமாயினர்.

இனி இம்மஹான் ஸுப்ரஹ்மண்யஸ்வாமியின் அவதாரமாகிய குமாரிலபட்டரைச் சந்தித்ததும், பிர்ம்மாவின் அவதாரமாகிய மண்டனமிச்ரரோடு தர்க்கித்ததும், அமருகன் என்னும் அரசனது உடலில் பிரவேசம் செய்ததும், ஸரஸ்வதி தேவியை வாதத்தில் வென்றதும், சிருங்ககிரியில் சாரதாபீடம் ஸ்தாபித்ததும், நாடெங்கும் அத்வைதமதத்தை நிலைநாட்டி திக்விஜயம் செய்த விந்தையும், கூறுவோம்.

# 6.

## குமாரிலபட்ட தர்சனம்.

வியாஸபகவான் இவ்வாறு மறைந்து போகவே, ஸ்ரீமத் சங்கராசாரியஸ்வாமிகள் சற்றுத்திகைத்து அவரை விட்டுப் பிரிந்ததால் மனவருத்தமுற்றார். ஆயினும் அத்வைதமதத்தை எண் திசைகளிலும் பரவச்செய்யும்படி அவர் தமக்குச் சொன்னதை நினைத்து உடனே தமது சிஷ்யர்களுடன் ஸ்ரீகாசிமாநகர் விட்டகன்று முதலில் இப்பொழுது அல்லஹாபாத் என்று சொல்லப்படுகிற ப்ரயாகைக்குச் சென்றார். இந்தப் பிரயாகை க்ஷேத்திரத்தின் மஹிமை எல்லோருக்கும் தெரிந்திருக்கலாமே. இங்குத்தான் இப்பரத கண்டத்திலுள்ள ஏழு மஹாநதிகளுள் மூன்று ஒருங்கு சேருகின்றன. இவைகளின் வனப்பையும், சரிதையையும், பெருமையையும் தனித்தனியே விரிக்கிற் பெருகுமாதலால் இங்கு உபாயமாக எடுத்தெழுதினோம். ஸூர்ய வம்சத்திலுதித்த பகீரதரின் தவத்தால் ஸந்தோஷமடைந்த பரமசிவனால் பூலோகத்திற்குப் போகும்படி ஏவப்பட்ட தேவநதியான கங்கையானவள், தன்னைப் பூலோகத்திற்குப் போகச்சொன்னதில் மிக்க

ரோஷமுள்ளவளாய்ப் பூமியை முழுவதுமே பிரளயத்திலமுழுகவடித்து விடுவதான தீர்மானத்துடன், சொல்லமுடியாத ஆரவாரத்துடன் ஸ்வர்க்கத்திலிருந்து இறங்குங்கால், ஸாக்ஷாத் பரமசிவன் இமயமலையின் சிகரத்திலிருந்துகொண்டு, தமது ஜடையை அவிழ்த்து, கங்கையினது பிரவாஹம் முழுவதையும் ஒரு திவலையேனும் கீழே சிதறாமல் அச்சடைக்குள் ஏந்திக்கட்டிவிட்டதும், மீண்டும் பகீரதர் பிரார்த்திக்கத் தமது ஜடையிலிருந்து அதிஸ்வல்பமான பாகத்தைப் பூமியில் பெருகும்படி செய்ய, அக்கங்காதேவியும் முன்னிலும் பதின்மடங்கதிகமான கோபத்துடன் வெகு வேகமாக வெளுத்த நிறத்துடன், இச்சிவனுக்கு நிகராக வேறொருவருமில்லையென்பதைப் பொய்யாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தன்னிடத்து ஸ்நானம்செய்யும் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு சிவனாகச் செய்துகொண்டு பிரவஹிக்கும் பல க்ஷேத்திரங்களுள் இந்த ப்ரயாகையும் ஒன்று. ஆனல் எல்லா க்ஷேத்திரங்களைக்காட்டிலும் இந்த ப்ரயாகையில் கங்கைக்கு ஒரு விசேஷமுண்டு. இங்குத்தான் மிகவும் ஆழமானதும், அது காரணம்பற்றியே கறுப்பு நிறமுள்ளதுமான காளிந்தீ யென்று சொல்லப்படும் யமுனாநதி அதிக கம்பீரத்துடன் மிருதுவாக வந்து, விசேஷ பாபாப்புடன் கூடிய கங்கையாகிற ஸகியுடன் புதிதாக ஸமாகமம் செய்துகொள்வதில் லஜ்ஜையுடன் சற்றுத் தயங்கி நின்று சேருமிடம். இங்குத்தான் ஸரஸ்வதி மஹாநதியும் தேவலோகத்திலிருந்து அந்தர்வாஹினியாக வந்து கங்கையும் யமுனையும் சேருமிடத்தில் தானும் கூடுகிறது. இம்மூன்று மஹாநதிகளும் சேரும் இவ்விடத்திற்குத்தான் **திரிவேணீ** என்று பெயர். இவ்விடத்தில் ஸ்நானம்செய்பவர்களுக்கு ஸமஸ்த பாபமும்

கணப்பொழுதில் துலைகிறது. அவர்கள் அதற்குப் பிறகு திவ்யமான சரீரத்தையடைந்து வியாதியென்கிற பெயரையே அறியாதவர்களாகிறார்கள். இதே அர்த்தத்தையே வேதபுருஷனும் கூறுகிறார்.

“ सितासिते यत्र संगते तत्राप्लुतासो दिवमुत्पतन्ति ” ||

“ஸிதாஸிதே யத்ர ஸம்கதே தத்ராப்லுதாஸோ திவமுத்பதந்தி” ||

‘வெளுப்பும் கறுப்புமான நதிகள் எங்கே கூடுகின்றனவோ அங்கே ஸ்நானம் செய்பவர்கள் ஸ்வர்க்கத்தையடைகிறார்கள்.’

சுருதியிலெடுத்துரைக்கும்படியான அத்தகைய பெருமைபொருந்திய இந்தத் திரிவேணியில் நமதாசாரியஸ்வாமிகளும் அகமர்ஷண ஸ்நானம் செய்தனர். இவர் இங்கு ஸ்நானம் செய்யுங்கால் யாரை நினைத்தனரென்று தெரிந்துகொள்ள எல்லோருக்கும் அவாவிருப்பது இயல்பாகும். இதற்கு வித்யாரண்ய ஸ்வாமிகள் அடியிற்கண்ட சுலோகத்தால் விடையளிக்கின்றனர்.

सस्नौ प्रयागे सह शिष्यसंघैः
स्वयं कृतार्थो जनसंग्रहार्थी ।
अस्मारि माताऽपि च सा पुपोष
दधार या दुःखमसोढ भूरि ॥

ஸஸ்நௌ ப்ரயாகே ஸஹ சிஷ்யஸங்கை:
ஸ்வயம் க்ருதார்தோ ஜநஸங்க்ரஹார்தீ ।
அஸ்மாரி மாதாऽபி ச ஸா புபோஷ
ததார யா து:கமஸோட பூரி ॥

# குமாரிலபட்ட தர்சனம்.

'பிரயாகையில் சிஷ்யர்களுடன் இவர் ஸ்நானம் செய்தார். ஸ்வயமாகவே கிருதார்த்தரான இவருக்கு இம்முழுக்கால் யாது பயன் என்றாலோ, உலகத்தில் மற்றைய ஜனங்களின் ஆசரணத்திற்காகவே இவருமவ்வாறு செய்தார். அந்த ஸ்நான காலத்தில், தம்மைச்சுமந்து பெற்றுவளர்த்து அநேக துக்கங்களை அனுபவித்த நமது தாயாரை மனத்தில் நினைத்தார்.'

இதுவல்லவோ மாதிருபக்தி. நமது வேதத்தில் கூறியுள்ள முக்கிய தர்மங்களில் முதன்மையான मातृदेवो भव "மாதிருதேவோபவ," என்னும் வாக்கியத்தின் நேரான ஒழுக்கம் இதுவல்லவோ. இவரோ ஸந்யாஸி, இவருக்குப் பந்தமென்பது எங்கிருந்து வந்தது. இவரோ ஈசுவரனின் அவதாரம், இவருக்கு வேறான தெய்வமேது. இவரோ ஸர்வாந்தர்யாமியான பரமாத்மா, ஸமஸ்த பாபத்தையும் தொலைத்து, பந்தங்களையும் விலக்கி, ஞானத்தைக் கொடுத்து, ஸம்ஸாரக் கடலைத் தாண்டுவித்து, மோக்ஷத்தையளிக்கும் பரப்ரஹ்மம். இவருக்கு ஸ்நானமும், தியானமும், இன்னொருவரின் நினைப்பும், எங்கிருந்து வந்தது. இவரைத் தவிர்த்து வேறொன்றுமுளதோ. அப்படியிருக்க ஜனங்களுக்கு நல்வழி காட்ட வேண்டி இவர் செய்துவரும் ஆசரணைகள் ஒவ்வொன்றும் நன்கு கவனிக்கத்தக்கனவல்லவா. ஆதலின் இவர் திரிவேணீயில் ஸ்நானம் செய்யுங்கால் வேறு ஒரு தேவதையையும் கவனிக்காமல் எல்லாவற்றிற்கும் முதன்மையான தேவதை என்று வேதத்திலேயே எடுத்தோதப்பட்டுள்ள மாதாவையே நினைத்தா ரென்றால், மாதாவுக்கு நாம் செய்யவேண்டிய தொண்டுக்கும், அவளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியதற்கும், அவளை எப்பொழுதும் தெய்வமாகக் கொண்டாடுவ

தற்கும் ஓர் எல்லையுமுண்டோ. இம்மஹானைப்பெற்ற அம்மாதுசிரோமணியின் பாக்கியமே பாக்கியம்.

இவ்வாறு தாயாரை நினைத்துக்கொண்டு திரிவேணியில் ஸ்நானம் செய்து முடித்து, அந்நதிக்கரையில் ஒரு தமால விருக்ஷ (பச்சிலைமா) த்தினடியில் சிஷ்யர்களுடன் களைப்பாற உட்கார்ந்தார். இத்தருணத்தில் அவ்வூரில் பட்டபாதரென்பவர் தமது குருவை நிந்தித்ததற்காக வேதத்திற் கர்மகாண்டத்திற்கூறிய பிராயச்சித்தமான துஷானல (உமியினால் வளர்க்கப்பட்ட அக்னி) த்தில் பிரவேசித்திருக்கிறார் என்னும் லோகவார்த்தை நமதாசார்யஸ்வாமிகள் காதிற்பட்டது. இது இவ்வாறு நிற்க.

இந்தச் சரித்திரத்தின் முதற்பகுதியிற் சொல்லியபடி இவ்வுலகில் எங்குப் பார்த்தாலும் தர்மம் அமிழ்த்தப்பட்டு அதர்மம் மேலிடவே தேவதைகளெல்லாம் ஸர்வேசுவரனிடம் போய் முறையிட்டபொழுது தாம் பூமியில் அவதரித்து அத்வைத மதத்தை ஸ்தாபித்து தர்மத்தை நிலைநாட்டுவதாக வாக்களித்ததுமன்றித் தமதருமைப்புதல்வரான குமாரக் கடவுளையும் பூலோகத்திற்குச் சென்று கர்மமார்க்கத்தை ஸ்தாபிக்கும்படி கட்டளையிட்டார். அதற்கிசைந்து ஸுப்ரஹ்மண்யஸ்வாமியும் இப்பூமியில் குமாரிலபட்டரென அவதரித்தார். அவர் தமது இளமைப்பருவத்திலேயே பிராமணருக்குரிய ஸகல வித்யைகளையும் கற்றுணர்ந்து, பௌத்தமதத்தின் மர்மங்களைப் பயில விரும்பித், தாமும் ஓர் பௌத்தர் மாதிரியாக மாறுவேஷம் பூண்டு ஒரு ததாகதரை (பௌத்தகுருவை) யடைந்து, அங்குள்ள பல சிஷ்யர்களுடன் கலந்து, அவ்வித்யையை அப்பியஸித்து வந்தார். ஒரு ஸமயத்தில் அவரது குருவானவர் வேதத்தை மிகவாக தூஷித்தபொழுது அவரை

யறியாமல் அவர் கண்களில் ஜலம் பெருகியது. அதைக் கண்டதும் அவருடன் கூட வாசித்தவர்கள் அவரிடம் ஸந்தேகம்கொண்டு ஸ்நேகபாவத்தை விட்டொழிந்தார்கள். தங்களுக்கு விரோதிகளான பிராமண ஜாதியாரைச் சேர்ந்தவரிவர். இவரை எந்த விதத்திலாவது துலைத்துவிடவேண்டும். வெருட்டி விட்டுவிட்டாலும் நமது மர்மங்களையெல்லாம் வெளியில் சொல்லிவிடுவார்; ஆதலால் இவரைக்கொன்றுவிடுவதே மேலானதென்று நிச்சயம் செய்துகொண்டு இவருடைய ஸஹபாடிகளான அச்சிஷ்யர்கள், **अहिंसा परमो धर्मः** (அஹிம்ஸா பரமோ தர்ம:) 'எல்லாவற்றிற்கும் மேம்பட்ட தர்மம் ஹிம்ஸை செய்யாதிருப்பது' என்பதை நன்கு வற்புறுத்தும் பௌத்தமதக் கொள்கையைக் கைக்கொண்டிருக்கையிலும் ஒரு ஸமயம் மேல்மாடத்தில் எல்லோரும் ஒன்றாகக்கூடி வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கையில் திடீரென்று இவரை அங்கிருந்து தலைகீழாகக் கீழே தள்ளிவிட்டார்கள். இவரும் அச்சமயத்தில் கொஞ்சமேனும் மனஞ்சலிக்காமல் வேதம் பிரமாணமாயிருந்தால் இவ்வுயரத்திலிருந்து மேடுபள்ளமாயிருக்கும் இத்தரையில் நாம் விழுவதால் நம்முயிருக்கு இறுதியுண்டாகாதிருக்க வேண்டுமென்று உரக்கக் கூவிக்கொண்டு பூமியில் விழுந்ததில் ஒரு கண்ணில் புண் பட்டதேயன்றி வேறொரு உபாடுமின்றி எழுந்து சென்றார். இவ்வாறு ஒரு கண்ணில் புண் பட்டது கூட இவர் மனத்தில் 'வேதம் பிரமாணமாயிருந்தால்' என ஸந்தேகம் ஜனித்ததால்தான் என்று சொல்லப்படுகிறது. இது முதல் இவர் எங்குப்பார்த்தாலும் பௌத்தமதத்தைக் கண்டித்து வேதத்திலுள்ள கர்ம மார்க்கத்தை ஸ்தாபித்து வந்தார்.

# குமாரிலபட்ட தர்சனம்.

இவ்வாறு பற்பல தேசங்களுக்குச் சென்று ஒவ்வொரு இடத்திலும் அத்தேசத்து அரசர்களை முதலில் வசப்படுத்திக் கொண்டு பௌத்தர்களை யெல்லாம் ஸம்ஹாரம் செய்வித்து வேதத்தின் பிராமாண்யத்தையும், கர்மகாண்டத்தின் முதன்மையையும் ஸ்தாபித்துவந்ததில் இவருக்கு இரண்டு மஹத்தான தோஷங்கள் ஏற்பட்டன. அவையாவன: பௌத்த மதத்தை நிராகரிப்பதில் இவருக்கு குருவாக இருந்தவரை தூஷிக்கவேண்டி நேர்ந்தது ஒன்று. இதுவுமன்றி கர்மமார்க்கத்தையே முக்கியமென்று ஸ்தாபித்ததில் ஈசுவரனைக்கூட மறுக்கும்படி சில ஸமயங்களில் ஸம்பவித்தது மற்றொன்று. ஆகவே குரு நிந்தை, ஈசுவர மறுப்பு, இவ்விரண்டு தோஷங்களையும் நிவர்த்தி செய்துகொள்வதற்கு வேதத்திற்கூறிய பிராயச்சித்தமாகிய உமியினால் வளர்க்கப்பட்ட அக்னிப் பிரவேசத்தை இவர் செய்யவேண்டியது அத்யாவசியமாக ஏற்பட்டது. இல்லாவிடில் எல்லோரும் இவரிடத்தில் வாய்ப்பேச்சேயன்றிக் காரியம் ஒன்றுமில்லையென்று சொல்லுவார்கள். தம்முடைய மனஸுக்கும் ஸமாதானப்படாது. ஆதலால் இவர் துஷானலாக்னிப்ரவேசம் செய்யத் தீர்மானித்து அதற்கு வேண்டிய ப்ரயத்னங்கள் செய்தார். மேலும் தாம் பூமியிலவதரித்த காரியமும் ஆய்விட்டது. கர்மமார்க்கம் ஸ்தாபித்தாச்சு. இனி ஞானமார்க்கத்தைத்தான் ஸ்தாபிக்கவேண்டும். அதற்குத் தமது பிதாவாகிய ஸர்வேசுவரன் வந்துவிட்டதால் நமக்கு இனி பூலோகத்தில் காரியம் ஒன்றுமில்லையென்றும் கர்ம மார்க்கத்தைப் பூர்த்தியாகத் தாமே ஜனங்களுக்கு அனுஷ்டித்துக் காட்டவேண்டுமென்றும் எண்ணிப் பிரயாகையில் இத்தகைய அக்னிப்ரவேசம் செய்தார்.

# குமாரிலபட்ட தர்சனம்.

இந்த விஷயம் யமுனா நதிக்கரையில் தமாலவிருக்ஷத்தினடியில் வீற்றிருந்த ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யஸ்வாமிகளின் காதிற்படவே, அவரும் தமது பாஷ்யத்தைக்குமாரில பட்டருக்குக் காண்பிக்கவேண்டித் தமது சிஷ்யர்களுடன் அக்னிப்ரவேசம் நடக்குமிடம் போய்ச்சேர்ந்தார். அங்கு ஒருவருக்கொருவர் நிஜ ரூபத்தை யறிந்துகொண்டு தாம் பூலோகத்திற்கு வந்தது முதல் நடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் குமாரில பட்டர் நமதாசார்ய ஸ்வாமிகளுக்குத் தெரிவித்தார். அவரும் மிகவாக ஸந்தோஷித்து இவரைப் புகழ்ந்தார். இவ்வாறு சற்று நேரமான பிறகு பட்ட பாதரும் 'மாஹிஷ்மதி என்னும் ஊரில் மண்டன மிச்ரர் என்னும் ஓர் பிராமணர் தமது தர்ம பத்னியுடன் நீதிநெறி தவறாது வேதத்திற் கூறியபடி கர்மமார்க்கத்தில் மிகவும் ஆஸக்தியுள்ளவராயிருக்கிறார். அவரிடம் சென்று வாதித்துத் தங்களது பாஷ்யத்தையும் அவருக்குக் கற்பித்து அவரை வசப்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன்' என்று ஸ்ரீ சங்கரரிடம் தெரிவித்து அவர்களனுக்கிரஹத்தைப் பெற்று அத்வைதவுண்மையை யறிந்து, மஹாயோகிகளுக்குக் கூடக் கிடைப்பதற்கரிதான அவர்களது பிரத்யக்ஷ ஸந்நிதியில் இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகிற்கேகினர்.

உடனே பகவத்பாதாசாரியரும் பிரயாகையை விட்டு மாஹிஷ்மதியை யடைந்து மண்டன மிச்ரருடன் தர்க்கித்து அவரை ஜயிக்கவேண்டி அவ்வூருக்குச் சென்றார்கள்.

## 7.

## மண்டனமிச்ர ஸம்வாதம்.

நர்மதையென்று சொல்லப்படும் நதத்தின் கரையில் மாஹிஷ்மதி யென்னும் ஊரில் ஹிமமித்திரனென்கிற ஓர் பிராமணன் இருந்தான். அவ்வந்தணனுக்கு நற்குணங்களுக்கெல்லா மோரிடமாய் ஒரு குமாரன் பிறந்தான். அக்குழந்தைக்கு விசுவரூபரெனப் பெயரிட்டு இளமையிலேயே வேத நெறி வழுவாது அந்தணர்களுக்குரிய ஸகல ஸம்ஸ்காரங்களையும் தகப்பனார் செய்வித்தார். அந்த விசுவரூபரும் அதி சீக்கிரத்திலேயே சுருதி, ஸ்மிருதி இதிஹாஸம் முதலிய ஸமஸ்த வித்யைகளிலும் நல்ல பயிற்சியடைந்து பல திக்குக்களிலும் தமது புகழ் பரவிவர வஸித்து வந்தனர். அவருக்கு யௌவனம் வந்ததும் அவருக்குத் தக்க ஓர் பெண்மணியை விவாகம் செய்யக்கருதி அவருடைய பெற்றோர்கள் பல விடங்களில் விசாரிக்குங்கால் சோணபத்திரையென்னும் நதியின் கரையில் விஷ்ணுமித்திரன் என்னும் பிராமணனுக்கு ஓர் பெண்குழந்தை யிருப்பதாயும் அவளது நற்குணங்களை

யும்; நற்செய்கைகளையும், ரூபம லாவண்யம் முதலியவற்றை யும், ஸரஸவாணீ என்னும் அக்கோதையினது பெயருக்கிண ங்க அவளது கல்வித்திறமையையும், அநேகர்கள் சொல்லக் கேட்டு, அந்நங்கையைத் தங்களது அருமைப் புதல்வனுக்கு விவாஹம் செய்விக்க வேண்டுமென்ற ஆவலுடன், அந்த விஷ்ணுமித்திரன் என்பவருடன் கலந்ததில், அவரும் இந்த யோசனைக்கிணங்க உடனே கல்யாணத்தை நிச்சயம் செய்து முகூர்த்தத்தைச் சிறப்பாய் நடத்த அவரவரது பந்துக்களை யும், சிநேகிதர்களையும் கூட்டி, எல்லோரும் ஆநந்திக்கத்தக்க சுபலக்னத்தில் தமது குழந்தைகளுக்கு விவாஹத்தை நடத் தினார். அவ்விதம் பெரியோர்களாசிகூறத் தம்முள்ளம் களித் துத்தழைக்க அத்தம்பதிகள் மாஹிஷ்மதி நகரம் சென்று உலகத்தார் எல்லோரும் புகழத்தக்க இல்லற வாழ்க்கையை யடைந்து இருவரும் ஒரே மனத்தராய் இரண்டாவது ஆச் ரமமாகிய கிரஹஸ்தாச்ரமத்தின் தர்மங்களை நடத்தி வந்த னர். இவ்வாறு இவர் இப்புவிக்கு மண்டனமாயிருந்தது பற்றி இவருக்கு மண்டனமிச்ரரென்று பெயர் வந்தது போலும். பிறகு அவர்கள் பெரியோர் காலஞ்செல்ல ஸ்ரீ மண்டனமிச்ரரும் ஒரு ஸமயம் பிதிருதினத்தில் பூர்வமீமாம் ஸையின் கர்த்தாவாகிய ஜைமினிமஹரிஷியையும், உத்தர மீமாம்ஸையின் கர்த்தவாகிய வேதவியாஸ பகவானையும் முறையே விச்வேதேவர்ஸ்தானத்திலும் பிதிருஸ்தானத்தி லும் நிமந்திரணத்திற்கு வரித்து, வீட்டுவாயிற் கதவைத் தாளிட்டு மஹா சிரத்தையுடன் விதிப்படி சிராத்தத்தை நட த்தி வந்தனர்.

இச்சமயத்தில்தான் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசாரிய ஸ்வாமிகளும் பட்டபாதர் முகமாய் ஸ்ரீமண்டனமிச்ரரின்

கல்வியையும், ஒழுக்கத்தையும் கேட்டு வியந்து அவரை ஜயிக்கக்கருதி மாஹிஷ்மதி நகரம் வந்து சேர்ந்தார்கள். அந்நகரம் வந்ததும் மண்டனாசாரியரின் கிருஹத்திலிருப்பிடம் தெரியாமல் அங்கு நர்மதையில் தீர்த்தம் எடுக்கவந்த இரண்டு மாதர்களை நமது ஸ்வாமிகள் விசாரித்தார்கள். இதைக்கேட்டதும் ஸ்ரீமண்டனரின் கிருஹம் தெரியாதவர்களும் இவ்வுலகில் உண்டோவென அவர்கள் வியந்து மொழிந்ததாவது "எந்த வீட்டின் வாயிலில் கட்டியிருக்கும் கூடுகளிலுள்ளிருந்தபடியே கிளிகள் கூட வேத விசாரணைகள் செய்துகொண்டிருக்கின்றனவோ அதுவேதான் மண்டன பண்டிதரின் வீடு என்று தெரிந்துகொள்ளுங்கள்" என்பதாம். இதைச் செவியுற்றதும் அவ்வடையாளத்தால் ஸ்ரீமண்டனரின் கிருஹத்தையடைந்து அதனது வாயிற் கதவு தாளிட்டிருந்ததைக் கண்டு சற்றும் தயங்காமல் தமது யோகவித்யையினால் ஆகாசமார்க்கமாக உட்சென்றார்.

மண்டனமிச்ரரும் விச்வேதேவரையும் பிதிருக்களையும் பாத்யாதிகளால் நல்வரத்தழைத்த பிறகு பிரத்யக்ஷ மஹாவிஷ்ணு ஸ்தானத்தில் கூர்ச்சத்தை வைத்து அதில் பாத்யத்தை ஸமர்ப்பிக்கப்போகும் தருணத்தில் அங்கு இரண்டு பாதங்கள் இருந்ததைக் கண்டு நிமிர்ந்து பார்த்ததும் ஸ்ரீசங்கரர் எதிரில் நின்றார். இவரைக்கண்டதும் ஸ்ரீ மண்டனமிச்ரருக்கு வந்த கோபத்திற்கோரளவில்லை. அவர் மிகவும் கர்மடரானபடியால் சிராத்த காலத்தில் சன்னியாஸிகளைக் காணக்கூடாதென்று கர்மகாண்டத்தில் சொல்லியிருப்பதால் தாம் செய்யும் சிராத்தம் இவர் வந்த காரணம்பற்றி வியர்த்தமாகப் போய்விட்டதாக வெண்ணித் தமது வாயில் வந்தபடியெல்லாம் இவரைக் கோபித்துக்கொள்ளவாரம்பித்தார். அவரவ்

வளவு கோபத்துடனுரைத்த மொழிகளுக்கெல்லாம் நமது ஸ்வாமிகள் மிகவும் சமத்காரமாய் வெகு ஸாவதானமாய் விடை பகரவே அவருக்குக் கோபமின்னுமதிகரித்தது. இவ்வாறு இவ்விருவர்களுக்கும் நடக்கும் விவாதத்தைக்கண்டு ஜைமினி மஹரிஷி புன்னகை செய்தார். வியாஸபகவானும் ஸ்ரீசங்கரருடைய அபாரமான மஹிமையின் ஸ்வல்ப பாகத்தை ஏகதேசம் ஸ்ரீமண்டனருக்குச் சொல்லி அவர் அவ்வாறு பருஷமான வார்த்தைகளைப் பிதற்றினதற்காக அவர் மேல் கோபித்து, ஸ்ரீ சங்கரரை ஸாக்ஷாத் ஸ்ரீ மஹாவிஷ்ணுவே பிரத்யக்ஷமாக வந்ததாக வெண்ணி சிராத்தத்தில் பிரத்யக்ஷமஹாவிஷ்ணுஸ்தானத்தில் அவரை நிமந்திரணத்திற்கு வரிக்கும்படி கட்டளையிட்டார்.

உடனே மண்டன பண்டிதரும் சாந்தராகி அவ்வாறே ஸ்ரீ பகவத்பாதரை நிமந்திரணத்திற்கழைக்க, அவர் தமக்கு வாதபிக்ஷைதான் வேண்டுமெனவே, அதற்கிசைந்து அன்று சிராத்தம் முடிந்த பிறகு மறுநாள் முதல் வாதிக்கலாமென்று தீர்மானித்து, அவ்வாதத்திற்கு மத்தியஸ்தராக இருக்கும்படி அங்கு வந்திருந்த இரண்டு மஹரிஷிகளையும் ஸ்ரீமண்டனாசாரியர் பிரார்த்தித்தார். அதற்கவர்கள் "உங்களுடைய ஸஹதர்மசாரிணியாகிய ஸர்வகலாவல்லி ஸரஸவர்ணியை மத்யஸ்தையாக வைத்து விவாதத்தை நடத்துங்கள்" என்று மொழிந்துவிட்டுச் சிராத்தம் முடிந்தவுடன் மண்டனமிச்ரரால் வழிகொண்டு விடப்பட்டு அந்தர்த்தானமாயினார்கள்.

மறுநாள் ஸூர்யோதயமானதும் ஸ்நானம் முதலியவற்றைச் செய்துகொண்டு ஸ்ரீமண்டனமிச்ரரும் ஸ்ரீசங்கரபகவத்பாதரும் வாதத்திற்கு ஆயத்தமானார்கள். ஸரஸவாணியை மத்யஸ்தத்திற்குக் கூப்பிடவே அவள் வந்து இரண்டு மாலை

களை யெடுத்து இருவர் கழுத்திலும் போட்டுக்கொள்ளும்படி செய்து இதில் யார் கழுத்திலுள்ள மாலை வாடுகிறதோ அவர் களுக்கு ஜயமில்லை என்று கூறித் தனக்குரிய வீட்டுக்காரியங் களைக் கவனித்து வந்தாள். இவ்விருவர்களும் வாதமாரம் பிக்கு முன் யார் தோல்வியடைந்தாலும் அவர் மற்றொருவ ருடைய ஆச்ரமத்தைத் தழுவுகிறதென்று சபதம் செய்து கொண்டார்கள். அதாவது ஸ்ரீசங்கரர் தோல்வியடைந்தால் தமது ஆச்ரமமாகிய ஸந்யாஸத்தை விட்டுவிட்டு ஸ்ரீமண்டன ருடையதான கிருஹஸ்தாச்ரமத்தையடைகிறதென்றும் அவ் வாறே ஸ்ரீமண்டனர் தோல்வியடைந்தால் தமதாகிய கிருஹஸ் தாச்ரமத்தை விட்டுவிட்டு ஸ்ரீசங்கரரதாகிய ஸந்யாஸத்தை கிரஹிக்கிறதென்றும் ஏற்பாடு செய்துகொண்டார்கள். உட னே இவ்விருவருக்கும் மஹத்தான விவாதம் தொடங்கிற்று. மண்டனமிச்ரர் எடுத்த ஒவ்வொரு கக்ஷியையும் நமதாசார்ய ஸ்வாமிகள் பிரமாணங்களுடன் கண்டித்து வந்தார்கள். இவ் வற்புத காட்சியைக் காணுதற்காகவே தேவதைகளெல்லோ ரும் அவ்விடத்திலாகாசத்தில் வந்து நின்றார்கள். இவ்வாறு ஐந்தாறு நாள், நித்யகர்மானுஷ்டான ஸமயங்கள் தவிர மற் றைய காலங்கள் முழுவதும் இடைவிடாது மிகவும் ஆச்சரிய கரமான தர்க்கம் நடந்தது. ஜைமினீய பூர்வமீமாம்ஸா ஸூத் ரங்களுக்கு ஜைமினியே கண்டு வியக்கத்தக்க அபூர்வமான அர்த்தங்களையெல்லாம் ஸ்ரீசங்கரர் எடுத்துபந்யஸிக்கவாரம் பித்தார். இச்சமயத்திலோர்நாள் காலையில் மண்டனமிச்ரர் கழுத்திலிருந்த மாலை வாடுதலையடைந்தது. ஆகாயத்திலிரு ந்த தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். அன்று பகலில் ஸரஸவாணியும் இவ்விருவர்களையும் சாப்பாட்டுக்கழைக்கும் பொழுது, ஸ்ரீமண்டனரை வைச்வதேவத்திற்கும் ஸ்ரீசங்க

ரரை பிக்ஷைக்கு மழைப்பதற்குப் பதிலாக இருவரையும் பிக்ஷைக்கென்றே அழைத்தாள், இதைக்கேட்டதும் மண்டனமிச்ரர் தாம் தோல்வியடைந்ததை யறிந்து, துவக்கத்தில் செய்துகொண்ட பிரதிஞ்ஞைக்கேற்பத் தாம் ஸந்யாஸம் வாங்கிக்கொள்ள வேண்டுமென்றெண்ணி ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளையே வெகுவாக நமஸ்கரித்துத் தமக்கு ஸதுபதேசம் செய்து கிரம ஸந்யாஸம் ஈந்தருளும்படி யாசித்தார்.



# 8.

## ஸரஸவாணீ ஸம்வாதம்.

ஸரஸவாணீயும், தான் பூர்வ ஜன்மத்தில் ஸரஸ்வதீ தேவியென்றும் முன்னொரு காலத்தில் ப்ரஹ்மலோகத்தில் வேதகோஷம் நடந்த ஸமயத்தில் துர்வாஸமஹரிஷியானவர் வேத மந்திரத்தை ஸ்வரம் தப்பிச சொன்னதால் தான் சிரித்துவிட்டதாகவும், அதற்காக அம்மஹரிஷி மிகக் கோபித்துத் தன்னை பூலோகத்தில் ஜனிக்கும்படி சபித்ததாகவும், பிறகு துர்வாஸரை மிகுதியாகப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டதில் பூலோகத்தில் பிரம்மாவின் அம்சாவதாரமாகிய ஸ்ரீமண்டனமிச்ரருக்குத் தான் பத்தினியாகி ஸாக்ஷாத் மஹாதேவனினவதாரமாகிய ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் வந்து மண்டனரை ஜயித்துத் தமது புகழைப் பரவச்செய்ததும் தனக்குச் சாபவிமோசனமாகுமென்று அம்மஹரிஷி வாக்களித்ததாயும், அக்காலம் இப்பொழுது நேர்ந்துவிட்டதால் தனது பதி ஸந்யாஸம் வாங்கிக்கொள்வதற்கு முந்தியே

# ஸரஸவாணீ ஸம்வாதம்.

தான் இப்பூமியை விட்டு பிரம்மலோகம் செல்வதாயும் இவ்விருவர்களுக்கும் சொல்லித், தான் ஆகாசத்தில் கிளம்பினாள்.

உடனே நமதாசார்யஸ்வாமிகள் வன துர்க்காமந்திரத்தால் அந்த ஸரஸவாணீயைக்கட்டி நிறுத்தி மொழிந்ததாவது 'மண்டனமிச்ரருக்குப் பத்தினியானதுபற்றித் தாங்கள் அவருடைய அர்த்தசரீரமாகிறீர்கள். ஆதலால் தங்களுடனும் வாதுபுரிந்து தங்களையும் வென்றால்தான் மண்டனரை முழுமையும் ஜயித்ததாகவாகிறது' என்று சொல்லி அந்த ஸரஸ்வதீ தேவியையும் தம்முடன் வாது புரியவழைத்தார். வாகீசுவரியும் அதற்கிணங்க, அது முதல் ஒருவரையொருவர் ஜயிக்க வேண்டுமென்கிற ஆவலுடன் இவ்விருவர்களுக்கும் கணப்பொழுதேனுமிடைவிடாமல் பதினேழு நாள் வரையில் யாவரும் கேட்டு வியக்கத்தக்க அத்யத்புதமான விவாதம் நடந்தது. ஒவ்வொருவருடையவும் புத்தி சாதுர்யத்தையும், வாக்கின் காம்பீர்யத்தையும், அவர்கள் எடுத்துரைக்கும் சாஸ்திரத்தின் நூதன விசேஷார்த்தங்களையும் கேட்டு ஆதிசேஷனென்ன, பிருஹஸ்பதி தேவரென்ன இவர்களே ஆச்சரியப்பட்டார்களென்றால் மற்றையவர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ. இரவில்கூட ஓய்வின்றி இராப்பகலாக இவ்வாக்குவாதம் நடந்தது. ஸரஸ்வதீ தேவியும் ஒவ்வொன்றாக எல்லா சாஸ்திரங்களிலும் நமது ஸ்வாமிகளைப் பரீக்ஷித்தாள். இவ்வாறு பதினேழு நாளில் ஸமஸ்த சாஸ்திரங்களும் முடிந்து, எல்லாவற்றிலும் ஆசார்யஸ்வாமிகள் வெற்றியடையவே, ஸரஸ்வதீ "இவரோ மிகவும் பாலஸந்யாஸியாயிருக்கிறார். இவர் கிருஹஸ்தாச்ரமத்தில் எக்காலத்திலும் இருந்தவராகத் தோற்றவில்லை. ஆதலால் இவரு

தரு ஸ்திரீ விஷய ஞானம் இருக்கக்காரணமில்லை. ஆகவே இவளைக் காமசாஸ்திரத்தில் பரீக்ஷித்தால் இவர் தோல்வி யடைந்து விடுவரென்பதில் தடையில்லை" என்று எண்ணி அவ்வாறே செய்ய நிச்சயித்து, ஆசார்யஸ்வாமிகளைக் காம சாஸ்திரத்தில் கேள்விகள் கேட்கவாரம்பித்தாள். அதற்கு ஸ்ரீசங்கரர் பதிலுரைக்கக் கூடாமல் தயங்கினர். ஏனெனில். பதிலுரைத்தால் தமது ஆச்ரமத்திற்கு விரோதமாயிருக்கிறது, பதிலுரைக்காமலிருந்தாலோ இவருக்கு அந்த சாஸ்திரத்தில் பரிசயமில்லையென்று ஸர்வஞர் (எல்லாம் தெரிந்தவர்) என்னும் பெயருக்கு குறைவுண்டாகிறதுமன்றித் தாம் தோல்வி யடைந்ததாகவும் ஒப்புக்கொள்ளவேண்டி வருகிறது. இவ்விருவிதச் சங்கடத்தையுமுத்தேசித்து இக்காம சாஸ்திரத்தில் கேட்கும் கேள்விகளுக்கு விடை பகரத் தமக்கு ஒரு மாதமவகாசம் கொடுக்க வேண்டுமென்று ஸரஸ்வதியைக் கேட்டுக்கொண்டு, தாம் திரும்பிவருமளவும் அவளை அவ்விடத்தில் தானே இருக்கச் செய்து நமதாசார்யஸ்வாமிகள் தமது சிஷ்யர்களுடன் வெளியில் ஸஞ்சாரத்திற்குப் புறப்பட்டார்கள்.





## 9.

## பரகாயப்ரவேசம்.

ஸ்ரீ சங்கராசாரியர் இவ்வாறாக ஸஞ்சாரம் புறப்பட்ட சில காலத்திற்கெல்லாம் ஓர் ஊரில் திவ்ய மங்களமான சரீரத்தையுடைய ஒரு அரசன் இறந்து கிடப்பதையும் அவனது சரீரத்தைச் சுற்றிலும் அவனது அந்தப்புரத்தினர்களான நூற்றுக்கணக்கான ஸ்திரீகள் புரண்டழுவதையும் கண்ணுற்று ஸ்வாமிகள் தமது முக்கிய சிஷ்யரான பத்மபாதாசார்யரை நோக்கி "இவ்வரசனோ திவ்யமான ஜோதிஸ்ஸையுடைய சரீரத்தோடிருந்திருக்கிறான். இவனுக்கோ அந்தப்புரத்தில் நூற்றுக்கணக்கான பத்னிகள் மிகவும் ரூபலாவண்ய ஸௌந்தர்யத்துடன் கூடினவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் இவ்வரசனுடைய சரீரத்தில் பிரவேசித்து, சிறிது

காலம் இவனது ராஜ்யபாரத்தை வகித்து, இவனது பத்னிகளிடமிருந்து காமசாஸ்திரத்தில் அநுபவஞானத்தையடைந்து, பிறகு இவனுடைய புத்திரனுக்கு பட்டத்தைச் சூட்டி, மீளவும் முன்போல ஸ்வசரீரத்தையடைந்து, மாஹிஷ்மதிக்குச் சென்று, ஸரஸ்வதியை இச்சாஸ்திரத்திலும் வெல்லவேண்டுமென்று தோன்றுகிறது" என்று கூறினார்கள். இதைக்கேட்டதும், ஸ்ரீபத்மபாதர் மிகுந்த வணக்கத்துடன் மொழிந்ததாவது :- "ஸ்வாமின்! தங்களுக்குத் தெரியாத விஷயமொன்றுமில்லை. இருந்தபோதிலும் தங்களிடத்து எனக்குள்ள பக்தியினால் இப்பொழுது யான் பேசத்துணிகிறேன். அதைப் பொறுத்தருளவேண்டும். முன்னொரு காலத்தில் மத்ஸ்யேந்திரன் என்னும் மஹாத்மா, தமது சிஷ்யனாகிய கோரக்ஷன் என்பவனிடத்தில் தம்முடைய சரீரத்தை ஒப்புவித்துவிட்டு, இறந்துபோய்க்கிடந்த ஒரு அரசனுடைய சரீரத்தில் தமது யோகவித்யையினால் பிரவேசித்து, அவ்வரசனது ஊருக்குச் சென்றார். அவ்வூரில் இவர் சென்ற நாள் முதல் மாதம் மும்மாரிபெய்து வெகு ஸுபிக்ஷமாகவிருந்தது. இதைக்கண்ட மந்திரிகள் தங்களை ஆளவந்திருப்பது யாரோ ஒரு மஹானென்பதை யறிந்துகொண்டு, அவ்வரண்மனையின் அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளைக்கொண்டு அவ்வரசனைவெகுவாகவிநோதப்படுத்தும்படி செய்தார்கள். அந்நங்கையர்களின் மாயவலையிலீடுபட்டு, அம்மஹானும் தமது நிஜரூபத்தை மறந்து, விஷயங்களிலேயே மிகவும் பிரவிர்த்தியுள்ளவராக இருந்துவிட்டார். கோரக்ஷனும் வெகுகாலம் அவருடைய சரீரத்தைக் காத்துக்கொண்டிருந்தும், அவர் திரும்பி வாராமையைக்கண்டு, அவர் பிரவேசித்த அரசனிருக்குமிடத்தை விசாரித்து, அங்குச்சென்று, அவ்வரண்மனையில் அந்தப்புர

ஸ்திரீகளுக்கு நாட்யம் சொல்லிவைக்கும் வேலையிலமர்ந்து, அவ்வேந்தனுக்கு அந்தரங்கஸ்நேகிதனுகி, பிறகு ஓர் ஸமயத்தில் தனிமையாயிருக்கையில், அவ்வரசனுக்கு அவருடைய நிஜரூபத்தை ஞாபகப்படுத்த, அவரும் உடனே தாம் கெட்டுப்போனதையறிந்து, மிகுதியாக வருத்தப்பட்டு, முன்போலத் தமது ஸ்வந்த சரீரத்தையடைந்தாரென்று ஒரு கதையைக் கேட்டிருக்கிறேன். ஆகவே விஷயங்களில் பற்று உண்டாகுதல் யாது காரணம்பற்றியும் மிகக்கெடுதலே. நிகரில்லாத மஹத்தான நம்முடைய விரதமெங்கே? அதிநிந்திக்கத்தக்கதான காமசாஸ்திரமெங்கே? தங்களைப்போலொத்த மஹான்களே இவ்வாறு அபேக்ஷித்தால் அப்புறம் லோகத்தில் வியவஸ்தையில்லாமல் போய்விடாதோ? ஏனெனின்,

यद्यदाचरति श्रेष्ठस्तत्तदेवेतरो जनः ।
स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते ॥

யத்3யதா3சரதி ஶ்ரேஷ்ட2ஸ்தத்ததே3வேதரோ ஜந: ।
ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்தத3நுவர்ததே ॥

"இவ்வுலகில் பெரியவர்கள் எதைதை ஆசரிக்கிறார்களோ அதையேதான் ஸாமான்ய ஜனங்களும் செய்கிறார்கள். அவர்கள் எதைப் பிரமாணமாக அங்கீகரிக்கிறார்களோ அதையேதான் இவர்களும் பின்றொடருகிறார்கள்."

என்று நீதிமொழியுளதன்றோ? ஆனல், தங்களுக்குத் தெரியாததை யான் புதிதாகத் தெரியப்படுத்தினதாகக் கருதக்கூடாது. ஸர்வஞ்ஞரான தங்களுக்குத் தெரியாததுமுண்டோ? எனக்குள்ள பிரேமையால் நான் ஞாபகப்படுத்தினேனேயொழிய வேறில்லை. வழுவிப்போயிருக்கும் ஞான

மார்க்கத்தை ஸ்தாபித்து, பூலோகத்தில் ஸந்யாஸதர்மத்தை வெளிப்படுத்துவதற்காகவே பிரதிஞ்ஞை செய்து கங்கணம் கட்டிக்கொண்டவதரித்திருக்கும் தங்களுக்கும் மற்றொருவர் எடுத்துக்கூறவேண்டுமோ? இல்லை. இல்லை. பிரணயத்தால் நான்சொன்னதை க்ஷமித்தருளல் வேண்டும்." என்றார். இதைச் செவியுற்றதும் ஸ்ரீசங்கரபகவத்பாதர் புன்னகை கொண்டு தமது பிரிய சிஷ்யராகிய பத்மபாதரை நோக்கி, "அப்பா! நீ சொல்வது வாஸ்தவமே; இருந்தபோதிலும், யான் மொழிவதைச் சற்றுக்கவனத்துடன் கேள். பரமார்த்தமான தத்வத்தை உனக்குச் சொல்லுகிறேன். ஆஸக்தியிலிருந்தும் விடுபட்டவர்களுக்கு—அதாவது முற்றுமே பற்று நீங்கினவர்களுக்குக் காமத்தால் ஒருவிதக் கெடுதலும் வராது. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் சரித்திரம் உனக்கு நன்றாகத்தெரியுமே. அவர் பதினாறாயிரம் கோபஸ்திரீகளுடன் பற்பல விதமாய் ரமித்தபோதிலும், ஸர்வஸங்க பரித்யாகிகளான மஹா யோகிகளுக்கெல்லாம் முதன்மையானவரன்றோ! இதனுண்மை உனக்குத் தெரியாததோ? மேலும் யோகசாஸ்திரத்தில் வஜ்ரோளிகையென்று சொல்லப்படும் யோகத்தில் ஸித்தியடைந்தவர்களுக்கு இந்திரியம் வழுவுதலால் எவ்வித பாதகமும் உண்டாகமாட்டாதென்பதை யறியாயோ? அவர்களுடைய ரேதஸ்ஸானது எப்பொழுதும் ஊர்த்வமுகமாயிருத்தலால், அவர்களுக்கு எச்சமயத்திலும் இந்திரியத்தை ஆகர்ஷணம் செய்துகொள்ளத் திறமையுண்டு. மேலும் ஸங்கல்பம்தான் எவ்வாறான அபிலாஷைக்கும் காரணமாயுள்ளது. அத்தகைய ஸங்கல்பமானது, ஸாக்ஷாத் கிருஷ்ண பரமாத்மாவுக்குச் சமானமான எனக்குக் கிடையவே கிடையாது. மேலும் ஸம்ஸாரத்திலுள்ள தோஷத்திலேயே கண்ணுயுள்ள

ஒருவனுக்கு, காமத்திற்கு மூலகாரணமாயுள்ள ஸங்கல்பம் என்பது தொலைந்த க்ஷணமே ஸம்ஸார பந்தமும் நசித்து விடுகிறதல்லவா?" ஆதலால், இந்தக்கர்மா ஒரு விதத்தாலும் என்னைச் சேரமாட்டாது. இதனால் விதி ப்ரதிஷேத சாஸ்திரங்களுக்கு வையர்த்யம் வருகிறதே—அதாவது இன்னது செய்யலாம், இன்னது செய்யக்கூடாது என்று விதித்திருக்கிற வேதவசனங்களால் யாது பிரயோஜன மென்று எண்ணுவரேயானால், அவை ஆத்மதத்வத்தை விசாரியாமல் அஹம் பாவம்கொண்டு மிகத் தெரிந்தவனாக எண்ணிப் பிதற்றும் மந்தபுத்திகளினுபயோகத்திற்காக ஏற்பட்டவை. தத்வத்தை யறிந்து மஹா வாக்யங்களினனுபவத்தால் உண்டாகும் மேம்பாட்டை யடைந்தவன் ஆச்ரமங்களிலிருந்தும் விடுபட்டதாக ஆத்மாவையுணர்ந்து, எப்பொழுதும் ஆத்மாநந்தத்திலேயே யிருப்பானேயொழிய விதிக்கு வசனாகான். அது எங்ஙனமெனின், மண்ணிலிருந்துண்டாகும் கடம் முதலிய வஸ்துக்கள் எப்படி மண்ணைத்தவிர எக்காலத்தும் வேறல்லவோ, அதே மாதிரியாக பரமாத்மாவிடமிருந்துண்டான இந்த ஜகத் முழுவதும் பரமாத்மாவைத் தவிர எக்காலத்தும் வேறல்லவென்பது ஸித்தம். ஆகவே, இத்தகையநிச்சய புத்தியுள்ளவன் அனவரதமும் உலகம் பொய்யென் றுணர்ந்து கொண்டு தான் செய்யும் கர்மாவினால் ஒருவித பலனையுமடைகிறதில்லை. உதாரணமாக ஸ்வப்னத்தில்செய்யும் புண்யமாவது பாபமாவது யாதொரு விதமான பலனையும் கொடுக்கிறதில்லையல்லவா? ஆகலின், மேற்கூறிய ஆத்மஞானி அசுவமேதயாகத்தை ஆயிரக்கணக்காய்ச் செய்தாலும் ஸரி; அல்லது பிரம்மஹத்தியை லக்ஷக்கணக்காய்ச் செய்தாலும் ஸரி, அவைகளால் சற்றேனும் பாதிக்கப்படமாட்டான். இதையே

தான் பதஞ்சலி மஹரிஷியும் பரமார்த்த ஸாரத்தில் கூறியுள்ளார்.

हयमेधसहस्राण्यप्यथ कुरुते ब्रह्मघातलक्षाणि ।
परमार्थविन्न पुण्यैर्न च पापैर्लिप्यते क्वापि ॥

𑌹𑌯𑌮𑍇𑌧𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌪𑍍𑌯𑌥
𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌘𑌾𑌤𑌲𑌕𑍍𑌷𑌾𑌣𑌿 ।
𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌨𑍍𑌨 𑌪𑍁𑌣𑍍𑌯𑍈𑌰𑍍𑌨
𑌚 𑌪𑌾𑌪𑍈𑌰𑍍𑌲𑌿𑌪𑍍𑌯𑌤𑍇 𑌕𑍍𑌵𑌾𑌪𑌿 ॥

இதற்கிணங்க வேதபுருஷனும் பின்வருமாறு சொல்லுகிறார்.

त्रिशीर्षाणं त्वाष्ट्रमहनमरुन्मुखान्यतीन्शालावृकेभ्यः प्रायच्छत्तस्य मे तत्र लोमापि न मीयते स योमां वेद न ह वैतस्य केनचन कर्मणा लोको मीयते नस्तेयेन न भ्रूणहत्यया ।

𑌤𑍍𑌰𑌿𑌶𑍀𑌰𑍍𑌷𑌾𑌣𑌂 𑌤𑍍𑌵𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌮𑌹𑌨𑌮𑌰𑍁𑌨𑍍𑌮𑍁𑌖𑌾𑌨𑍍𑌯𑌤𑍀𑌨𑍍𑌶𑌾-
𑌲𑌾𑌵𑍃𑌕𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌚𑍍𑌛𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌲𑍋𑌮𑌾𑌪𑌿 𑌨 𑌮𑍀-
𑌯𑌤𑍇 𑌸 𑌯𑍋𑌮𑌾𑌂 𑌵𑍇𑌦 𑌨 𑌹 𑌵𑍈𑌤𑌸𑍍𑌯 𑌕𑍇𑌨𑌚𑌨
𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 𑌲𑍋𑌕𑍋 𑌮𑍀𑌯𑌤𑍇 𑌨𑌸𑍍𑌤𑍇𑌯𑍇𑌨 𑌨 𑌭𑍍𑌰𑍂𑌣-
𑌹𑌤𑍍𑌯𑌯𑌾 ।

இதன் தாத்பர்யம்:—த்வஷ்டாவின் புத்திரனை திரிசிரஸை இந்திரன் ஸம்ஹாரம் செய்தான். வேதாந்த விசாரம் செய்யாத அநேக யதிகளைக் கோபத்தால் கோநாய்களுக்கிரையாக்கினான். இத்தகைய கொடிய செய்கைகளால் அவனுக்கு ஒருவிதத் தீங்கும் உண்டாகவில்லை.

இந்த ரிக்கினால் பாபம் ஸம்பந்தப்படாதென்றாயிற்றே யன்றிப் புண்யம் ஸம்பந்தப்படாதென்று கூறலாகுமோ

லெனின், இதைக் குறித்தும் சுருதியிலேயே பின்வருமா தாரங்கள் காணப்படுகின்றன.

जनकोहवैदेहो बहुदक्षिणेन यज्ञेनेजे । अभयंवै जनक प्राप्तोसि ।

ஜநகோ ஹவைதேஹோ பஹு-தக்ஷிணேந யஜ்ஞேநேஜே | அபயம்வை ஜநக ப்ராப்தோஸி |

வைதேஹரான (தேகத்தில் பற்றில்லாத) ஜனகரானவர் வெகு திரவியம் செலவழித்து யாகங்கள் செய்தார். அப்படிக்கிருந்தும் கிஞ்சித்தேனும் பயமில்லாததும் பரமானந்த ஸ்வரூபமானதுமான மோக்ஷத்தை யடைந்தாரேயல்லாது மேற்சொல்லிய யாகங்களின் பலனை யனுபவிப்பதற்காக தேஹ சம்பந்தத்தை யடையவில்லை.

ஆதலால் தத்வத்தை யுணர்ந்தவன் இந்திரனையொப்பப் பாபத்தாலும் தாழ்த்தப்படான்; ஜனகரையொப்பப் புண்யத்தாலும் உயர்த்தப்படான். அவனுக்கு "ஏன் இந்தப் பாப காரியத்தைச் செய்தோமென்றுவது, ஏன் இந்தப்புண்யமான கர்மாவைச் செய்யவில்லை" யென்றுவது மனத்தில் எவ்வித தாபமுமுண்டாகாது. அவ்வாறே சுருதியிலும் காணப்படுகிறது.

तत्सुकृत दुष्कृते विधुनुत एनं ह वाव नतपति किमहं साधुनाकरवं किमहं पापमकरवम् ।

தத் ஸுக்ருத து-ஷ்க்ருதே விது-நுத ஏநம் ஹ வாவ நதபதி கிமஹம் ஸாது-நாகரவம் கிமஹம் பாபமகரவம் |

ஆதலால்தான், அப்பா, நான் சொல்வது, இந்தக்கா சாஸ்திரத்தை இச்சரீரத்துடனேயே பரிசீலனை செய்தாலும்

ஒரு வித தோஷமும் வராது. இருந்தபோதிலும் சிஷ்டாசாரத்தை யனுஸரித்து அதைப் பரிபாலிக்கவேண்டுமென்னு மெண்ணத்தால் வேறொரு சரீரத்தையடைந்து இக்காரியத்தை யநுஷ்டிக்க யத்நனிக்கிறேன் என்றார்கள். இதைக் கேட்டதும் சிஷ்யர்களுக்கிருந்த ஸந்தேகம் நீங்கிற்று. நமதாசார்ய ஸ்வாமிகளும் அவர்களுக்கு இன்னுமனேக ஸத்கதைகளைச் சொல்லிக்கொண்டு அவர்களுடன் ஒரு கிரி சிருங்கத்தை (மலையினுச்சியை) யடைந்து அவ்விடத்தில் நிர்மலமான ஓரிடத்தில் சிஷ்யர்களையெல்லாம் கூட்டி அவர்களுக்குத் தாம் வேறு சரீரத்தில் பிரவேசித்துக் காம சாஸ்திரத்தை யாராய்ந்து திரும்புமளவும் அவர்கள் அங்கேதானே இருந்துகொண்டு தமது நிஜ சரீரத்தை மிக சிரத்தையுடன் பாதுகாக்கவேண்டுமென்றும், அதில் கொஞ்சமேனும் அஜாக்கிரதையாக இருக்கக்கூடாதென்றும் கட்டளையிட்டுப்பிறகு யோகாப்பியாஸத்தால் தமது சரீரத்தைவிட்டு, அமருகனென்னும் அரசனது சரீரத்தில் பிரவேசித்தார்கள்.

இம்மஹான் பிரவேசித்த தக்ஷணமே அவ்வரசனுடைய சரீரத்தில் ரத்தம் ஓடவாரம்பித்தது. முகத்திலும் ஜீவகளை தோன்றியது. இறந்து கிடந்த அமருகன் மெதுவாகக் கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு கண்ணைத் திறந்து பார்த்தான். இதைக்கண்டதும் அவனது பத்னிகளெல்லோரும் ஆனந்தபரவசர்களாய்க் கூத்தாடினார்கள். மந்திரிகளும் தேசம் முழுவதும் வாத்தியகோஷம் செய்வித்தார்கள். அன்றைய தினத்தில் அவ்வூரில் எங்கே கண்டாலும் உத்ஸாகமும் கோலாகலமுமாயிருந்தது.

இவ்வாறு அமருகன் மறுபடி ஜீவித்தெழுந்ததும் அரண்மனைக்குட்சென்று புரோஹிதர்களைக்கொண்டு சாந்தி முத



மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்
சென்னை-600090

ஸனைகளைச் செய்வித்து, ஸ்வர்க்க லோகத்தில் இந்திரனைப்போல பூமியில் கிஞ்சித்தேனும் நீதிநெறி தவறாது ஆண்டுவந்தார். இவருடைய கீர்த்தி எண்டிசைகளிலும் பரவியது. பிரஜைகளெல்லோருமே இவரது ஆட்சியில் அதுவரையில் கண்டறியாத ஸுகங்களையெல்லாம் அனுபவித்தார்கள். மந்திரிகளும் இவருடைய அபூர்வ ஸாமர்த்தியத்தையும் உதாரகுணத்தையும், வாக்கின் காம்பீர்யத்தையும், எல்லாவற்றிற்கும் மேம்பட்ட மேதையையும் கண்டு மிகவும் வியந்தார்கள்.

அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளும் இவரது ஸௌந்தர்யத்தையும், காமசாஸ்திரத்தில் இவருக்குள்ள பாண்டித்யத்தையும், எப்பொழுதும் புதிது புதிதாக இவர் செய்யும் காமலீலைகளையும், இவரது வாக்சாதுர்யத்தையும், மனதின் உத்ஸாகத்தையும், தேகத்தின் காந்தியையும், புத்தியின் நுட்பத்தையும் கண்டு மிகக்களித்து, ஸதா இவருடன் ரமித்து, விஷயானந்தத்தில் மூழ்கினார்கள். சுருக்கிச் சொல்லுங்கால் இவர் அரசாண்டகாலம் கலியுகமாக இருந்தபோதிலும் கிருதயுகம்போல் எல்லாருக்கும் தோன்றியது. காலத்தில் மழையும், தேசத்தில் ஸுபிக்ஷமும், பாபத்தில் பீதியும், மோக்ஷத்திலாசையும் உண்டாயிற்று. இவற்றையெல்லாம் ஆலோசிக்குமிடத்து மந்திரிகளுக்கு ஓர்வித ஆசங்கையுண்டாயிற்று. நம்முடையவும் நமது பிரஜைகளுடையவும் அதிர்ஷ்டவசத்தால் நமது அரசன் மீண்டும் உயிர்த்தெழுந்ததுமன்றி அவர் முன்போலல்லாமல் வேறாக மாறி அபார ஸாமர்த்தியத்துடன் ஸர்வஞ்ஞராக விருப்பதும் நம்மெல்லோருடையவும் பாக்கியமே. ஆனால் நன்காராயுங்கால், நமது அரசனே இவர் என்று தோற்றவில்லை. யாரோ ஒரு மஹான் நம்மி

டத்துக் கருணைகூர்ந்து நமது பூர்வஜன்ம ஸுக்ருதவசத்தால் இவ்வுடலில் பிரவேசித்து இருக்கிறார் போலும். ஆதலின் இவர் எப்பொழுதுமே நம்மையாண்டுகொண்டு இங்கேயே இருக்கும்படியான உபாயத்தைத் தேடவேண்டும். இம்மஹான் தமது நிஜ சரீரத்தை எங்கேயாவது விட்டு விட்டுத்தான் இவ்வுடலுக்குள் வந்திருப்பார். அச்சரீரத்தை நாசப்படுத்தி விட்டோமேயானால் இவர் இச்சரீரத்திலேயே தங்கிவிடுவர் என்பதாக யோசித்து, ஏவலாளர்களைக் கூப்பிட்டு, இப்பூமி முழுவதும் சுற்றியலைந்து எந்த இடத்திலேனும் இறந்துகிடக்கும் சரீரங்கள் இருந்தால் அவை எந்தப்பிராணிகளுடையதா யிருந்தாலும் ஸரி, அவற்றை உடனே எடுத்துப் பொசுக்கிவிடும்படிக்கும், கொஞ்சமேனும் தவறுமல் அதிசீக்கிரத்தில் அவ்வேலையை முடிக்கவேண்டுமென்றும் கண்டிப்பான உத்திரவு கொடுத்தார்கள். இது இங்ஙனம் நிற்க.

நமதாசார்ய ஸ்வாமிகள் தமது நிஜசரீரத்தை விட்டு வந்த கிரிசிருங்கத்தில் அச்சரீரத்தை வெகு ஸாவதானத்துடன் அவர் சிஷ்யர்கள் பாதுகாத்து வந்தார்கள். ஓர் நிர்மலமான பிரதேசத்தில் அவ்வுடலைச் சுற்றிலும் எல்லோருமாக உட்கார்ந்துகொண்டு தங்களது குருவாகிய ஆசார்ய ஸ்வாமிகள் அருளிச்செய்த “**भज गोविन्दम्**” பஜகோவிந்தம் என்று வழங்கும் சுலோகங்களைப் பாடிக்கொண்டும் அச்சுலோகங்கள் மாதிரியாகவே தாங்களும் புதிதாகக் கவனம் செய்துகொண்டும், ஸதா ஒருவருக்கொருவர் வேதாந்தவிஷயத்திலேயே ஸத்காலக்ஷேபம் செய்துகொண்டும் இராப்பகலாகச் சோர்வின்றி வெகு ஜாகரூகர்களாக விருந்தார்கள். மேற்கூறிய பஜகோவிந்தமென்னும் சுலோகங்களைத் தான்

**மோஹமுத்கர** மென்று சொல்வார்கள். அதாவது மோஹத்தை தொலைக்கும் ஓர் சம்மட்டியென்று அர்த்தம். இந்த கிரந்தம் 12 சுலோகங்களுள்ளது. இதில் மிகவும் எளிய நடையில் வேதாந்த விஷயங்களை பாமர ஜனங்களுக்கு ஆசார்யஸ்வாமிகள் நன்கு போதிக்கிறார்கள். வியாகரணம் முதலிய சாஸ்திரங்களை ஸதா ஸர்வகாலமும் பரிசயம் செய்து கொண்டு காலத்தைக் கழிப்பதில் பிரயோஜனமில்லை. அவை மரணகாலத்தில் ஒருவனுக்கும் உபயோகப்படமாட்டா. கோவிந்தனையே எப்பொழுதும் பஜனம் செய்யவேண்டும். அதுதான் கரையேற்றும், எனப்பொருள்படும் "பஜகோவிந்தம்" என்னும் சுலோகத்தைப் பல்லவியாகச் செய்து இப்பன்னிரண்டு சுலோகங்களையு மியற்றியிருக்கிறார்கள். இதை அனுஸரித்தே இவர்களுடைய சிஷ்யர்களும் அநேக சுலோகங்கள் செய்திருக்கிறார்கள். அவைகளெல்லாவற்றையுமிங்குப் பதிப்பித்திருக்கிறோம்.

ஸ்ரீமத்சங்கரபகவத்பாத ஆசார்யஸ்வாமிகள்.





10.

## பஜகோவிந்தம்.

भज गोविन्दं भज गोविन्दं
भज गोविन्दं मूढमते ।
संप्राप्ते सन्निहिते काले
नहि नहि रक्षति डुकृञ्करणे ॥ १ ॥

मूढ जहीहि धनागमतृष्णां
कुरु सद्बुद्धिं मनसि वितृष्णाम ।
यल्लभसे निजकर्मोपात्तं वित्तं
तेन विनोदय चित्तम ॥ १ ॥ भज गो०

नारीस्तनभरनाभिनिवेशं
    मिथ्यामाया मोहावेशम् ।
एतन्मांसवसादिविकारं
    मनसि विचारय वारंवारम् ॥ २ ॥     भज गो०

नलिनीदलगतजलमतितरलं
    तद्वज्जीवितमतिशयचपलम् ।
विद्धि व्याध्यभिमानग्रस्तं
    लोकं शोकहतं च समस्तम् ॥ ३ ॥     भज गो०

यावद्वित्तोपार्जनसक्त-
    स्तावन्निजपरिवारो रक्तः ।
पश्चाद्धावति जर्जरदेहे
    वार्तां पृच्छति कोऽपि न गेहे ॥ ४ ॥     भज गो०

यावज्जीवो निवसति देहे
    तावत्कुशलं पृच्छति गेहे ।
गतवति वायौ देहापाये
    भार्या बिभ्यति तस्मिन्काये ॥ ५ ॥     भज गो०

अर्थमनर्थं भावय नित्यं
    नास्ति ततः सुखलेशः सत्यम् ।
पुत्रादपि धनभाजां भीतिः
    सर्वत्रैषा विहिता रीतिः ॥ ६ ॥     भज गो०

बालस्तावत्क्रीडासक्त-
    स्तरुणस्तावत्तरुणीरक्तः ।

वृद्धस्तावच्चिन्तामग्नः

परे ब्रह्मणि कोऽपि न लग्नः ॥ ७ ॥ भज गो०

का ते कान्ता कस्ते पुत्रः

संसारोऽयमतीव विचित्रः ।

कस्य त्वं कः कुत आयात-

स्तत्त्वं चिन्तय यदिदं भ्रान्तः ॥ ८ ॥ भज गो०

सत्सङ्गत्वे निस्सङ्गत्वं

निस्सङ्गत्वे निर्मोहत्वम् ।

निर्मोहत्वे निश्चलतत्वं

निश्चलतत्वे जीवन्मुक्तिः ॥ ९ ॥ भज गो०

वयसि गते कः कामविकारः

शुष्के नीरे कः कासरः ।

नष्टे द्रव्ये कः परिवारो

ज्ञाते तत्त्वे कः संसारः ॥ १० ॥ भज गो०

मा कुरु जनधनयौवनगर्वं

हरति निमेषात्कालः सर्वम् ।

मायमयमिदमखिलं हित्वा

ब्रह्मपदं त्वं प्रविश विदित्वा ॥ ११ ॥ भज गो०

दिनमपि रजनी सायं प्रातः

शिशिरवसन्तौ पुनरायातः ।

कालः क्रीडति गच्छत्यायु-

स्तदपि न मुंचत्याशावायुः ॥ १२ ॥ भज गो०

कामं क्रोधं लोभं मोहं
त्यक्त्वात्मानं भावय कोऽहम् ।
आत्मज्ञानविहीना मूढा-
स्ते पच्यन्ते नरकनिगूढाः ॥ १३ ॥ भज गो०

सुरमन्दिरतरुमूलनिवासः
शय्या भूतलमजिनं वासः ।
सर्वपरिग्रहभोगत्यागः
कस्य सुखं न करोति विरागः ॥ १४ ॥ भज गो०

शत्रौ मित्रे पुत्रे बन्धौ
मा कुरु यत्नं विग्रहसन्धौ ।
भव समचित्तः सर्वत्र त्वं
वाञ्छस्यचिराद्यदि विष्णुत्वम् ॥ १५ ॥ भज गो०

त्वयि मयि चान्यत्रैको विष्णु
र्व्यर्थं कुप्यसि सर्वसहिष्णुः ।
सर्वस्मिन्नपि पश्यात्मनं
सर्वत्रोत्सृज भेदाज्ञानम् ॥ १६ ॥ भज गो०

प्राणायामं प्रत्याहारं
नित्यानित्यविवेकविचारम् ।
जाप्यसमेतसमाधिविधानं
कुर्ववधानं महदवधानम् ॥ १७ ॥ भज गो०

का तेऽष्टादशदेशे चिन्ता
वातुल किं तव नास्ति नियन्ता ।

यस्त्वां हस्ते सुदृढनिबद्धं

बोधयति प्रभवादिविरुद्धम् ॥ १८ ॥ भज गो०

गुरुचरणांबुजनिर्भरभक्तः

संसारादचिराद्भव मुक्तः ।

सेन्द्रियमानसनियमादेव

द्रक्ष्यसि निजहृदयस्थं देवम् ॥ १९ ॥ भज गो०

अग्रे वन्हिः पृष्ठे भानू

रात्रौ चुबुकसमर्पितजानुः ।

करतलभिक्षा तरुतलवास-

स्तदपि न मुंचत्याशापाशः ॥ २० ॥ भज गो०

जटिली मुंडी लुंचितकेशः

काषायांबरबहुकृतवेषः ।

पश्यन्नपि च न पश्यतिमूढ

उदरनिमित्तं बहुकृतवेषः ॥ २१ ॥ भज गो०

भगवद्गीता किंचिदधीता

गङ्गाजललवकणिका पीता ।

सकृदपि यस्य मुरारिसमर्चा

तस्य यमः किं कुरुते चर्चा ॥ २२ ॥ भज गो०

अङ्गं गलितं पलितं मुण्डं

दशनविहीनं जातं तुण्डम् ।

वृद्धो याति गृहीत्वा दण्डं

तदपि न मुंचत्याशपिण्डम् ॥ २३ ॥ भज गो०

पुनरपि जननं पुनरपि मरणं
पुनरपि जननी जठरे शयनम् ।
इह संसारे भवदुस्तारे
कृपयाऽपरे पाहि मुरारे ॥ २४ ॥ भज गो०

पुनरपि रजनी पुनरपि दिवसः
पुनरपि पक्षः पुनरपि मासः ।
पुनरध्ययनं पुनरपि वर्षे
तदपि न मुंचत्याशामर्षम् ॥ २५ ॥ जभ गो०

कस्त्वं कोऽहं कुत आयातः
का मे जननी को मे तातः ।
इति परिभावय सर्वमसारं
विश्वं त्यक्त्वा स्वप्नविचारम् ॥ २६ ॥ भज गो०

गेयं गीतानामसहस्रं
ध्येयं श्रीपतिरूपमजस्रम् ।
नेयं सज्जनसङ्गे चित्तं
देयं दीनजाय च वित्तम् ॥ २७ ॥ भज गो०

सुखतः क्रियते रामाभोगः
पश्चाद्धन्त शरीरे रोगः ।
यद्यपि लोके मरणं शरणं
तदपि न मुंचति पापाचरणम् ॥ २८ ॥ भज गो०

रथ्याचर्पटविरचितकंथः
पुण्यापुण्यविवर्जितपंथः ।

## பஜகோவிந்தம்.

नाहं नत्वं नायं लोक-
स्तदपि किमर्थं क्रियते शोकः ॥ २९ ॥ भज गो०

कुरुते गङ्गासागरगमनं
व्रतपरिपालनमथवा दानम् ।
ज्ञानविहीने सर्वमनेन
मुक्तिर्नभवति जन्मशतेन ॥ ३० ॥ भज गो०

योगरतो वा भोगरतो वा
सङ्गरतो वा सङ्गविहीनः ।
यस्य ब्रह्मणि रमते चित्तं ।
नन्दति नन्दति नन्दत्येव ॥ ३१ ॥ भज गो०

---

𑌭𑌜 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌂 𑌭𑌜 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌂
𑌭𑌜 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌂 𑌮𑍂𑌢𑌮𑌤𑍇 ।
𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌸𑌨𑍍𑌨𑌿𑌹𑌿𑌤𑍇 𑌕𑌾𑌲𑍇
𑌨𑌹𑌿 𑌨𑌹𑌿 𑌰𑌕𑍍𑌷𑌤𑌿 𑌡𑍁𑌕𑍃𑌞𑍍𑌕𑌰𑌣𑍇 ॥ 𑌭𑌜 𑌗𑍋०

𑌮𑍂𑌢 𑌜𑌹𑍀𑌹𑌿 𑌧𑌨𑌾𑌗𑌮𑌤𑍃𑌷𑍍𑌣𑌾𑌂
𑌕𑍁𑌰𑍁 𑌸𑌦𑍍𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌮𑌨𑌸𑌿 𑌵𑌿𑌤𑍃𑌷𑍍𑌣𑌾𑌮𑍍 ।
𑌯𑌲𑍍𑌲𑌭𑌸𑍇 𑌨𑌿𑌜𑌕𑌰𑍍𑌮𑍋𑌪𑌾𑌤𑍍𑌤𑌂 𑌵𑌿𑌤𑍍𑌤𑌂
𑌤𑍇𑌨 𑌵𑌿𑌨𑍋𑌦𑌯 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 ॥ ௧ ॥ 𑌭𑌜 𑌗𑍋०

𑌨𑌾𑌰𑍀𑌸𑍍𑌤𑌨𑌭𑌰 𑌨𑌾𑌭𑍀𑌦𑍇𑌶𑌂
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌮𑌾𑌗𑌾 𑌮𑍋𑌹𑌾𑌵𑍇𑌶𑌮𑍍 ।
𑌏𑌤𑌨𑍍𑌮𑌾𑌂𑌸𑌵𑌸𑌾𑌦𑌿𑌵𑌿𑌕𑌾𑌰𑌂
𑌮𑌨𑌸𑌿 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯 𑌵𑌾𑌰𑌂 𑌵𑌾𑌰𑌮𑍍 ॥ ௨ ॥ 𑌭𑌜 𑌗𑍋०

# பஜகோவிந்தம்.

𑌨𑌲𑌿𑌨𑍀𑌦𑌲𑌗𑌤𑌜𑌲𑌮𑌤𑌿𑌤𑌰𑌲𑌂
𑌤𑌦𑍍𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑌤𑌿𑌶𑌯𑌚𑌪𑌲𑌮𑍍 ।
𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌵𑍍𑌯𑌾𑌧𑍍𑌯𑌭𑌿𑌮𑌾𑌨𑌗𑍍𑌰𑌸𑍍𑌤𑌂
𑌲𑍋𑌕𑌂 𑌶𑍋𑌕𑌹𑌤𑌂 𑌚 𑌸𑌮𑌸𑍍𑌤𑌮𑍍 ॥ ௩ ॥ 𑌭𑌜 𑌗𑍋॰

𑌯𑌾𑌵𑌦𑍍𑌵𑌿𑌤𑍍𑌤𑍋𑌪𑌾𑌰𑍍𑌜𑌨𑌸𑌕𑍍𑌤-
𑌸𑍍𑌤𑌾𑌵𑌨𑍍𑌨𑌿𑌜𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑍋 𑌰𑌕𑍍𑌤𑌃 ।
𑌪𑌶𑍍𑌚𑌾𑌜𑍍𑌜𑍀𑌵𑌤𑌿 𑌜𑌰𑍍𑌜𑌰𑌦𑍇𑌹𑍇
𑌵𑌾𑌰𑍍𑌤𑌾𑌂 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌪𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 𑌗𑍇𑌹𑍇 ॥ ௪ ॥ 𑌭𑌜 𑌗𑍋॰

𑌯𑌾𑌵𑌜𑍍𑌜𑍀𑌵𑍋 𑌨𑌿𑌵𑌸𑌤𑌿 𑌦𑍇𑌹𑍇
𑌕𑍁𑌶𑌲𑌂 𑌤𑌾𑌵𑌤𑍍𑌪𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 𑌗𑍇𑌹𑍇 ।
𑌗𑌤𑌵𑌤𑌿 𑌵𑌾𑌯𑍌 𑌦𑍇𑌹𑌾𑌪𑌾𑌯𑍇
𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌬𑌿𑌭𑍍𑌯𑌤𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌕𑌾𑌯𑍇 ॥ ௫ ॥ 𑌭𑌜 𑌗𑍋॰

𑌅𑌰𑍍𑌥𑌮𑌨𑌰𑍍𑌥𑌂 𑌭𑌾𑌵𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂
𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌤𑌤𑌃 𑌸𑍁𑌖𑌲𑍇𑌶𑌃 𑌸𑌤𑍍𑌯𑌮𑍍 ।
𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌦𑌪𑌿 𑌧𑌨𑌭𑌾𑌜𑌾𑌂 𑌭𑍀𑌤𑌿𑌃
𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑍈𑌷𑌾 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾 𑌰𑍀𑌤𑌿𑌃 ॥ ௬ ॥ 𑌭𑌜 𑌗𑍋॰

𑌬𑌾𑌲𑌸𑍍𑌤𑌾𑌵𑌤𑍍𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌸𑌕𑍍𑌤-
𑌸𑍍𑌤𑌰𑍁𑌣𑌸𑍍𑌤𑌾𑌵𑌤𑍍𑌤𑌰𑍁𑌣𑍀𑌰𑌕𑍍𑌤𑌃 ।
𑌵𑍃𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑌾𑌵𑌚𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌮𑌗𑍍𑌨𑌃
𑌪𑌰𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌨 𑌲𑌗𑍍𑌨𑌃 ॥ ௭ ॥ 𑌭𑌜 𑌗𑍋॰

𑌕𑌾 𑌤𑍇 𑌕𑌾𑌨𑍍𑌤𑌾 𑌕𑌸𑍍𑌤𑍇 𑌪𑍁𑌤𑍍𑌰𑌃
𑌸𑌂𑌸𑌾𑌰𑍋𑌽𑌯𑌮𑌤𑍀𑌵 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌃 ।
𑌕𑌸𑍍𑌯 𑌤𑍍𑌵𑌂 𑌕𑌃 𑌕𑍁𑌤 𑌆𑌯𑌾𑌤-
𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯 𑌯𑌦𑌿𑌦𑌂 𑌭𑍍𑌰𑌾𑌤𑌃 ॥ ௮ ॥ 𑌭𑌜 𑌗𑍋॰

# பஜகோவிந்தம்.

𑌸𑌤𑍍𑌸𑌙𑍍𑌗𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌸𑍍𑌸𑌙𑍍𑌗𑌤𑍍𑌵𑌂
𑌨𑌿𑌸𑍍𑌸𑌙𑍍𑌗𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌹𑌤𑍍𑌵𑌂 |
𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌹𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌤𑌤𑍍𑌵𑌂
𑌨𑌿𑌶𑍍𑌚𑌲𑌤𑌤𑍍𑌵𑍇 𑌜𑍀𑌵𑌨𑍍𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌃 || ௯ || 𑌭𑌜 𑌗𑍋

𑌵𑌯𑌸𑌿 𑌗𑌤𑍇 𑌕𑌃 𑌕𑌾𑌮𑌵𑌿𑌕𑌾𑌰𑌃
𑌶𑍁𑌷𑍍𑌕𑍇 𑌨𑍀𑌰𑍇 𑌕𑌃 𑌕𑌾𑌸𑌾𑌰𑌃 |
𑌨𑌷𑍍𑌟𑍇 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍇 𑌕𑌃 𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑍋
𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌕𑌃 𑌸𑌂𑌸𑌾𑌰𑌃 || ௰ || 𑌭𑌜 𑌗𑍋

𑌮𑌾 𑌕𑍁𑌰𑍁 𑌧𑌨𑌜𑌨𑌯𑍌𑌵𑌨𑌗𑌰𑍍𑌵𑌂
𑌹𑌰𑌤𑌿 𑌨𑌿𑌮𑍇𑌷𑌾𑌤𑍍𑌕𑌾𑌲𑌃 𑌸𑌰𑍍𑌵𑌂 |
𑌮𑌾𑌯𑌾𑌮𑌯𑌮𑌿𑌦𑌮𑌖𑌿𑌲𑌂 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑌦𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶 𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾 || ௰௧ || 𑌭𑌜 𑌗𑍋

𑌦𑌿𑌨𑌯𑌾𑌮𑌿𑌨𑍍𑌯𑍌 𑌸𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌤𑌃
𑌶𑌿𑌶𑌿𑌰𑌵𑌸𑌨𑍍𑌤𑍌 𑌪𑍁𑌨𑌰𑌾𑌯𑌾𑌤𑌃 |
𑌕𑌾𑌲𑌃 𑌕𑍍𑌰𑍀𑌡𑌤𑌿 𑌗𑌚𑍍𑌛𑌤𑍍𑌯𑌾𑌯𑍁-
𑌸𑍍𑌤𑌦𑌪𑌿 𑌨 𑌮𑍁𑌞𑍍𑌚𑌤𑍍𑌯𑌾𑌶𑌾𑌵𑌾𑌯𑍁𑌃 || ௧௨ || 𑌭𑌜 𑌗𑍋

𑌕𑌾𑌮𑌂 𑌕𑍍𑌰𑍋𑌧𑌂 𑌲𑍋𑌭𑌂 𑌮𑍋𑌹𑌂
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌭𑌾𑌵𑌯 𑌕𑍋𑌽𑌹𑌂 |
𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌹𑍀𑌨𑌾 𑌮𑍂𑌢𑌾-
𑌸𑍍𑌤𑍇 𑌪𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌨𑌰𑌕𑌨𑌿𑌗𑍂𑌢𑌾𑌃 || ௰௩ || 𑌭𑌜 𑌗𑍋

𑌸𑍁𑌰𑌮𑌨𑍍𑌦𑌿𑌰 𑌤𑌰𑍁𑌮𑍂𑌲𑌨𑌿𑌵𑌾𑌸𑌃
𑌶𑌯𑍍𑌯𑌾 𑌭𑍂𑌤𑌲𑌮𑌜𑌿𑌨𑌂 𑌵𑌾𑌸𑌃 |
𑌸𑌰𑍍𑌵𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌭𑍋𑌗𑌤𑍍𑌯𑌾𑌗𑌃
𑌕𑌸𑍍𑌯 𑌸𑍁𑌖𑌂 𑌨 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌵𑌿𑌰𑌾𑌗𑌃 || ௰௪ || 𑌭𑌜 𑌗𑍋

# பஜகோவிந்தம்.

ஶத்ரௌ மித்ரே புத்ரே பந்தௌ
மா குரு யத்நம் விக்ரஹஸந்தௌ |
பவ ஸமசித்த: ஸர்வத்ர த்வம்
வாஞ்சஸ்யசிராத்யதி விஷ்ணுத்வம் || ௰௫ || பஜ கோ

த்வயி மயி சாந்யத்ரைகோ விஷ்ணு
ர்வ்யர்த்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணு: |
ஸர்வஸ்மிந்நபி பஶ்யாத்மாநம்
ஸர்வத்ரோத்ஸ்ருஜ பேதாஜ்ஞாநம் || ௰௬ || பஜ கோ

ப்ராணாயாமம் ப்ரத்யாஹாரம்
நித்யாநித்யவிவேகவிசாரம் |
ஜாப்யஸமேதஸமாதிவிதாநம்
குர்வவதாநம் மஹதவதாநம் || ௰௭ || பஜ கோ

கா தேஷ்டாதஶதேஶே சிந்தா
வாதுல கிம் தவ நாஸ்தி நியந்தா |
யஸ்த்வாம் ஹஸ்தே ஸுத்ருடநிபத்தம்
போதயதி ப்ரபவாதிவிருத்தம் || ௰௮ || பஜ கோ

குருசரணாம்புஜநிர்பர பக்த:
ஸம்ஸாராதசிராத்பவ முக்த: |
ஸேந்த்ரியமாநஸநியமாதேவம்
த்ரக்ஷ்யஸி நிஜஹ்ருதயஸ்தம் தேவம் || ௰௯ || பஜ கோ

க்ஷேத்ரே வஸதி: பதேஷு ஶாநோ
மாத்ரே ஜபம் ஸகலஸ்வீக்ருதஜாநம் |
கா தவ ஶிக்ஷா கா ச தவாஸ-
ஸ்தூஷ்வபி ந கிம் த்ருஷாவாஸ: || ௨௰ || பஜ கோ

# பஜகோவிந்தம்.

ஜடிலோ முண்டீ லுஞ்சித கேஶ:
காஷாயாம்பரபஹுக்ருதவேஷ: ।
பஶ்யந்நபி ச ந பஶ்யதி மூடோ
உதரநிமித்தம் பஹுக்ருதவேஷ: ॥ ௨௧ ॥ பஜ கோ.

பகவத்கீதா கிஞ்சிததீதா
கங்காஜலலவகணிகா பீதா ।
ஸக்ருதபி யஸ்ய முராரிஸமர்சா
தஸ்ய யம: கிம் குருதே சர்சா ॥ ௨௨ ॥ பஜ கோ.

அங்கம் கலிதம் பலிதம் முண்டம்
தஶநவிஹீநம் ஜாதம் துண்டம் ।
வ்ருத்தோ யாதி க்ருஹீத்வா தண்டம்
ததபி ந முஞ்சத்யாஶாபிண்டம் ॥ ௨௩ ॥ பஜ கோ.

புநரபி ஜநநம் புநரபி மரணம்
புநரபி ஜநநீ ஜடரே ஶயநம் ।
இஹ ஸம்ஸாரே பஹுதுஸ்தாரே
க்ருபயாऽபாரே பாஹி முராரே ॥ ௨௪ ॥ பஜ கோ.

புநரபி ரஜநீ புநரபி திவஸ:
புநரபி பக்ஷ: புநரபி மாஸ: ।
புநரப்யயநம் புநரபி வர்ஷம்
ததபி ந முஞ்சத்யாஶாமர்ஷம் ॥ ௨௫ ॥ பஜ கோ.

கஸ்த்வம் கோऽஹம் குத ஆயாத:
கா மே ஜநநீ கோ மே தாத: ।
இதி பரிபாவய ஸர்வமஸாரம்
விஶ்வம் த்யக்த்வா ஸ்வப்நவிசாரம் ॥ ௨௬ ॥ பஜ கோ.

# பஜகோவிந்தம்.

கேயம் கீதா நாமஸஹஸ்ரம்
த்⁴யேயம் ஶ்ரீபதிரூபமஜஸ்ரம் |
நேயம் ஸஜ்ஜநஸங்கே³ சித்தம்
தே³யம் தீ³நஜநாய ச வித்தம் || ௨௭ || பஜ கோ°

ஸுக²த: க்ரியதே ராமாபோ⁴க³:
பஶ்சாத்³த⁴ந்த ஶரீரே ரோக³: |
யத்³யபி லோகே மரணம் ஶரணம்
தத³பி ந முஞ்சதி பாபாசரணம் || ௨௮ || பஜ கோ°

ரத்²யாசர்படவிரசிதகந்த²:
புண்யாபுண்யவிவர்ஜிதபந்த²: |
நாஹம் ந த்வம் நாயம் லோக-
ஸ்தத³பி கிமர்த²ம் க்ரியதே ஶோக: || ௨௯ || பஜ கோ°

குருதே க³ங்கா³ஸாக³ரக³மநம்
வ்ரதபரிபாலநமத²வா தா³நம் |
ஜ்ஞாநவிஹீநே ஸர்வமதேந
முக்திம் ந ப⁴ஜதி ஜந்மஶதேந || ௩௰ || பஜ கோ°

யோக³ரதோ வா போ⁴க³ரதோ வா
ஸங்க³ரதோ வா ஸங்க³விஹீந: |
யஸ்ய ப்³ரஹ்மணி ரமதே சித்தம்
நந்த³தி நந்த³தி நந்த³த்யேவ || ௩௧ || பஜ கோ°





## II.

## லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்தோத்ரம்.

ற்றிலும் உட்கார்ந்து சிஷ்யர்களெல்லாரும் ஸ்ரீசங்கரருடைய ஸ்வந்த சரீரத்தைப் பாதுகாத்துக்கொண்டு தங்களது குருவானவர் திரும்பி வருகிறதற்கு நாளையெண்ணிக்கொண்டிருக்கையில், ஒரு நாள் அமருகனுடைய மந்திரிகளாலேவப்பட்ட ஸேவகர்கள் அவ்விடத்திற்கு வந்து அச்சரீரத்தைக் கண்ணுற்றதும் உடனே

ரத்தைக் கொண்டுபோய் தகனம் செய்யவேண்டிய யத்னங்கள் செய்தார்கள். சிஷ்யர்கள் வெகுவாகப் போராடியும் அவர்கள் கேட்கவில்லை. முரட்டுத்தனமாய் அச்சரீரத்தை எடுத்துக்கொண்டு ருத்ரபூமிக்குப் போய்விட்டார்கள். உடனே ஸ்ரீபத்மபாதர் முதலிய சிஷ்யர்கள் எல்லாரும் அமருகனுடைய அரண்மனை வாயிலண்டை உரக்க பஜனம் செய்துகொண்டு ஓடி வந்தார்கள். அரசனோ அச்சமயத்தில் அந்தப்புரத்தில் ஸ்திரீகளுடன் விஷயஸுகத்தில் ஆழ்ந்திருந்தனர். சிருங்காரரஸபிரதானமான கிரந்தம்கூட ஒன்று இச்சமயத்தில் இயற்றியிருக்கிறார். அதற்கு **அமருகசதகம்** என்று பெயர். இந்த மாதிரியாக விஷயத்தில் மூழ்கிக்கிடந்த இவ்வரசனுடைய காதிற்படும்படி உரத்த குரல்களால் பின்வருமாறு பல சுலோகங்களை மேற்கூறிய சிஷ்யர்கள் பாடினார்கள்.

नेति नेत्यादि निगमवचनेन निपुणं निषिध्य मूर्तामूर्तराशिम् ।
यदशक्यनिह्नवं स्वात्मरूपतया जानन्तिकोविदास्तत्वमसि तत्वम् ॥

நேதி நேத்யாதி நிகமவசநேந
நிபுணம் நிஷித்ய மூர்த்தாமூர்த்தராசிம் ।
யதசக்யநிஹ்நவம் ஸ்வாத்மரூபதயா
ஜாநந்திகோவிதாஸ்தத்வமஸி தத்வம் ॥

"ஓ! ராஜனே! தாங்கள் ஸாதாரணமான அரசனல்ல. இதுவன்று, இதுவன்று என்று வேதவசனங்களால் ஸமஸ்த சராசரங்களும் நிஷேதிக்கப்பட்டு—ஆனால் யோகிகளுடைய ஸ்வாத்மானுபவத்தினால் முற்றுமே ஒன்றுமல்லவென்று மறுக்கக்கூடாததாயும் மஹான்களுக்குமட்டில் தெரிந்ததாயும் எந்த வஸ்துவிருக்கிறதோ அதுவே தான் தாங்கள்." என்று இதுமாதிரியான பற்பல சுலோகங்கள் அவ்வரசன்

## லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்தோத்ரம்.

காதிப்படவே அவனுவிலிருந்த ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளும் திடீரென்று அச்சரீரத்தை விட்டகன்று தமது நிஜ சரீரத்தைத் தாம் விட்டுவந்த பிரதேசத்தில் காணாமையால் உடனே ருத்திரபூமிக்குச் சென்று அங்கு அதை ராஜ கிங்கரர்கள் சிதையில் வைத்து தஹனம்செய்ய ஆரம்பித்திருப்பதைக்கண்டு ஜடிதியில் அதற்குள் பிரவேசித்தார்கள். மீண்டும் உயிர் வந்ததையும் கவனியாமல் அக்கிங்கரர்கள் நெருப்பைப் போட்டுவிடவே இம்மஹானும் அச்சமயத்தில் லக்ஷ்மீந்ருஸிம்ஹனை பனிரண்டு சுலோகங்களால் துதி செய்தனர்.

## ॥ लक्ष्मीनृसिंहस्तोत्रम् ॥

श्रीमत्पयोनिधिनिकेतन चक्रपाणे
भोगीन्द्रभोगमणिरञ्जितपुण्यमूर्ते ।
योगीश शाश्वत शरण्य भवाब्धिपोत
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ १ ॥

ब्रह्मेन्द्ररुद्रमरुदर्ककिरीटकोटि-
संघट्टिताङ्घ्रिकमलामलकान्तिकान्त ।
लक्ष्मीलसत्कुचसरोरुहराजहंस
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ २ ॥

संसारघोरगहने चरतो मुरारे
मारोग्रभीकरमृगप्रवरार्दितस्य ।
आर्तस्य मत्सरनिदाघनिपीडितस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ३ ॥

संसारकूपमतिघोरमगाधमूलं
संप्राप्य दुःखशतसर्पसमाकुलस्य ।
दीनस्य देव कृपणापदमागतस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ४ ॥

संसारसागरविशालकरालकाल-
नक्रग्रहग्रसननिग्रहविग्रहस्य ।
व्यग्रस्य रागरसनोर्मिनिपीडितस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ५ ॥

संसारवृक्षमघबीजमनन्तकर्म-
शाखाशतं करणपत्रमनङ्गपुष्पम् ।
आरुह्य दुःखफलितं पततो दयालो
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ६ ॥

संसारसर्पघनवक्त्रभयोग्रतीव्र-
दंष्ट्राकरालविषदग्धविनष्टमूर्तेः ।
नागारिवाहन सुधाब्धिनिवास शौरे
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ७ ॥

संसारदावदहनातुरभीकरोरु-
ज्वालावलीभिरतिदग्धतनूरुहस्य ।
त्वत्पादपद्मसरसीशरणागतस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ८

संसारजालपतितस्य जगन्निवास
सर्वेन्द्रियार्थबडिशार्थझषोपमस्य ।

प्रोत्खण्डितप्रचुरतालुकमस्तकस्य
　लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ९ ॥

संसारभीकरकरीशकराभिघात-
　निष्पिष्टमर्मवपुषः सकलार्तिनाश
प्राणप्रयाणभवभीतिसमाकुलस्य
　लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ १० ॥

अन्धस्य मे हृतविवेकमहाधनस्य
　चोरैः प्रभो बलिभिरिन्द्रियनामधेयैः ।
मोहान्धकूपकुहरे विनिपातितस्य
　लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ११ ॥

लक्ष्मीपते कमलनाभ सुरेश विष्णो
　वैकुण्ठ कृष्ण मधुसूदन पुष्कराक्ष ।
ब्रह्मण्य केशव जनार्दन वासुदेव
　देवेश देहि कृपणस्य करावलम्बम् ॥ १२ ॥

---

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்தோத்ரம் ||

ஸ்ரீமத்பயோநிதிநிகேதந சக்ரபாணே
　போகீந்த்ரபோகமணிரஞ்ஜித புண்யமூர்த்தே ।
யோகீச சாச்வத சரண்ய பவாப்திபோத
　லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் || க ||

ப்ரஹ்மேந்த்ர ருத்ர மருதர்க்க கிரீடகோடி-
　ஸங்கட்டிதாங்க்ரிகமலாமலகாந்திகாந்த ।

# லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்தோத்ரம்.

லக்ஷ்மீலஸத்குசஸரோருஹராஜஹம்ஸ
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் || ௨ ||

ஸம்ஸாரகோரகஹனே சரதோ முராரே
மாரோக்ரபீகரம்ருகப்ரவரார்திதஸ்ய |
ஆர்தஸ்ய மத்ஸரநிதாகநிபீடிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் || ௩ ||

ஸம்ஸாரகூபமதிகோரமகாதமூலம்
ஸம்ப்ராப்ய து:கசதஸர்பஸமாகுலஸ்ய |
தீநஸ்ய தேவ க்ருபணாபதமாகதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் || ௪ ||

ஸம்ஸாரஸாகரவிசாலகராலகால-
நக்ரக்ரஹக்ரஸனநிக்ரஹவிக்ரஹஸ்ய |
வ்யக்ரஸ்ய ராகரஸனோர்மிநிபீடிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் || ௫ ||

ஸம்ஸாரவ்ருக்ஷமகபீஜமனந்தகர்ம-
சாகாசதம் கரணபத்ரமனங்கபுஷ்பம் |
ஆருஹ்ய து:கபலிதம் பததோ தயாளோ
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் || ௬ ||

ஸம்ஸாரஸர்பகனவக்த்ரபயோக்ரதீவ்ர-
தம்ஷ்ட்ராகராளவிஷதக்தவிநஷ்டமூர்தே: |
நாகாரிவாஹன ஸுதாப்திநிவாஸ சௌரே
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் || ௭ ||

ஸம்ஸாரதாவதஹனாதுரபீகரோரு-
ஜ்வாலாவலீபிரதிதக்ததனூருஹஸ்ய |

## லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்தோத்ரம்.

த்வத்பாதபத்மஸரஸீம் ஶரணாகதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் || ௮ ||

ஸம்ஸாரஜாலபதிதஸ்ய ஜகந்நிவாஸ
ஸர்வேந்த்ரியார்த்தபடிஶார்த்தஜஷோபமஸ்ய |
ப்ரோத்கண்டிதப்ரசுரதாலுகமஸ்தகஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் || ௯ ||

ஸம்ஸாரபீகரகரீந்த்ரகராபிகாத
நிஷ்பீட்யமானவபுஷ: ஸகலார்த்திநாஶ |
ப்ராணப்ரயாணபவபீதிஸமாகுலஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் || ௰ ||

அந்தஸ்ய மே ஹ்ருதவிவேகமஹாதனஸ்ய
சோரைர்மஹாபலிபிரிந்த்ரியநாமதேயை: |
மோஹாந்தகாரகுஹரே விநிபாதிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மம தேஹி கராவலம்பம் || ௰௧ ||

லக்ஷ்மீபதே கமலநாப ஸுரேஶ விஷ்ணோ
வைகுண்ட க்ருஷ்ண மதுஸூதன புஷ்கராக்ஷ |
ப்ரஹ்மண்ய கேஶவ ஜநார்த்தன வாஸுதேவ
தேவேஶ தேஹி க்ருபணஸ்ய கராவலம்பம் ௰௨

இத்தகைய சுலோகங்களால் லக்ஷ்மீந்ருஸிம்ஹரைத் தமக்குக் கைகொடுத்துத் தூக்கும்படி பிரார்த்திக்க அத் தேவரும் உடனே பிரஸன்னராகித் தமது கருணையால், ஜ்வலித்துக்கொண்டிருந்த அக்னியை யணைத்து, கட்டுக்களை யெல்லாம் அறுத்துத், தமது கையாலேயே ஆசார்யஸ்வாமிகளைத் தூக்கிவிட்டுப் பிறகு அந்தர்த்தானமாயினர். இதைக்

கண்டதும் அங்கிருந்த அரசனது வேலையாட்கள் பயந்து நடுநடுங்கி யோட்டம்பிடித்தார்கள். நமதாசார்யஸ்வாமிகளும் உடனே தமது சிஷ்யர்களிடம் வந்து சேர்ந்தார்கள். அவர்களைக்கண்டதும் அச்சிஷ்யர்களுக்கிருந்த ஸந்தோஷத்திற்கோரளவில்லை. வெகுகாலம் விட்டுப் பிரிந்திருந்ததினால் தங்களது குருவைக்கண்டதும் அவர்களைச் சுற்றிச்சுற்றி ஆனந்தத்தால் கூத்தாடினார்கள்.

12.

# ஸரஸ்வதீஜயம்

## ஸுரேச்வரர் சிஷ்யரானது.

தமது சிஷ்யர்களுடன் ஸ்ரீசங்கரரும் ஸரஸ்வதியைப் பார்க்க மீளவும் மாஹிஷ்மதி நகரம் சென்றார்கள். அவ்விடத்தில் ஸ்ரீசங்கரரைக் கண்டதும் ஸ்ரீமண்டனமிச்ரரும் வெகுவாகப் பணிந்து மிகக்களித்து தம்முடைய கிருஹம் சரீரம் முதலிய ஸமஸ்தத்தையுமே அவர்களுக்கு அர்ப்பணஞ் செய்துவிட்டார்கள். ஸரஸ்வதீ தேவியும் இவர்களைக் கண்டதும் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்தாள்.

ईशानः सर्वविद्यानामीश्वरः सर्वदेहिनाम् ।
ब्रह्मणोऽधिपतिर्ब्रह्मा भवान्साक्षात्सदाशिवः ॥

ஈசாந: ஸர்வவித்யாநாமீச்வர: ஸர்வதேஹிநாம் ।
ப்ரஹ்மணோऽதிபதிர்ப்ரஹ்மா பவாந்ஸாக்ஷாத்ஸதாசிவ: ॥

தாங்கள் ஸகல வித்யைகளுக்கும் ஈசன். ஸமஸ்த பிராணிகளுக்கும் ஈச்வரன். பிரம்ஹாவுக்குமதிபதி. தாங்கள் ஸாக்ஷாத் ஸதாசிவனே.

"தாங்கள் இன்னும் காமசாஸ்திரத்தில் என்னை ஜயிக்காமலிருக்கும்பொழுதே நான் தங்களை ஸகல வித்யைகளுக்குமீசன் என்று கூறலாமோவெனின் தடையின்றி அப்படிச் சொல்லலாம். ஏனென்றால், தாங்கள் மனுஷ்யர்களுடைய சரித்திரத்தை யனுஸரித்துக் காம சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று தாமதித்தீர்களேயல்லாது, தங்களுக்குத் தெரியாததுமொன்றுளதோ. ஆதலால் தாங்கள் ஸர்வேசுவரனென்று சொல்வதிற் சந்தேகமில்லை" என்றாள்.

பிறகு காம சாஸ்திரத்திலும் ஸரஸ்வதி பின்வாங்கவே, அவள் செப்பினதாவது "தங்களிடத்தில் நான் தோல்வியடைந்ததில் எனக்கு ஒரு குறையுமில்லை. எப்படியெனின், ஸூரியன் அதிகப் பிரகாசமுள்ளவனாயிருத்தலால் சந்திரனுக்கு ஏதாவது அவமானமுண்டோ. அதுபோலத் தங்களால் பராபவமடைகிறது மிகவும் சிரேஷ்டமே.

महत्पारिभवः श्रेष्ठो न नीचादपि गौरवम् ।
कंसारेः पदघातेन कालीयस्य विभूषणम् ॥

மஹத்பரிபவ: ச்ரேஷ்டோ ந நீசாதபி கௌரவம் ।
கம்ஸாரே: பதகாதேந காலீயஸ்ய விபூஷணம் ॥

தாழ்மையான மனுஷ்யர்களிடமிருந்து அடையும் கௌரவத்தைக் காட்டிலும் மஹான்களிடமிருந்து அடையும் பராபவம் மிக சிலாக்கியமே. கம்ஸனது சத்துருவாகிய கண்ணபிரானுடைய பாதத்தால் மிதிபட்டதுவும் காலீயனுக்கு ஆபரணமே.

இவ்வாறு துதிசெய்து, "ஓ! பரமாத்மாவே! தங்களை யானறிவேன். பிரம்ம லோகத்திற்குச் செல்ல எனக்கு அனுமதி கொடுக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

# ஸுரேச்வரர் சிஷ்யரானது.

இதற்கு நமது ஸ்வாமிகளும் ஸரஸ்வதிதேவியை வெகுவாக ஆமோதித்துத் தமக்கும் அவளது நிஜரூபம் நன்றாகத்தெரியுமென்பதைக் காட்டித் தாம் இனித் துங்கா நதிக்கரையில் ஸ்தாபிக்கப்போகும் சாரதா பீடத்தில் அவள் ஸதா பிரஸன்னையாக இருக்கவேண்டுமெனவே, அத்தேவியும் அதற்கிணங்கினாள்.

பின்பு, மண்டனமிச்ரரும் தமது பத்னி பூமியை விட்டு உயரக்கிளம்பிவிட்டதால் அவளுக்கு இனி ஒருவிதத் தீங்கும் நேராதென்பதை யறிந்து தமது திரவ்யங்களை யெல்லாம் ஸத்விநியோகப்படுத்தி, அக்னிஹோத்ராக்னியை விதிப்படித் தமக்குள்ளாகவே ஆரோபித்துக்கொண்டு, நமதாசார்யஸ்வாமிகளைத் தமக்கு உபதேசம் செய்து ஸந்யாஸ மீந்தருளும்படி யாசித்தார். ஸ்ரீசங்கரரும் அவருக்கு "தத்வமஸி" மஹாவாக்யத்தை யுபதேசித்து ஸந்யாஸாச்ரமத்தைக் கொடுத்து ஸுரேச்வராசார்யரென்னும் பெயரையுமளித்தார்.

## 13.

# காபாலிககண்டனம்.

ஸரஸ்வதீதேவியையும் இவ்வாறு வென்று மண்டனமிச்ராரையும் தமது சிஷ்யராகச் செய்துகொண்ட பின்பு நமதாசார்ய ஸ்வாமிகள் மாஹிஷ்மதி நகரம் விட்டகன்று தென் திசையை நோக்கிச் சென்றார்கள். ஸமஸ்த சிஷ்யர்களுடனும் இவர்கள் ஒவ்வொரு தேசமாகச் சென்று ஆங்காங்கு வழங்கும் துர்மதங்களையெல்லாம் தொலைத்து, அவ்விடத்துள்ளவர்களில் முதன்மையானவர்களுடன் வாதித்து, அவர்களை வென்று, எங்கே கண்டாலும் நிகரில்லாத அத்வைத மதத்தையே ஸ்தாபித்து வந்தார்கள். இவர்கள் இச்சமயத்தில் செய்த ஜகதுபகாரமானதும், மஹோத்க்ருஷ்டமானதுமான காரியத்தை விவரித்து எழுதுவதென்றால்

# காபாலிககண்டனம்.

ஒருவராலும் ஸாத்தியமாகாது. உலகத்தில் பரவி வந்த மதங்களுக்கோ ஓர் கணக்கில்லை. சைவமதம், பாகவதமதம், வைஷ்ணவமதம், பாஞ்சராத்ரமதம், வைகானஸமதம், ஹைரண்யகர்ப்பமதம், அக்னிவாதிமதம், ஸௌரமதம், மஹாகணபதிமதம், ஹரித்ராகணபதிமதம், உச்சிஷ்டகணபதிமதம், நவநீதஸ்வர்ணஸந்தான கணபதி மதம், சக்திமதம், மஹாலக்ஷ்மீமதம், ஸாரஸ்வதமதம், வாமாசாரமதம், காபாலிகமதம், சார்வாகமதம், ஸௌகதமதம், ஜைனமதம், பௌத்தமதம், மல்லாரிமதம், விஷ்வக்ஸேனமதம், மன்மதமதம், குபேரமதம், இந்திரமதம், யமமதம், வருணமதம், சூந்யமதம், வராஹமதம், ஸாங்க்யமதம், யோகமதம், கர்மமதம், சந்திரமதம், க்ஷபணகமதம், பித்ருமதம், ஸித்தமதம், கந்தர்வமதம், பூதவேதாளமதம் முதலாய எண்ணிறந்த மதங்கள் வழங்கி வந்தன. ஒவ்வொரு மதஸ்தர்களும் தத்தமக்கு ஆதாரமாக வேதவசனங்களையே எடுத்துக் கூறினார்கள். உதாரணமாக, மல்லாரி மதத்தை அனுஸரித்தவர்கள் மல்லாரி என்னும் தேவதைக்கு நாயை வாஹனமாக ஏற்படுத்திக்கொண்டதற்கு வேதவாக்யமாகிய

श्वभ्यः श्वपतिभ्यश्च वो नमोनमः ।

ஶ்வப்ய꞉ ஶ்வபதிப்யஶ்ச வோ நமோநம꞉ ।

என்பதை ஆதாரமாகக் கொண்டார்கள். இந்த மாதிரியான துர்க்கக்ஷிகளையெல்லாம் கணப்பொழுதில் நிராகரித்து ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் ஸன்மதத்தை எங்குமே நிலைநாட்டினார்கள். இவர்களுடைய அமிருதமயமான வாக்குப்பெருக ஆரம்பித்ததும் மற்றைய மதங்கள் அடைந்த கதியைப் பின்வருமாறு ஸ்ரீவித்யாரண்யஸ்வாமிகள் வர்ணித்திருக்கின்றார்கள்.

# காபாலிககண்டனம்.

वागी काणभुजी च नैव गणिता लीना क्वचित्कापिली
शैवं चाशिवभावमेति भजते गर्हापदं चार्हतम् ।
दौर्गं दुर्गतिमश्नुते भुवि जनः पुष्णाति को वैष्णवं
निष्णातेषु यतीश सूक्तिषु कथाकेलीकृता सूक्तिषु ॥

வாகீ காணபுஜீ ச நைவ கணிதா லீநா க்வசித்காபிலீ
ஶைவம் சாஶிவபாவமேதி பஜதே கர்ஹாபதம் சார்ஹதம் ।
தௌர்கம் துர்கதிமஶ்நுதே புவி ஜந: புஷ்ணாதி கோ வைஷ்ணவம்
நிஷ்ணாதேஷு யதீஶ ஸூக்திஷு கதாகேலீக்ருதா ஸூக்திஷு ।

तथागतकथा गता तदनुयायि नैयायिकं
वचोऽजनि न चोदितो वदति जातु तौतातितः ।
विदग्धयति नदग्धधीर्विदितचापलं कापिलं
विनिर्दय विनिर्दलद्विमतसंकरे शंकरे ॥

ததாகதகதா கதா ததநுயாயி நையாயிகம்
வசோ஽ஜநி ந சோதிதோ வததி ஜாது தௌதாதித: ।
விதக்தயதி நதக்ததீர்விதிதசாபலம் காபிலம்
விநிர்தய விநிர்தலத்விமதஸங்கரே ஶங்கரே ॥

காணாதர்களுடைய வாக்குகள் பரிஹாஸத்திற்குக்கூட மதிப்பதில்லை, காபாலிமதம் எங்கேயோ ஓடி ஒளிந்துபோய் விட்டது, சைவமதமும் அசிவமாக ஆயிற்று, ஆர்ஹதமதம் நிந்தனைக்குள்ளாயிற்று, தார்க்கமதம் துர்க்கதியடைந்தது, வைஷ்ணவமதத்தைப் போஷணம் செய்வாரில்லை, பௌத்த

களுடைய பிரஸக்தியே அற்றுப்போயிற்று. அவர்களே யநு ஸரித்தே சென்றது நையாயிகர்களுடைய மதமும், கௌமா ரிலரால் விருத்தியாக்கப்பட்ட கர்மமதத்தைப்பற்றியும் பேசு வாரில்லை, கபிலரால் போஷிக்கப்பட்ட காபிலமதமும் லய த்தையடைந்தது. இவைகளுக்கெல்லாம் காரணம், நிர்த் தயவுடன் துஷ்டமதங்களையெல்லாம் பிளந்தெறிந்த ஸ்ரீசங்கா ருடைய ஒப்பில்லாத ஸூக்திகளேயாம்.

இவ்வாறு நாலாபக்கங்களிலும் திக்விஜயம் செய்து கொண்டு செல்லுங்காலத்தில் மஹாராஷ்டிர தேசத்தில் பைரவ மதானுஸாரியாகிய கபாலிகனொருவன் நமதாசார்ய ஸ்வாமி களை எதிர்கொண்டு வணங்கி, அஞ்ஜலிபந்தனுய்ப் பின்வரு மாறு மொழிந்தனன். “ இவ்வுலகில் மஹான்களுக்கெல் லாம் முதன்மையானவர் தாங்களே. மோஹத்தையெல்லாம் தாண்டியவரும் தாங்களே. தேகத்தில் அபிமானத்தை விட் டொழித்தவரும் தாங்களே. ஜகதுபகாரத்திற்காகவே அவ தரித்து தேவலோகங்களி லெல்லாம் பரவிய கீர்த்தியை யடைந்து தமது கடாக்ஷ லேசத்தினாலேயே ஸஜ்ஜனர்க ளுடைய ஆர்த்தியை யெல்லாம் தொலைக்கிறவரும் தாங் களே. இத்தகைய ஸமஸ்த கல்யாணகுணங்களுக்குமோர் இருப்பிடமாயும், அபாரமான ஞானத்தோடு கூடியவரா யுமுள்ள தங்களிடத்தில் எந்த துர்லபமான வஸ்துவை யாசித்தாலும், அதை யடையாமல் திரும்பினவர்களில்லை. ஆதலால் இப்பொழுது தங்களை யாசித்து, எனது தெய்வ மாகிய பைரவனை ஆராதித்து, எனதபீஷ்டத்தை நிறை வேற்றிக்கொள்ள முயலுகிறேன். ஸர்வஞ்ஞரான தாங் கள் இதை யெனக்குக் கைகூடும்படிக் கிருபை செய்தருள வேண்டும்.

## காபாலிககண்டனம்.

இவ்வுடலுடனேயே கைலாஸத்திற்குச் சென்று அவ்விடத்துள்ள ஈசுவரனுடன் ரமிக்கவேண்டுமென்னுமிச்சையுடையவனாய் முன்னொரு காலத்தில் மிகவும் உக்கிரமான தபஸ்ஸைச் செய்து அதனால் ஈசுவரனை ஸந்தோஷிப்பித்தேன். அவரும் ஸந்துஷ்டமான மனத்தினராய் என் முன் தோன்றி 'ஸர்வஞ்ஞரா யுள்ளவருடைய சிரஸ்ஸையாவது, பூமி முழுவதுக்கும் அரசனாயுள்ளவருடைய சிரஸ்ஸையாவது நமது பிரீத்யர்த்தமாக நீ அக்னியில் ஆஹுதி செய்வாயேயாயின் உன் அபீஷ்டத்தை நிறைவேற்றி வைப்போம்' என வாக்கருளி அந்தர்த்தானமாயினார். அது முதல் பூமி முழுவது மலைந்து திரிந்தும் ஈசுவரன் விரும்பியவண்ணம் அரசனாவது ஸர்வஞ்ஞராவது கிட்டவில்லை. ஏதோ என் அதிர்ஷ்டவசத்தால், லோகஹிதத்திற்காகவே ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும் ஸர்வஞ்ஞரான தங்களை இன்று யான் கண்ணுற்றேன். சிரஸ்ஸைக் கொடுப்பதால் தங்களுக்கு அளவிறந்த கீர்த்தியுண்டாகும், எனக்கோ இஷ்டஸித்தியாகும். இந்தச் சரீரமோ என்றைக்கிருந்தாலும் நசுவரமென்பதை நன்கு கவனித்துப் பின்பு தங்களிஷ்டம்போல் செய்யவேண்டும். தங்களைப்போலொத்த மஹான்களெல்லாம் சரீராபிமானத்தை விட்டுப் பரோபகாரத்திற்காகவே ஜன்மமெடுத்தவர்கள். உதாரணமாக ததீசி மஹரிஷி தமது முதுகெலும்பைத் தானம் செய்யவில்லையா. தாங்கள் ஒருக்காலும் எனது பிரார்த்தனையை மறுக்கமாட்டீர்களென்னும் முழுநம்பிக்கையுடனும் தங்களை வேண்டுகின்றேன். எவ்வாற்றாலும் தாங்கள் சிரஸ்ஸைக்கொடுத்து என்னைக் கிருதார்த்தனாக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே நமதாசார்யஸ்வாமிகளின் சரணாரவிந்தங்களில் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்

தான். உடனே பரமவிரக்தரான ஸ்வாமிகளும் அவனுக்குத் தமது சிரஸ்ஸைக் கொடுப்பதாக வாக்களித்து, ஆனால் இந்த ஸமாசாரம் தமது சிஷ்யர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் இதற்கு இடம் கொடுக்கமாட்டார்களாதலால் தாம் ஸமாதியில் தனியே வீற்றிருக்கும் ஸமயத்தில் வந்து அவன் இஷ்டப்படி தமது சிரஸ்ஸை எடுத்துக்கொண்டு போகலாமென்று அனுமதி கொடுத்து அனுப்பினார்.

பின்பு ஒருக்கால் ஸ்ரீசங்கராசாரியர் தனியேயிருந்த பொழுது அந்தக் கபாலிகன் வரவே, ஸ்வாமிகளும் ஸித்தாஸனத்தி லுட்கார்ந்துகொண்டு ஸமஸ்த பிரபஞ்சங்களையும் மறந்து நிர்விகல்ப ஸமாதியில் பிரம்ஹத்தில் லயித்திருப்பதைக் கண்டு காபாலிகனும் இது தான் தனக்கு நல்ல சமயமென்றெண்ணி ஓங்கிய கத்தியுங் கையுமாக நமது பரமகுருவாகிய ஆசார்யஸ்வாமிகளிடம் நெருங்கினான். தர்ம்மமே உருவெடுத்து வந்ததென்று சொல்லக்கூடிய ரூபத்தைக் கொன்று உலகத்தில் அதர்ம்மம் மேன்மேலும் ஓங்கி வளரும்படி செய்ய யத்தனித்தான். ஆனால் பரப்பிரம்ஹத்தை அழிக்க யாராலாயினும் முடியுமோ? ஈசுவர ஸம்மதத்திற்கு விரோதமுமுண்டோ? தர்ம்மமறிய தேவதைகளும் பார்த்திருப்பார்களோ? உலகம் கிருதார்த்தமாகவேண்டாமோ? துராசாரங்களுக்கு இடம் கொடுக்கலாமோ? ஸ்ரீசங்கரர் அவதரித்த காரியம் முடியவேண்டாமோ? இத்யாதி காரணங்கள் பற்றியே காபாலிகன் ஸ்வாமிகளிடம் நெருங்கியதும் இது விஷயம் ஆசார்யரின் சிஷ்யராகிய ஸ்ரீபத்மபாதருக்கு திடீரென்று மனத்தில் தோன்றிற்று. உடனே அவரும் ஒன்றும் செய்யத்துணியாமல் திகைத்து மெய்மறந்து நிற்கையில் ஸாக்ஷாத் நரஸிம்ஹன் ஆவிர்ப்பவித்து மிகவும் உக்

# காபாலிககண்டனம்.

கிரமாக கர்ஜித்துக்கொண்டு யதீசுவரர் ஸமாதியிலிருக்குமிடத்திற்கு வந்து வெகு கோபத்துடன், உலக முழுவதும் பூகம்பம் வந்ததுபோல் நடுநடுங்க, தேவதைகள் ஒன்றுந் தோன்றாமல் பிரமிக்க, ஸமுத்ரமெல்லாம் கரைபுரள, எண்டிசைகளும் தேஜஸ் ஜ்வலிக்க, அட்டஹாஸம் செய்துகொண்டு அதி தீவிரமான தமது நகங்களால் காபாலிகனுடைய சரீரத்தில் குத்தி அவனைப் பிடித்திழுத்து முன்னொரு காலத்தில் ஹிரண்யகசிபுவைச் செய்ததுபோலக் காபாலிகனையும் கிழித்து இரண்டாகப் பிளந்தெறிந்துவிட்டார். இந்த சப்தத்தால் ஆசார்ய ஸ்வாமிகளுக்கும் ஸமாதி கலைந்தது. சிஷ்யர்களும் வெளியில் சென்றிருந்தவர்கள் திரும்பி ஓடி வந்தார்கள். எல்லோரும் நடந்த விஷயத்தைக் கண்ணுற்றதும் ஆச்சரியத்தாலும் ஆனந்தத்தாலும் பரவசர்களாய் நின்றார்கள். ஸ்ரீசங்கரரோ தமதிஷ்ட தேவதையான நரஸிம்ஹனைத் துதிசெய்து சாந்தப்படுத்தினார். அவரும் சாந்தமடையவே எல்லோருமாக ஸ்ரீபத்மபாதரை நடந்த விருத்தாந்தங்களைத் தங்களுக்குச் சொல்லும்படி பிரார்த்தித்தார்கள். அதற்கு அவர் சொன்னதாவது.

“முன்னொரு காலத்தில் அஹோபல பர்வதத்திலோர் குகையில் நான் நரஹரியைக் குறித்துத் தபஸ்ஸு செய்தேன். ஒரு நாள் ஒரு வேடன்—சிறுபையன்—ஒருவன் வந்து ‘எதற்காக வெகு காலமாக இந்தக் குகையில் தனிமையிலிருந்துகொண்டிருக்கிறீர்’ என்று என்னைக் கேட்டான். அதற்கு நான் ‘இந்தக்காட்டில் ஒரு அற்புதமான மிருகமிருக்கிறது. அதற்குக் கழுத்துவரையில் மிகவும் அழகான மனுஷ்யரூபம். முகமோ ஸிம்ஹரூபம். அந்த மிருகத்தைப் பார்க்கவேண்டுமென்று இத்தனை நாளாக நான்

இங்கிருந்தும் அது என் கண்ணுக்குப் புலப்படவில்லை. அத ஞல் கஷ்டப்படுகிறேன்' என்றேன். உடனே அந்த வேடன் அந்தக்காட்டினுள் நடுவில் புகுந்து ஒரு க்ஷணப்பொழுதில் நரஹரியை கழுத்தில் ஒரு கொடியால் கட்டி நெடுநாள் பழகிய ஆடுமாடுகளைக் கூட்டிவருவதுபோல் கூட்டிவந்து விட்டான். அதைக்கண்டதும் எனக்குண்டான ஆச்சர்யத்திற்கு ஓர் எல்லையில்லை. உடனே நான் 'மஹரிஷிகளுக்குக் கூட மனதினலேயும் எட்டவொண்ணாத நரசிம்ம யாது காரணத்தால் இந்த வேடனுக்கு இவ்வாறு வசமாயிற்று' என்று கேட்டதற்கு அந்தப்பிரபு அருளினதாவது 'இந்த வேடன் ஏகாக்ர சித்தனாக என்னை தியானித்த மாதிரி நான் இதுவரையிலும் ஒருவனாலும் தியானிக்கப்படவில்லை. இப்பொழுது உன்னுடைய தபஸினால் ஸந்தோஷமடைகிறேன். ஓர் நல்ல ஸமயத்தில் உனக்கு அனுக்கிரஹம் செய்கிறேன்' என்று சொல்லி அந்தர்த்தானமாயினர். இப்பொழுது சற்று நேரத்திற்கு முன்பு நமது குருவை ஸம்ஹாரம் செய்ய ஓர் கபாலிகன் பிரயத்தினப்படுவதாக எனக்கு இருந்தாற்போலிருந்து தோன்றிற்று. உடனே முன் நான் கண்ட நரஹரி நரசிம்ம தென்பட்டது. அவ்வளவுதான். பின்பு நடந்தவைகளை யானறியேன்," என்றார். இதைக் கேட்டதும் சிஷ்யர்களெல்லோரும் வெகுவாக ஸந்தோஷித்துத் தங்களது பாக்கியமே பாக்கியமென்று எண்ணிக்கொண்டு குருவாகிய ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகளை நமஸ்கரித்தார்கள். அந்த யதீந்திரரும் இவர்களைக் கூட்டிக்கொண்டு வெவ்வேறு தேசங்களுக்குத் தீர்த்தாடனமாகச் சென்றார்கள்.

## 14.

## ஹஸ்தாமலகர் சிஷ்யரானது.

ஆசார்யஸ்வாமிகள் தீர்த்த யாத்திரையாகப் பற்பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று ஒவ்வோரிடத்திலும் அனேக அத்புத கிருத்யங்களைச் செய்துகொண்டு பார்ப்பவர்களெல்லாம் கண்டு வியக்கும்படி ஸமஸ்த துஷ்டமதங்களையும் தொலைத்து ஸன்மதத்தை ஸ்தாபித்து வருகையில், மேற்கு மஹாஸமுத்திரத்தி னருகேயுள்ள ஸ்ரீமத் பரமசிவபிரான் திருப்பதிகளுள் ஒன்றாய திருக்கோகர்ணமென்னும் திவ்ய ஸ்தலத்தையடைந்தார்கள். அவ்விடத்தில் ஸ்வாமிகள் மஹாபலனென்னப் பெயர்பெற்று விளங்கிவரும் சிவபெருமானுடைய திருவடிகளிற்பணிந்து மூகாம்பாள் ஸந்நிதானத்திற்குச் செல்லுகையில், மார்க்கத்தில் ஒரே குமாரனாகிய தங்களது அருமைப் புதல்வனை நமனுக்குப் பறிகொடுத்துத் தத்தளித்துத் தவித்து அலறிக்கொண்டிருக்கும் ஓர் தம்பதியைக் கண்ணுற்று தயாளுவானபடியால் மிக்க சோகமடைந்து

தமது கடாக்ஷ வீக்ஷணத்தால் அக்குமாரனை உயிர்ப்பித்தெழுப்பி, அவனுடைய பெற்றோர்களுக்கு அளவில்லா ஆனந்தத்தை ஊட்டி, அவர்களுக்கு விடைபகர்ந்தனுப்பிய பின்பு, மூகாம்பாள் ஸந்நிதானத்தை யடைந்து ஒப்புயர்வில்லாத அமிர்தமயமான தமது வாக்கால் அந்த அம்பாளைப் பலவாறு துதிசெய்தார்கள். இந்த ஸ்தோத்திரத்தில் மந்த்ர சாஸ்திரத்தையும் யோக சாஸ்திரத்தையும் நன்கு விளக்கியிருக்கிறார்கள். இவ்வாறு மூகாம்பாள் தர்சனமான பிறகு நமதாசார்யஸ்வாமிகள் ஸ்ரீபலி என்னும் அக்ரஹாரத்திற்கு வந்துசேர்ந்தார்கள்.

இந்த அக்ரஹாரத்தில் சுருதி, ஸ்மிருதி, புராணம் முதலியவற்றில் நன்றாகப் பயின்றவர்களாயும் ஆஹிதாக்னிகளாயும், வேதத்தில் விதித்த கர்மாக்களை அநுஷ்டிப்பதில் வெகு ஸமர்த்தர்களாயும் உள்ள பிராமணர்கள் ஆயிரக்கணக்காக இருந்தனர். அவர்களுள் விண்ணுலகில் தேவதைகளுக்கு ஆசார்யரான பிருஹஸ்பதியைப்போல் மண்ணுலகில் ஒப்பில்லா "குரு" எனப்பெயர்பெற்று, ஆகாயத்தில் கதிரவன் விளங்கியதுபோல் இவ்வுலகில் தற்செயற்குரிய பிரபாகரரெனத்திருநாமம் வஹித்தவராய் ஓர் அந்தணர் மணி இருந்தார். ஜனகமஹாராஜனைப்போல் கர்மானுஷ்டானத்தில் மிகச் சிறந்தவரும், ஜைமினிமாமுனிவரியற்றிய நியாய நூலுக்குக் கசடறப் பொருள் விளக்கினவரும், வைதிக தத்வங்களை மிகத் தெளிவாய் விரித்துக் காட்டினவரும், எங்கும் பரவிய கீர்த்தியையுடையவரும், நான்காச்ரமங்களுள் கிருஹஸ்தாச்ரமமே மிகச்சிறந்ததெனக் கொள்கையுள்ளவருமான அவ்வந்தணர்மணிக்கு அநேகம் குமாரர்களிருந்தார்கள். ஒருக்கால் இவர் ஸம்ஸார ஸஹிதமாய் தீர்த்த யாத்திரை செய்து

கொண்டு யமுனா நதிக்குச் சென்றார். அங்கு இவருடைய பாரியை தனது கைக்குழந்தையையு மெடுத்துக்கொண்டு யமுனையில் ஸ்நானத்திற்கேகினள். அந்நதிக்கரையில் ஒரு யோகீசுவரர் தியானத்திலிருந்ததைக் கண்டு அவரிடத்தில் தனது குழந்தையை ஒப்புவித்து, அந்தம்மாள் நதியிலிறங்கி அமிழ்ந்து ஸ்நானம் செய்துவிட்டு மீளவும் கரையேறி, தனது புத்திரனை ஓரிடத்திலும் காணாமையால் மிக்க வருத்த முற்று அந்த யோகீசுவரரிடம் முறையிட்டனள். தாம் யோகத்திலிருந்த ஸமயத்தில் அக்குழந்தை தவறி அந்நதியில் விழுந்து இறந்துவிட்டதைக் கண்ட அந்த யோகீசுவரரும், தமது அஜாக்கிரதையால் அம்மங்கையருக்கு நேர்ந்த மனக் கவலையை நீக்கக்கருதி, ஏதோ ஒரு உபாயத்தால் அப்பாலகனைப் பிழைக்கச் செய்து அத்தேவியாரிடம் சேர்ப்பித்து அவளை மிகக் களிக்கச்செய்தார். உயிர்போய்த் திரும்பவும் பிழைத்த அப்பாலகனை எடுத்துக்கொண்டு பிரபாகராசாரியர் ஸம்ஸாரத்துடன் தமது வாஸஸ்தலமாகிய ஸ்ரீபலிக்கு வந்து சேர்ந்தார். அந்தக் குழந்தைக்கும் கிரமமாக வயது எட்டா யிற்று. ஆனால் அந்தப் பையன் எப்பொழுதும் ஒன்றும் பேசுவதுமில்லை, ஒன்றும் கேட்கிறதுமில்லை, ஸதா தியானம் செய்பவன்போலவே இருந்தான். பாலசேஷ்டைகளை கிடை யாது; மந்திபோலிருந்தான். ரூபத்திலோ மன்மதன். தேஜஸ்ஸிலோ ஸூர்யன். முகத்திலோ சந்திரன். பொறுமையிலோ பூமிதேவிக்கு ஸமானமானவன். இவ்வளவிருந்தும் ஏதோ கர்மவசத்தால் அவனுக்கு ஜடத்தன்மையே மேலிட் டிருந்தது. அவனை ஊமையென்றும், மட்டியென்றும் எல் லோரும் கருதினார்கள். இதனால் அவனுடைய பிதாவுக்கு இருந்த வருத்தத்திற்கோரளவில்லை. இராப்பகலாய் இதற்

கென்செய்வதென்று கவலைப்பட்டார். பிராமண்யம் போய் விடப்போகிறதேயென்று பயந்து அப்பையனுக்கு உபநயனமும் செய்வித்தார். இவ்வாறு அந்த ஜடனான பையனுக்கு வயது பதின்மூன்று ஆயிற்று.

இத்தருணத்தில்தான் ஸ்ரீசங்கரபகவத்பாத ஆசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீபலி கிராமத்திற்கு விஜயம் செய்தார்கள். இவர்களின் மஹிமையைப் பலவாறாகப் பிரபாகரர் கேள்வியுற்று இம்மஹானிடத்தில் தமது புத்திரனைக் கூட்டிப்போய்க் காண்பித்தால் அவனுடைய ஜடத்தன்மைக்கு ஏதாவது விமோசனமுண்டாகுமென்று எண்ணி "रिक्तहस्तस्तु नोपेयाद्राजानं दैवतं गुरुम्" என்னும் வசனப்படி குருவிடம் செல்லுவதற்கு முன்னர் அவருக்குக் கொடுக்கவேண்டி ஒரு பழத்தை எடுத்துக்கொண்டு, புத்திரனுடன் ஸ்ரீசங்கரரையடைந்து அவருடைய சரணாரவிந்தங்களில் நமஸ்கரித்தார். தமது புத்திரனையும் அவருடைய பாதங்களில் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணும்படி செய்வித்தார். நமஸ்காரத்திற்காகக் கீழே படுத்த பையனோ திரும்பவும் எழுந்திருக்கவேண்டுமென்கிற ஞானம் கூடவின்றிப் படுத்தபடியே கிடந்தான். ஆசார்ய ஸ்வாமிகள் தமது திருக்கரங்களால் அக்குமாரனைப் பிடித்து எழுப்பி, தம்மை நோக்கும்படி செய்வித்தார்கள். உடனே பிரபாகரரும் பின்வருமாறு மொழிந்தார். "ஸ்வாமிகாள்! இச்சிறுவனுடைய ஜடத்தன்மைக்குக்காரணத்தைத் தாங்கள் தாமறிந்து சொல்லவேண்டும். வயதோ பதின்மூன்றாகியும் இவனுக்கு ஞானம் என்பதே இல்லை. இவன் ஒன்றும் பேசுகிறதுமில்லை, எழுதுகிறதுமில்லை, ஒருவித விளையாட்டிலும் புத்தியில்லை. மற்றைய பாலர்கள் இவன் மந்தனாயிருக்கிறானென்றெண்ணி இவனை அடித்தால் அதிலும் கோபமுண்டா

கிறதில்லை. ஏதோ உபநயனம் மட்டில் செய்துவைத்தேன். 'சாப்பாட்டில் கூட இவனுக்கு உத்ஸாகமில்லை. தன்னிஷ்டம் போல் திரிந்துகொண்டு, சொன்ன பேச்சையும் கேளாமல், தன் கர்மவசத்தால் இவ்வாறாக வளர்ந்துவருகிறான்" என்று சொல்லிப் பிரபாகரர் ஒழிந்ததும், ஸாக்ஷாத் பரமாத்மாவாகிய ஸ்ரீசங்கரரும் அச்சிறுவனை நோக்கி "நீ யார்? யாது காரணம்பற்றி இந்த மாதிரியாக ஜடன்போல நடிக்கிறாய்?" என்று வினவினார்கள்.

உடனே அந்த பாலசரீரத்தை வகித்த மஹாத்மாவும், பெருகி விழும் ஆகாய கங்கையின் கர்வத்தை அடக்கும் படியான வேகத்தோடு, கீர்வாணபாஷையில் பன்னிரண்டு சுலோகங்களால், தான் ஜடனல்லவென்றும், ஜடங்களுள் ஸாக்ஷியாயிருப்பதும், ஸமஸ்த விகாரங்களுமற்று எல்லாவற்றிற்கும் மேம்பட்ட உத்தமமான பதமாயுள்ளதும் தானே யென்றும், தேஹேந்திரியங்களுக்கு வேறாயுள்ள சைதன்யமயமானதும், "தத்வமஸி" "தத்ஸத்" முதலாய மஹா வாக்யங்களில் "தத்" என்னும் பதத்திற்குப் பொருளானதுமான வஸ்து தானேயென்றும் மிகத்தெளிவாய்ப் பதிலுரைத்தார். இந்தப் பன்னிரண்டு சுலோகங்களுள் ஆத்மதத்வம் முழுவதும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. மிகவும் எளிய நடையில், யாவர்க்கும் நன்றாகப் பொருள்படும்படி மனோ வாக்குக்குங்கூட எட்டாத வஸ்துவை, இந்த ஜடனென்றெண்ணப்பட்டிருந்த சிறுவன் எடுத்துரைத்ததும் அதைக் கேட்டு நமது ஸ்வாமிகளே ஆச்சரியப்பட்டார்களென்றால் அந்த சுலோகங்களின் பெருமையைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ.

ஹஸ்தாமலகர் சிஷ்யரானது.

# ॥ हस्तामलकस्तोत्रम् ॥

नाहं जडः किंतु जडः प्रवर्तते
मत्संनिधानेन न संदिहे गुरो ।
षडूर्मिषड्भावविकारवर्जितम्
सुखैकतानं परमास्मि तत्पदम् ॥ १ ॥

निमित्तं मनश्चक्षुरादिप्रवृत्तौ
निरस्ताखिलोपाधिराकाशकल्पः ।
रविर्लोकचेष्टा निमित्तं यथा यः
स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥ २ ॥

यमग्न्युष्णवन्नित्यबोधस्वरूपम्
सनश्चक्षुरादीन्यबोधात्मकानि ।
प्रवर्तन्त आश्रित्य निष्कम्पमेकं
स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥ ३ ॥

मुखाभासको दर्पणे दृश्यमानो
मुखत्वात्पृथक्त्वेन नैवास्ति वस्तु ।
चिदाभासको धीषु जीवोऽपि तद्व-
त्स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥ ४ ॥

यथा दर्पणाभाव आभासहानौ
मुखं विद्यते कल्पनाहीनमेकम् ।
तथा धीवियोगे निराभासको यः
स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥ ५ ॥

मनश्चक्षुरादेर्वियुक्तः स्वयं यो
मनश्चक्षुरादेर्मनश्चक्षुरादिः ।
मनश्चक्षुरादेरगम्यस्वरूपः
स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥ ६ ॥

य एको विभाति स्वतः शुद्धचेताः
प्रकाशस्वरूपोऽपि नानेव धीषु ।
शरावोदकस्थो यथा भानुरेकः
स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥ ७ ॥

यथऽनेकचक्षुःप्रकाशो रविर्न
क्रमेण प्रकाशिकरोति प्रकाश्यम् ।
अनेका धियो यस्तथैकप्रबोधः
स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥ ८ ॥

विवस्वत्प्रभातं यथा रूपमक्षं
प्रगृह्णाति नाऽऽभातमेवं विवस्वान् ।
तथा भात आभासयत्येकमक्षं
स नित्योपलब्धिस्वरूपोऽहमामा ॥ ९ ॥

यथा सूर्य एकोऽप्यनेकश्चलासु
स्थिरास्वप्सु चैकोऽग्निभाव्यस्वरूपः ।
चलासु प्रभिन्नः स्वधीष्वेक एव
स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥ १० ॥

घनच्छन्नदृष्टिर्घनच्छन्नमर्कं
यथा मन्यते निष्प्रभं चातिमूढः ।

तथा बद्धवद्भाति यो मूढदृष्टेः
स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥ ११ ॥
समस्तेषु वस्तुष्वनुस्यूतमेकं
समस्तानि वस्तूनि यं न स्पृशन्ति ।
वियद्वत्सदा शुद्धमच्छस्वरूपः
स नित्योपलब्धिस्वरूपोऽहमात्मा ॥ १२ ॥

---

𑌨𑌾𑌹𑌂 𑌜𑌡𑌃 𑌕𑌿𑌂𑌤𑍁 𑌜𑌡𑌃 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌤𑍇
𑌮𑌤𑍍𑌸𑌂𑌨𑌿𑌧𑌾𑌨𑍇𑌨 𑌨 𑌸𑌂𑌶𑌯𑍋 𑌹 𑌗𑍁𑌰𑍋 ।
𑌷𑌡𑍂𑌰𑍍𑌮𑌿𑌷𑌡𑍍𑌭𑌾𑌵𑌵𑌿𑌕𑌾𑌰𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂
𑌸𑍁𑌖𑍈𑌕𑌤𑌾𑌨𑌂 𑌪𑌰𑌮𑌸𑍍𑌮𑌿 𑌤𑌤𑍍𑌪𑌦𑌮𑍍 ॥ ௧ ॥

𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌮𑌨𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍌
𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌾𑌖𑌿𑌲𑍋𑌪𑌾𑌧𑌿𑌰𑌾𑌕𑌾𑌶𑌕𑌲𑍍𑌪𑌃 ।
𑌰𑌵𑌿𑌰𑍍𑌲𑍋𑌕𑌚𑍇𑌷𑍍𑌟𑌾𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂 𑌯𑌥𑌾 𑌯𑌃
𑌸 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍋𑌽𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 ॥ ௨ ॥

𑌯𑌮𑌗𑍍𑌨𑍍𑌯𑍁𑌷𑍍𑌣𑌵𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌬𑍋𑌧𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂
𑌮𑌨𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌦𑍀𑌨𑍍𑌯𑌬𑍋𑌧𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌨𑌿 ।
𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤 𑌆𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌨𑌿𑌷𑍍𑌕𑌂𑌪𑌮𑍇𑌕𑌂
𑌸 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍋𑌽𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 ॥ ௩ ॥

𑌮𑍁𑌖𑌾𑌭𑌾𑌸𑌕𑍋 𑌦𑌰𑍍𑌪𑌣𑍇 𑌦𑍃𑌶𑍍𑌯𑌮𑌾𑌨𑍋
𑌮𑍁𑌖𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌪𑍃𑌥𑌕𑍍𑌤𑍍𑌵𑍇𑌨 𑌨𑍈𑌵𑌾𑌸𑍍𑌤𑌿 𑌵𑌸𑍍𑌤𑍁 ।
𑌚𑌿𑌦𑌾𑌭𑌾𑌸𑌕𑍋 𑌧𑍀𑌷𑍁 𑌜𑍀𑌵𑍋𑌽𑌪𑌿 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍
𑌸 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍋𑌽𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 ॥ ௪ ॥

𑌯𑌥𑌾 𑌦𑌰𑍍𑌪𑌣𑌾𑌭𑌾𑌵 𑌆𑌭𑌾𑌸𑌹𑍀𑌨𑍋
𑌮𑍁𑌖𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌕𑌲𑍍𑌪𑌨𑌾𑌹𑍀𑌨𑌮𑍇𑌕𑌮𑍍 ।
𑌤𑌥𑌾 𑌧𑍀𑌵𑌿𑌯𑍋𑌗𑍇 𑌨𑌿𑌰𑌾𑌭𑌾𑌸𑌕𑍋 𑌯𑌃
𑌸 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍋𑌽𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 ॥ ௫ ॥

𑌮𑌨𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌦𑍇𑌰𑍍𑌵𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌯𑍋
𑌮𑌨𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌦𑍇𑌰𑍍𑌮𑌨𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌦𑌿𑌃 ।
𑌮𑌨𑌶𑍍𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌦𑍇𑌰𑌗𑌮𑍍𑌯𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌃
𑌸 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍋𑌽𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 ॥ ௬ ॥

𑌯 𑌏𑌕𑍋 𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 𑌸𑍍𑌵𑌤𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌚𑍇𑌤𑌾𑌃
𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍋𑌽𑌪𑌿 𑌨𑌾𑌨𑍈𑌵 𑌧𑍀𑌷𑍁 ।
𑌶𑌰𑌾𑌵𑍋𑌦𑌕𑌸𑍍𑌥𑍋 𑌯𑌥𑌾 𑌭𑌾𑌨𑍁𑌰𑍇𑌕𑌃
𑌸 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍋𑌽𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 ॥ ௭ ॥

𑌯𑌥𑌾𑌽𑌨𑍇𑌕𑌚𑌕𑍍𑌷𑍁𑌃𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋 𑌰𑌵𑌿𑌰𑍍𑌨
𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍀 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍍𑌯𑌮𑍍 ।
𑌅𑌨𑍇𑌕𑌾 𑌧𑌿𑌯𑍋 𑌯𑌸𑍍𑌤𑌥𑍈𑌕𑌃 𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑌃
𑌸 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍋𑌽𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 ॥ ௮ ॥

𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑌂 𑌯𑌥𑌾 𑌰𑍂𑌪𑌮𑌕𑍍𑌷𑌂
𑌪𑍍𑌰𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿 𑌨𑌾𑌽𑌽𑌭𑌾𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑍍 ।
𑌤𑌥𑌾𑌭𑌾𑌤 𑌆𑌭𑌾𑌸𑌯𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑍇𑌕𑌂
𑌸 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍋𑌽𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 ॥ ௯ ॥

𑌯𑌥𑌾 𑌸𑍂𑌰𑍍𑌯 𑌏𑌕𑍋𑌽𑌪𑍍𑌸𑍍𑌵𑌨𑍇𑌕𑌶𑍍𑌚𑌲𑌾𑌸𑍁
𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌯𑌨𑌨𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌵𑍍𑌯𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌃 ।
𑌚𑌲𑌾𑌸𑍁 𑌪𑍍𑌰𑌭𑌿𑌨𑍍𑌨𑌃 𑌸𑍁𑌧𑍀𑌷𑍍𑌵𑍇𑌕 𑌏𑌵
𑌸 𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍋𑌽𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 ॥ ௰ ॥

## ஹஸ்தாமலகர் சிஷ்யரானது.

கநச்சந்நத்ருஷ்டிர்கநச்சந்நமர்க்கம்
யதா நிஷ்ப்ரபம் மந்யதே சாதிமூட: ।
ததா பத்தவத்பாதி யோ மூடத்ருஷ்டே:
ஸ நித்யோபலப்திஸ்வரூபோऽஹமாத்மா ॥ ௰௧ ॥

ஸமஸ்தேஷு வஸ்துஷ்வநுஸ்யூதமேகம்
ஸமஸ்தாநி வஸ்தூநி யந்ந ஸ்ப்ருசந்தி ।
வியத்வத் ஸதா சுத்தமச்சஸ்வரூப:
ஸ நித்யோபலப்திஸ்வரூபோऽஹமாத்மா ॥ ௰௨ ॥

இவ்வாறு இந்த சுலோகங்களால் ஸச்சிதானந்தமயமான ஆத்மாவே தாமென்பதாக பரமாத்மதத்வத்தை இவர் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்றாக விளக்கிக்காட்டியதால் இந்த சுலோகங்களுக்கு "ஹஸ்தாமலகஸ்தோத்ரம்" என்றும், இதையியற்றியவருக்கும் ஹஸ்தாமலகரென்றும் பெயர் பிரஸித்தியடைந்தது. மிகத்தெளிவாயுரைக்கப்பட்ட இந்த சுலோகங்களைச் செவியுற்றதும் பிதாவாகிய பிரபாகராசாரியர் தமது பாலன் மிகவும் வைராக்கியமடைந்திருப்பதுகண்டு, தாம் கிருஹஸ்தாச்ரமத்தையே மேலானதாகக் கொண்டவராதலால் இக்குமாரன் தமக்கு உதவியற்றவனெனத் தீர்மானித்துக், குமாரனை விட்டு, ஆசார்யஸ்வாமிகளிடம் விடைபெற்றுத் தமது கிருஹம் சென்றனர். பிறகு ஸ்வாமிகளும் இவருக்குக் கிரமஸந்யாஸம் ஈந்தருளி, தம்முமுடைய சிஷ்யர்களுள் ஒருவராய் இவரையும் ஏற்றுக்கொண்டு, அவ்வக்ரஹாரத்தை விட்டுப்புறப்பட்டு சிருங்ககிரியை நோக்கிச்சென்றார்கள்.

## 15.

## சிருங்ககிரிமடஸ்தாபனம்.

மஹாவிஷ்ணு முதலான ஸமஸ்த தேவதைகளாலும் புகழ்பெற்ற சிருங்க கிரியை அடைந்தார்கள் தமது சிஷ்யர்களுடன் அத்வைத மூர்த்தியாகிய நமது ஆசார்ய ஸ்வாமிகள். இந்த சிருங்க கிரியில் தான் இன்றைக்கும் நாளைக்கும் விபாண்டகருடைய குமாரரான ரிஷ்யச்ருங்கர் (கலைக்கோட்டு மாமுனிவர்) உத்தமமான தபஸ்ஸைச் செய்துகொண்டிருக்கிறார். இந்தவிடத்திற்குத் தான் விபாண்டகதபோவனமென்று பெயர். இங்குத்தான் கச்யபர், வஸிஷ்டர், பராசரர் முதலானவர்களுடைய ஆச்ரமங்களெல்லாம் இருக்கின்றன. மிகவுமத்புதமான சரித்திரத்தையுடைய விச்வாமித்ரரும் இங்குத்தான் கடைசியாகப் பிராம்மண்யத்தையடைந்தார். இந்தப் பிரதேசத்தில்தான் ஸாத்விககுணம் குடிகொண்டிருக்கின்றது. மிருகங்கள் கூடத் தங்களுக்கு ஸ்வபாவமாக உள்ள பகைமையைவிட்டு ஒன்

றேடொன்று வெகு ஸ்நேகமாயுள்ளன. புலிகள் மான்களை ரக்ஷிக்கின்றன. குரங்குகள் தங்களுடைய சேஷ்டைகளை யடக்கிக்கொண்டு அங்குள்ள குருடு, கூன் முதலியவர்களை யெல்லாம் கையைப் பிடித்து வழிகாட்டிச் செல்கின்றன. இந்தவிடத்தில் உள்ளவர்களெல்லோருமே மஹா கர்மடர்க ளானதால் அவர்கள் ஸதா ஸர்வகாலமும் செய்யும் யாகங் களில் ஹவிர்பாகங்களைப் பெற்றுக்கொள்ள அடிக்கடி போய் வருவது அஸாத்தியமென்றெண்ணி, இந்திரன் முதலான ஸமஸ்த தேவதைகளும் இங்குத்தானே இருந்துவிட்டார்கள். ஸாக்ஷாத் பரமேசுவரனுடைய கல்யாணத்தின்போது பூமியை அசையாமல் ஸமமாக்குவதற்காகத் தென்றிசையை நோக்கிச் சென்ற அகஸ்திய மகாமுனிவரும் இங்கே தான் வஸிக்கி றார். இதேவிடத்தில் தான் அகஸ்தியருக்கு ரிஷபாரூடராய் ஈசுவரன் தமது விவாஹ கோல தர்சனத்தை அருளிச் செய்தார்.

முன்னொரு காலத்தில் வஸிஷ்டரைச் சோதிப்பதற்காக துர்வாஸ மஹரிஷியானவர் தமது மாயாசக்தியால் அநேகங் கோடி சிஷ்யர்களைச் சிருஷ்டித்துக்கொண்டு அவர்களுடன் இந்த வனத்திற்கு வந்து வஸிஷ்டரை நோக்கித் தாங்களெல் லாரும் மிகுந்த பசியால் வருந்துவதாகவும், ஆகாரம் செய்து 28 நாட்களாயினவென்றும், காலதாமதமின்றி உடனே தங்க ளுக்குச் சாப்பாடு செய்துவைக்கவேண்டுமென்றும் கேட்க, வஸிஷ்டரும் தமது பத்நியாகிய அருந்ததியை அவ்வண்ணம் செய்யுமாறு ஆஞ்ஞாபிக்க, அந்தம்மாள் தம் பர்த்தாவினது கட்டளைக்கிணங்கி தமது பதிவிரதாமாஹாத்மியத்தால் ஒரு கணப்பொழுதில் அத்தனை பேர்களுக்கும் விருந்தளித்தார் கள். அதைச் சாப்பிட்டதும் துர்வாஸர் மிகவும் சந்தோ

ஷித்து, அருந்ததியின் மஹிமையைப் புகழ்ந்து, தமது மாயா சிஷ்யர்களுடன் அந்தர்த்தானமாயினார். இது ஸங்கதிகளை யெல்லாம் நாரதர் மூலமாய்க் கேட்டறிந்த மஹாவிஷ்ணுவானவர் லக்ஷ்மீ ஸமேதராய் மாறுவேடம்பூண்டு வஸிஷ்டாச்ரமத்திற்கு வரவே, அங்கு வஸிஷ்டரும் அருந்ததியும் செய்த ஆதித்யத்தைக் கண்டு மெச்சி, அவர்களுக்குத் தங்களது நிஜமான ரூபத்தைக் காண்பித்து, அந்தவிடத்திலேயே துங்கா நதிக்கரையில் வாஸஞ்செய்தார்கள். பரமசிவனும் இதைக்கேட்டுத் தமது பிராட்டியாரான பார்வதீ தேவியாருடன் ஒரு கிழட்டு தம்பதி மாதிரியாக வேஷம்பூண்டு, அந்த ஆச்ரமத்திற்கு வந்து, தங்களுக்கு வேறொன்றும் தேவையில்லையென்றும், கொஞ்சம் அமிருதம் தான் வேண்டுமென்றும் கேட்டார்கள். உடனே வஸிஷ்டர் அருந்ததியைப் பார்த்தார். அருந்ததியும் தேவேந்திரனை நினைத்தாள். இந்திரனும் உடனே அமிருதகலசத்தைக் கொண்டுவந்து கொடுக்க, அருந்ததி அதை வாங்கி அந்தக் கிழட்டுத் தம்பதிகள் கையில் கொடுத்ததும், அதைக்கண்டு வியந்து பார்வதீபரமேசுவாரும் தங்களது நிஜவடிவத்தை அவர்களுக்குக் காண்பித்து அவர்களை அனுக்கிரஹித்துவிட்டுச் சென்றார்கள்.

இவ்வாறு திருமூர்த்திகளாலும் பரிசுத்தம் பண்ணப்பட்டவிடம் இதுதான். இங்கே தான் மஹாவிஷ்ணுவின் சரீரமயமான துங்கா நதியும், பரமசிவபிரானது சரீரமயமான பத்ரா நதியும் ஒன்று சேர்ந்து ஹரிஹர ரூபமான துங்கபத்திரையாகப் பிரவஹிக்கிறது. இந்தத் துங்கபத்திரையின் மஹிமையை என்னென்று சொல்வது. ஸ்ரீமந் நாராயணனுடைய ஸ்ரீபாதத்திலிருந்து பெருகிய கங்கைக்கு எத்தனையோ மஹிமைகள் பொருந்தியிருக்கும்பொழுது, அவரு

டைய முகத்திலிருந்து பிரவஹிக்கும் இந்தத் துங்கபத்திரை யின் பெருமையை யாரால் எடுத்துரைக்க முடியும்? மும் மூர்த்திகள் முதலாக ஸமஸ்தமான தேவதைகளும் இதில் ஸ்நானம் செய்வதால் தங்களைப் பரிசுத்தமானவர்களாக நினைக்கிறார்களென்றால் இதைப்பற்றிப் பின்னும் சொல்ல வும் வேண்டுமோ? இதன் கரையில் ஈசுவரனே, மலஹானி கரர் (அழுக்கைப் போகச்செய்பவர்) என்னும் அர்த்தத் தோடு கூடிய பெயரோடு இன்றைக்கும் நாளைக்கும் வஸித் துக்கொண் டிருக்கிறார். இத்தகைய தேவதைகளோடும், மஹான்களோடும், புண்ய தீர்த்தங்களோடும் கூடிய பிர தேசத்தினுடைய மஹிமையை வர்ணிக்கவும் முடியுமோ? உலகத்திலுள்ள ஸமஸ்த ஆச்சரியமான வஸ்துக்களுக்கும் ஜன்மபூமியான ஸாக்ஷாத் கைலாஸத்திலிருந்து வந்து, பற் பல க்ஷேத்திரங்களிலும் புண்ய தீர்த்தங்களிலும் யாத்திரை செய்து, மேருவென்ன, கங்கையென்ன, காசியென்ன, இவை களையெல்லாம் கண்ணுற்ற ஸ்ரீ சங்கரபகவத்பாத ஸ்வாமி களுக்கு இந்தவிடத்தைப் பார்த்ததும் ஆநந்தம் மேலிட்ட தென்றால் அதைப்பற்றி இன்னும் விஸ்தாரமாகவும் சொல்ல வேண்டுமோ?

இவ்வளவு மஹிமைபொருந்திய பிரதேசத்தையடைந்த தும் நமதாசார்யஸ்வாமிகள் ஆநந்த பரவசர்களாய், அந்த விபாண்டக தபோவநத்தின் சாந்தியையும், ஸாத்விகத்தை யும் கண்டு திரும்பத்திரும்பப் புகழ்ந்தார்கள். அவர்களு டைய சிஷ்யர்களெல்லாரும் அங்கேயே வஸிக்கலாமென்றார் கள். ஸரஸ்வதி தேவிக்கும் அந்தவிடம் மனத்துக்கு மிக வும் ரம்யகரமாகவிருந்தது. அந்தவிடத்திலேயே ஸரஸ்வ தியை ஸ்தாபிக்க வேண்டுமென்று ஆகாயவாக்குமுண்டா

யிற்று. உடனே அன்று மாத்யான்ஹிகத்தில் ஸ்வாமிகள் துங்கபத்திரைக்குச் சென்று, அங்கு கச்யபர், வஸிஷ்டர், விசுவாமித்ரர் முதலிய மஹரிஷிகளைக்கண்டு ஸம்பாஷித்துக் கொண்டிருக்கையில், அவ்விடத்தில் ஒரு தவளை அப்பொழுது தான் பிரஸவிக்கக்கண்டு அந்தச் சிசு வெயிலின் தாபம் பொறுக்கமாட்டாமல் தவிக்கையில், ஓர் ஸர்ப்பம் தனது படத்தையெடுத்து அதற்குக் குடையாகப் பிடித்து, அதன் நிழலில் அந்தத் தவளைக்குஞ்சை ரக்ஷித்ததைக் கண்ணுற்றார்கள். உடனே அந்தவிடத்திலேயே திவ்யமான ஓர் பிராஸாதத்தை நிர்மாணஞ்செய்து, அதில் சாரதாம்பாளை உத்தமமான முகூர்த்தத்தில் ஸ்தாபித்து, ஸ்ரீசக்ரத்தையும் பிரதிஷ்டை செய்தார்கள். இந்த சாரதாம்பாள் பீடந்தான் இப்பொழுதும் சிருங்ககிரியில் விளங்குகின்றது. இவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட அம்பாளின் உருவத்தைத் தான் அடுத்த பக்கத்தில் பதிப்பித்திருக்கிறோம். இந்த அம்மனிருக்குமிடத்திலேயே தான் கீழே ஸ்ரீசக்ரமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்ரீசக்ரத்தின் விவரத்தையும் அதனது பெருமையையும் எழுதுவதென்றால் மிகவும் விரியுமாதலால் அதைச் சொல்லாதொழிந்தனம்.

இவ்வாறு சிருங்ககிரியில் மடத்தை ஸ்தாபித்தானதும் அதற்கு அதிபதியாய் ஸதா ஸர்வகாலமும் அத்வைத ப்ரசாரம் செய்துகொண்டு வரும்படி முதல்முதலில் தமது சிஷ்யராகிய ஸுரேச்வராசாரியரை ஏற்படுத்தினார்கள். தாமும் கொஞ்சகாலம் அங்கேதானே வஸித்தார்கள்.



ஸ்ரீ சாரதாம்பாள், ஶ்ருங்கேரி.

## 16.

## ஆநந்தகிரி சிஷ்யரானது.

இச்சமயத்தில் ஸ்ரீசங்கராசாரியரிடத்தில் ஆநந்தகிரி என்றொரு சிஷ்யர் வந்து சேர்ந்தார். இவர் ஜன்மபூமியாவது இவர் ஆசாரியஸ்வாமிகளிடம் வந்த விதமாவது நிஷ்கர்ஷையாய்த் தெரியவில்லை. ஆயினும் இவர் மஹா புத்திசாலியென்றும் இவரிடத்தில் ஸ்வாமிகளுக்கு இருந்த அன்பினால் மற்றச் சிஷ்யர்களுக்குக் கொஞ்சம் அஸூயை ஏற்பட்டதென்றும் மட்டும் தெரிகிறது. ஏனெனில், ஒரு ஸமயத்தில் பாடஞ்சொல்வதற்கு இவர் வரவேண்டுமென்று நமது ஸ்வாமிகள் தாமஸித்தபொழுது அதில் ஏனையோர்களுக்கு மனமில்லாததையறிந்து ஆசாரியஸ்வாமிகள் ஆநந்தகிரியிடத்தில் தமது கருணைமாரியைப் பொழிந்தனர். உடனே அவர் ஸமஸ்தசாஸ்திரபாரங்கதராய் "தோடகம்" என்று சொல்லப்பட்ட விருத்தத்தில் ஐந்து சுலோகங்களால் வேதாந்தத்தைத் தெளிவாக எடுத்துச் சொன்னார். அதுமுதல் இவருக்குத் தோடகாசாரியர் என்று காரணப்பெயரும் உண்டாயிற்று.

# ஆநந்தகிரி சிஷ்யரானது.

இவருக்கு குருவிடத்தில் பரமவிசுவாஸம். குருசிசுரூஷை செய்வதில் மிகத்தேர்ந்தவர். இவர் ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகளைத் தெய்வமாகவே கொண்டாடினர். அவர்கள் முன்னிலையில் உட்காருவதுமில்லை, கொட்டாவி கூட விடுகிறதில்லை, பின்புறமாகத் திரும்புவதுமில்லை, அனுவசியமாகப் பேசுகிறதேயில்லை. அவர்கள் காரியங்களிலேயே கண்ணுயிருந்து அவைகளை முதலில் செய்கிறது. தமது பசியைக் கூடக் கவனிக்கிறதில்லை. சுருக்கிச் சொல்லுங்கால், இவருக்கு ஸ்வாமிகளிடத்திருந்த குருபக்திக்கு ஓர் எல்லையேயில்லையெனலாம். ஆசார்யஸ்வாமிகள் செய்த பாஷ்யத்திற்கெல்லாம் இவர் டீகை செய்திருக்கிறார். அதுவேதான் இன்னும் ஆநந்தகிரியமென்று விளங்குகின்றது. இந்த மாதிரியாக இவரும் ஸ்ரீசங்கரருடைய முக்கியமான சிஷ்யர்களுளொருவரானார். இந்த நான்கு முக்கிய சிஷ்யர்களாகிய (ஹஸ்தாமலகர், பத்மபாதர், ஸுரேச்வரர், தோடகர்) இவர்களைப் பார்த்தவர்களெல்லோரும் பலவாறாக மயங்கினார்கள்.

தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று சொல்லப்படும் நான்கு புருஷார்த்தங்களுந்தான் உருவெடுத்து வந்துவிட்டனவோ, அல்லது ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களின் மூர்த்திகள்தாமோ, அல்லது ஸாலோக்ய, ஸாமீப்ய, ஸாரூப்ய, ஸாயுஜ்யமென்று சொல்லப்படும் முக்தி பேதங்களோ இவை, அல்லது ஸாக்ஷாத் பிரம்மாவின் நான்கு முகங்களோ இவர்கள் என்று வியந்தார்கள்.

இத்தகைய மஹத்தான விபவத்தோடு கூடிய சிஷ்யர்களுடன் அளவில்லாக் கீர்த்தியைப் பரவச்செய்துகொண்டு அத்வைதாவதாரமாகிய ஸ்ரீசங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகள் சிருங்ககிரியில் விளங்கிவந்தார்கள்.

17.

# பத்மபாதரின் க்ஷேத்ரயாத்திரை.

சிருங்கேரியில் இந்த மாதிரியாக ஸ்ரீசங்கரர் மட்டிலடங்காத கீர்த்தியுடன் பிரகாசித்துக்கொண்டு வருகையில், ஒரு நாள் ஸுரேச்வராசாரியர் தமது குருவையடைந்து மிகுந்த வணக்கத்துடன் சாரீரக பாஷ்யத்துக்கு வார்த்திகம் செய்யுமாறு தமக்குக் கிருபைகூர்ந்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தார். இதைக்கேட்டதும் மற்ற சிஷ்யர்கள் வார்த்திகம்செய்வதற்குப் பத்மபாதர்தாம் தகுதியானவரென்று ஸ்வாமிகளிடம் தெரிவித்தார்கள். ஸுரேச்வராசார்யர் பூர்வாச்ரமத்தில் கர்மத்திலேயே கண்ணாயிருந்தவராதலாலும், தாம் தோல்வியடைந்ததால் மட்டுமே ஸ்ரீசங்கரரின் சிஷ்யரானமையினாலும், அத்வைத தத்வங்கள் இன்

னும் அவருக்கு நன்கு விளங்கியிராவென்றும், பத்மபாதர் மிகத்தெரிந்தவரென்றும், அவர் சிஷ்யராய் வெகுகாலமானதாலும், அவருக்கு மூன்று தரம் பாஷ்யபாடமாயிருப்பதாலும் அவர்தாம் சரியானபடி வார்த்திகம் எழுதுவதற்குரியவரென்றும் சொன்னார்கள். இதைக் கேட்டு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளும் தமக்கு இஷ்டமில்லாதிருந்தபோதிலும், சிஷ்யர்களின் மனத்திற்கிணங்க அவ்வாறு பத்மபாதரை ஸூத்ர பாஷ்யத்துக்கு டீகையும், ஸுரேச்வரரை உபநிஷத் பாஷ்யங்களுக்கு வார்த்திகமும் இன்னும் சில புதிதான அத்வைத கிரந்தங்களும் செய்யும்படி ஆஞ்ஞாபித்தார். அவர்களும் அவ்வண்ணமே செய்தார்கள். ஸுரேச்வரர் செய்த புதிய கிரந்தத்திற்குப் பெயர் நைஷ்கர்ம்யஸித்தி. ஆனால் தம்மை சாரீரகபாஷ்யத்திற்கு வார்த்திகம் செய்யவொட்டாமல் மற்ற சிஷ்யர்கள் தடுத்துவிட்டதால் ஸுரேச்வரர் கோபங்கொண்டு பத்மபாதர் செய்யும் வார்த்திகம் பூலோகத்தில் பிரஸித்தியில்லாமல் போகட்டுமென்று சபித்தார். பத்மபாதரும் வார்த்திகத்தைச் செய்து முடித்துக்கொண்டு ஸ்ரீசங்கரரிடம் தெரிவித்தார். அவர் ஸர்வஞ்ஞானதால் தனிமையில் ஸுரேச்வரரை நோக்கி "அப்பா! இதில் பஞ்சபாதிகமென்று சொல்லப்படும் முதல் ஐந்து சரணங்கள் தாம் பூமியில் பிரசுரமாகும், அவைகளிலும் நான்கு ஸூத்ரங்கள் தாம் விசேஷமான பிரஸித்தியடையும். நீயும் பிராரப்தகர்மவசத்தால் பூமியில் மறுபடியும் வாசஸ்பதியாக அவதரித்து எந்நாளும் பிரஸித்தியுடன் விளங்கும்படியான வார்த்திகத்தைச் செய்வாய்" என்றார்.

இதற்குக் கொஞ்சகாலத்திற்குப் பிறகு பத்மபாதர் ஸேதுயாத்திரை செய்யக்கருதி சிருங்கேரியிலிருந்து தமது

# பத்மபாதரின் ஸேதுயாத்திரை.

ஆசாரியஸ்வாமிகளிடம் விடைபெற்றுக்கொண்டு பற்பல க்ஷேத்ரங்கள் வழியாக யாத்திரையாய்ப் புறப்பட்டு வருங்கால், சில சிஷ்யர்களுடன் ஸ்ரீரங்கத்திற்கு ஸமீபத்தில் விளங்கும் தமது பூர்வாச்ரம மாதுலகிருஹத்தையடைந்து பிரபாகரமதத்தைச் சேர்ந்த சிலருடன் விவாதித்து, அங்கு வந்தவர்களுக்குத் தத்வோபதேசம் செய்து, அவ்விடம் விட்டுப் புறப்பட்டார். அப்பொழுது இவர் சிஷ்யர்களில் சிலர் வஹித்துவரும் புஸ்தகத்தைக் கண்டு, அம்மாதுலர் இது யாதென வினவ, பத்மபாதர் தமதாசார்யஸ்வாமிகளின் திருவாக்காகிய பிரம்மஸூத்திர பாஷ்யத்துக்குத்தாம் செய்த சிற்றுரை என விளங்க விடைபகர்ந்தார். அதைக்கேட்ட அம்மாதுலர் அப்புத்தகத்தைத் தம்மிடம் சிலகாலம் வைத்துவிட்டு யாத்திரை செய்து திரும்பிவரும்பொழுது எடுத்துப்போகலாமென வேண்டிக்கொள்ள, அவ்வண்ணமே அப்புத்தகத்தை அங்கு வைத்துவிட்டுத் தாம் ராமேசுவரம் சென்று, ஸேது தர்சனம், ஸமுத்திரஸ்நாநம் முதலியவற்றை முடித்துக்கொண்டு திரும்பினர். இதனிடையில் இவரது மாதுலர் இவர் எழுதிய டீகா கிரந்தமானது தமதுகுருவாகிய பிரபாகரர் எழுதிய கிரந்தத்துக்கு நேர் விரோதமாயும், அந்த மதத்தை முற்றிலும் கண்டிக்கத்தக்கதாயுமிருப்பதைப் பார்த்து, அதனால் பொறாமைகொண்டு, அப்புத்தகத்துடன் தமது வீட்டைக்கொளுத்திச் சாம்பலாக்கினர். பிறகு அவ்விடம் வந்த பத்மபாதாசாரியர் இச்செய்தியைக்கேட்டு மிகவும் மனவருத்தமுற்று, வேறு சிந்தையில்லாமல், தமது குருவை சிருங்ககிரியில் வந்து கண்டு தமது கிரந்தம்போனவழியைச் சொல்லிப் புலம்பினர். அதற்கு ஸ்ரீசங்கரர் அவரை ஒருவாறு பின்வருமாறு தேற்றினர். "அப்பா, வீணில் வருத்த

கூறவேண்டாம். நீ எழுதிய புஸ்தகத்தை ஒரு ஸமயத்தில் ஐந்துபாதம் வரையில் யாம் கேட்டதுண்டு. அதை இப்பொழுது சொல்லுவோம், நீ எழுது" என ஆஞ்ஞாபித்தார். பத்மபாதரும் உடனே அவ்வாறே எழுதினார். ஆதலால் இந்த ஐந்து பாதங்கள் தாம் பிரசாரத்தையடைந்தன.



## 18.

## மாதிருகர்மா.

பத்மபாதர் இவ்வாறாக ஸேது யாத்திரை சென்றிருந்த காலத்தில் ஒரு நாள் நமது ஆசார்யஸ்வாமிகள் தமது யோக சக்தியால் தமது தாயார் அந்திமதசையிலிருப்பதாக அறிந்து உடனே ஆகாசமார்க்கமாகக் கணப்பொழுதில் காலடி கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். ஒன்றிலுமே பற்று இல்லாத இம்மஹான் தமது தாயாரை இந்த அவஸ்தையில் கண்டதும் மனமிளகினவராய் அந்தம்மாளை பிரதக்ஷிணம்பண்ணி நமஸ்காரம் செய்தார். ஸந்யாஸிகள் இவ்வாறு செய்யலாமோவெனின் ஸ்காந்தபுராணத்தில் இதற்கு ஆதாரமிருக்கிறது.

संन्यस्ताखिलकर्माऽपि पितुर्वन्द्यो हिमस्करी ।
सर्ववन्द्येन यतिना प्रसूर्वन्द्या प्रयत्नतः ॥

ஸம்ந்யஸ்தாகிலகர்மாऽபி பிதுர்வந்த்யோ ஹிமஸ்கரீ ।
ஸர்வவந்த்யேந யதிநா ப்ரஸூர்வந்த்யா ப்ரயத்நத꞉ ॥

## மாதிருகர்மா.

எல்லாராலும் வந்தனம் செய்யத் தகுந்த தெய்வமாகையால் "தாயார் எந்த விதத்திலும் நமஸ்கரிப்பதற்கு உரியவள் என்று சொல்லியிருக்கிறது. எவ்வித மோஹாந்தகாரத்தையும் போக்கக்கூடிய இந்த உத்தமசீலர் தமது தாயாரைப்பார்த்து "அம்மா! சோகத்தை விட்டுவிட்டு உனக்கு ஆகவேண்டியதை என்னிடம் சொல்" என்றார். வெகுகாலமாக விட்டுப்பிரிந்திருந்த தனது புத்திரனை இச்சமயத்தில் ஸ்வஸ்தனாகவே நேரில் பார்த்துத் தானை மொழிந்ததாவது "அப்பா! இந்த அவஸ்தையில் உன்னை நான் ஸௌக்கியமாகக் கண்டால் கண்டதே எனக்குப் போதும். வேறு என்ன எனக்கு ஆகவேண்டியிருக்கிறது? ஆனால் என் சரீரம் மிகவும் ஜீர்ணமாய்ப் போய்விட்டது. அப்பா, இனிமேல் என்னால் ஜீவித்திருக்கமுடியாது. ஆகையால் சாஸ்திரப்படிக்கு எனக்குள்ள ஸம்ஸ்காரங்களை நீ செய்து என்னைப் புண்யலோகத்தை அடையும்படி செய்" என்றாள். இதைக்கேட்டதும் நமது ஆசார்யஸ்வாமிகள் தமது மாதாவுக்கு உபதேசஸாஹஸ்ரி என்று சொல்லப்படும் அத்புதமான கிரந்தத்தால் பிரம்மத்தை உபதேசித்தார். இதைச்செவியுற்ற அந்த அம்மாள் "அப்பா! நிர்குணமான பிரம்மத்தைக் கிரஹிக்கிறதற்கு எனக்குத்திறமை போதாது. ஆகையால் ஸகுணமாயுள்ளதை எனக்குச்சொல்லு" என்றாள். உடனே பரமதயாளுவான அந்த யதிசக்ரவர்த்தியும் அத்யத்புதமான பதினான்கு சுலோகங்களால் ஸகுணரூபியான ஸாக்ஷாத் மஹாதேவனை ஸ்தோத்ரம் செய்தார். இந்தச் சுலோகங்களுடைய காம்பீர்யத்தையும், அர்த்தபுஷ்டியையும் வர்ணிக்க ஆரம்பித்தே மிகவும் ஸாஹஸமாதலாலும், ஏதோ கொஞ்சம் நமக்குத்தெரிந்தவரையில் சொல்லுவதாயிருந்தா

## மாத்ருகாமா.

இங்கூட மிகவும் விஸ்தாரமாகுமாதலாலும், பின்னொரு ஸமயத்தில் இதைப்பற்றி விவரித்துக் கொள்ளலாமென்றெண்ணி, இங்கு அந்த சுலோகங்களை வரைவதோடுமட்டும் நிறுத்தினோம்.

अनाद्यन्तमाद्यं परं तत्त्वमर्थं
चिदाकारमेकं तुरीयं त्वमेयम् ।
हरिब्रह्ममृग्यं परब्रह्मरूपं
मनोवागतीतं महः शैवमीडे ॥ १ ॥

स्वशक्त्यादिशक्त्यन्तसिंहासनस्थं
मनोहारिसर्वाङ्गरत्नादिभूषम् ।
जटाचन्द्रगङ्गास्थिसंपर्कमौलिं
पराशक्तिमित्रं नुमः पञ्चवक्त्रम् ॥ २ ॥

शिवेशानतत्पूरुषाघोरवामा-
दिभिर्ब्रह्मभिर्हृन्मुखैः षड्भिरङ्गैः ।
अनौपम्यषट्त्रिंशतं तत्त्वविद्या-
मतीतं परं त्वां कथं वेत्ति को वा ॥ ३ ॥

प्रवालप्रवाहप्रभाशोणमर्धं
मरुत्वन्मणिश्रीमहःश्याममर्धम् ।
गुरु स्यूतमेकं वपुश्चैकमन्तः
स्मरामि स्मरापत्तिसंपत्तिहेतुम् ॥ ४ ॥

स्वसेवासमायातदेवासुरेन्द्रा-
नमन्मौलिमन्दारमालाभिषिक्तम् ।

नमस्यामि शम्भो पदाम्भोरुहं ते
भवाम्भोधिपोतं भवानीविभाव्यम् ॥ ५ ॥

जगन्नाथ मन्नाथ गौरीश नाथ
प्रपन्नानुकम्पिन्विपन्नार्तिहारिन् ।
महःस्तोममूर्ते समस्तैकबन्धो
नमस्ते नमस्ते पुनस्ते नमोऽस्तु ॥ ६ ॥

महादेव देवेश देवादिदेव
स्मरारे पुरारे यमारे हरेति ।
ब्रुवाणः स्मरिष्यामि भक्त्या भवन्तं
ततो मे दयाशील देव प्रसीद ॥ ७ ॥

विरूपाक्ष विश्वेश विश्वाधिकेश
त्रयीमूल शम्भो शिव त्र्यम्बक त्वम् ।
प्रसीद स्मर त्राहि पश्यावपुष्य
क्षमस्वाऽऽप्नुहीतीक्ष पाहि क्षिपामः ॥ ८ ॥

त्वदन्यः शरण्यः प्रपन्नस्य नेति
प्रसीद स्मरन्नोऽवहन्यास्तु दैन्यम् ।
न चेत्ते भवेद्भक्तवात्सल्यहानि-
स्ततो मे दयालो दयां संनिधेहि ॥ ९ ॥

अयं दानकालस्त्वहं दानपात्रं
भवान्नाथ दाता त्वदन्यं न याचे ।
भवद्भक्तिमेव स्थिरां देहि मह्यं
कृपाशील शम्भो कृतार्थोऽस्मि तस्मात् ॥ १० ॥

पशुं वेत्सि चेन्मां त्वमेवाधिरूढः
कलङ्कीति वा मूर्ध्नि धत्से त्वमेव ।
द्विजिह्वः पुनः सोऽपि ते कण्ठभूषा
त्वदङ्गीकृताः शर्व सर्वेऽपि धन्याः ॥ ११ ॥

न शक्नोमि कर्तुं परद्रोहलेशं
कथं प्रीयसे त्वं न जाने गिरीश ।
तथा हि प्रसन्नोऽसि कस्यापि कान्ता-
सुतद्रोहिणो वा पितृद्रोहिणो वा ॥ १२ ॥

स्तुतिं ध्यानमर्चां यथावद्विधातुं
भजन्नप्यजानन्महेशावलम्बे ।
त्रसन्तं सुतं त्रातुमग्रे मृकण्डो-
र्यमप्राणनिर्वापणं त्वत्पदाब्जम् ॥ १३ ॥

अकण्ठे कलङ्कादनङ्गे भुजङ्गा-
दपाणौ कपालादभालेऽनलाक्षात् ।
अमौलौ शशाङ्कादवामे कलत्रा-
दहं देवमन्यं न मन्ये न मन्ये ॥ १४ ॥

---

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ க ॥

[illegible]
[illegible] ।

# மாதிருகர்மா.

ஜடாஹீந்துகங்காஸ்திஶம்யாகமௌலிம்
பராஶக்திமித்ரம் நம: பஞ்சவக்த்ரம் ॥ ௨ ॥

ஶிவேஶாநதத்புருஷாகோரவாமாதிபி-
ர்ப்ரஹ்மபிர்ஹ்ருந்முகை: ஷட்பிரங்கை: ।
அநௌபம்ய ஷட்த்ரிம்ஶதம் தத்த்வவித்யா-
மதீதம் பரம் த்வாம் கதம் வேத்தி கோ வா ॥ ௩ ॥

ப்ரவாலப்ரவாஹப்ரபாஶோணமர்தம்
மருத்வந்மணிஶ்ரீமஹ:ஶ்யாமமர்தம் ।
குணஸ்யூதமேதத்வபு: ஶைவமந்த:
ஸ்மராமி ஸ்மராபத்திஸம்பத்திஹேதோ: ॥ ௪ ॥

ஸ்வஸேவாஸமாயாததேவாஸுரேந்த்ரா-
நமந்மௌலிமந்தாரமாலாபிஷிக்தம் ।
நமஸ்யாமி ஶம்போ பதாம்போருஹம் தே
பவாம்போதிபோதம் பவாநீவிபாவ்யம் ॥ ௫ ॥

ஜகந்நாத மந்நாத கௌரீஸநாத
ப்ரபந்நாநுகம்பிந்விபந்நார்திஹாரிந் ।
மஹ:ஸ்தோமமூர்தே ஸமஸ்தைகபந்தோ
நமஸ்தே நமஸ்தே புநஸ்தே நமோऽஸ்து ॥ ௬ ॥

மஹாதேவ தேவேஶ தேவாதிதேவ
ஸ்மராரே புராரே யமாரே ஹரேதி ।
ப்ருவாண: ஸ்மரிஷ்யாமி பக்த்யா பவந்தம்
ததோ மே தயாஶீல தேவ ப்ரஸீத ॥ ௭ ॥

விரூபாக்ஷ விஶ்வேஶ விஶ்வாதிதேவ
த்ரயீமூல ஶம்போ ஶிவ த்ர்யம்பக த்வம் ।

## மாத்ருகர்மா.

𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾 𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌪𑌦𑍍𑌯𑌾𑌨𑌿 𑌪𑌞𑍍𑌚
𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌵𑌾𑌽𑌽𑌸𑍍𑌥𑌾𑌯 𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾 𑌪𑌾𑌣𑌿 𑌕𑌲𑌿𑌪𑌾𑌦𑌃 ‖ ௮ ‖

𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌃 𑌶𑌰𑌣𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌯 𑌦𑍇𑌹𑌿
𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌸𑍍𑌨𑌾𑌤𑍋𑌽𑌪𑍍𑌯𑌨𑌨𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌃 𑌦𑍇𑌹𑌨𑍍𑌤𑌿 ।
𑌨 𑌮𑍇 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌸𑌮𑍇𑌤𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌨𑌿-
𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌮𑍇 𑌦𑌯𑌾𑌮𑍇𑌵 𑌦𑌯𑌾 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿 ‖ ௧ ‖

𑌅𑌯𑌂 𑌦𑌾𑌨𑌕𑌾𑌲𑌸𑍍𑌯 𑌸𑌮𑌂 𑌦𑌾𑌨𑌪𑌾𑌤𑍍𑌰𑌂
𑌸𑌵𑌾𑌸𑌨𑌾𑌯 𑌦𑌾𑌤𑌾 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌂 𑌨 𑌯𑌾𑌮𑍇 ।
𑌸𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌮𑍇𑌵 𑌸𑍍𑌥𑌿𑌰𑌂 𑌮𑍇 𑌦𑍇𑌹𑌿 𑌦𑍇𑌹𑌂
𑌕𑍃𑌪𑌾𑌶𑍀𑌲 𑌶𑌂𑌮𑍇 𑌕𑍃𑌤𑌾𑌯𑍇𑌤𑌾𑌽𑌸𑍍𑌥𑌿 𑌤𑌸𑍍𑌥𑌾𑌃 ‖ ௯

𑌪𑌶𑍁𑌂 𑌮𑌮 𑌮𑍇𑌧𑌾𑌂 𑌸𑌮𑍇𑌵𑌾𑌯𑌿𑌰𑌾𑌦𑍍𑌯𑌃
𑌕𑌲𑌂𑌕𑌿𑌤𑌿 𑌵𑌾 𑌦𑌿𑌵𑍍𑌯𑌿𑌨𑍍 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌮𑍇𑌵 ।
𑌶𑌿𑌶𑍁𑌃 𑌪𑍁𑌨𑌃 𑌮𑌾𑌽𑌪𑌿 𑌮𑍇 𑌕𑌣𑍍𑌠𑌸𑍂𑌤𑍍𑌰𑌾
𑌸𑍍𑌵𑌦𑌂𑌶𑌕𑍃𑌤𑌾𑌃 𑌶𑌵𑌲 𑌸𑌮𑍇𑌲𑌽𑌪𑌿 𑌯𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌃 ‖ ௰ ‖

𑌨 𑌶𑌕𑍍𑌨𑍋𑌮𑌿 𑌕𑌤𑌮𑍍𑌲𑌂 𑌪𑌰𑌮𑍇𑌤𑍍𑌰𑌸𑌮𑍇𑌶𑌂
𑌕𑌷𑍍𑌟𑌂 𑌪𑍍𑌰𑌯𑌮𑍇 𑌸𑌂 𑌨 𑌜𑌾𑌨𑍇 𑌨 𑌗𑍀𑌶 ।
𑌤𑌥𑌾 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑍋𑌽𑌪𑌿 𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌕𑌾𑌲𑌾-
𑌸𑍍𑌤𑌦𑍇𑌤𑍍𑌰𑌾𑌹𑍍𑌨𑍋 𑌵𑌾 𑌪𑌿𑌤𑍍𑌰𑍇𑌤𑍍𑌰𑌾𑌹𑍍𑌨𑍋 𑌵𑌾 ‖

𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌲𑍋𑌕𑌂 𑌯𑌥𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂
𑌸𑌜𑌨𑍍𑌮𑌜𑌾 𑌨𑌨𑍍𑌦𑌮𑌾𑌵𑌸𑍇 ।
𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑌾𑌤𑌨𑍍𑌮𑍇 𑌕𑍃𑌕𑍍𑌷𑍋-
𑌯𑌲𑍍𑌪𑌾𑌣𑌿𑌵𑌲𑌾𑌪𑌣𑌂 𑌸𑍍𑌵𑌦𑍇𑌹𑌾𑌦𑍍𑌯 ‖ ௰௩ ‖

𑌅𑌕𑍍𑌷𑍋 𑌕𑌲𑌂𑌕𑌾𑌦𑌨𑌮𑌯 𑌸𑌜𑌂𑌗𑌾-
𑌦𑌵𑌾𑌮𑍇𑌷 𑌕𑌵𑌾𑌯𑌾𑌦𑌸𑌾𑌮𑍇𑌽𑌨𑌯𑌾𑌕𑍍𑌷𑌾𑌃 ।

# மாதிருகர்மா.

சுலெளெள ஸம்ஸாரசாஷவாநே கருதா॥

ஷஸம் லெஷவந்ரும் ந ஈலெநு ந லெநு ॥ ஙச ॥

இனி ஸகுணரூபியாக ஈசுவரனைத் தியானம் செய்வதற்கு இதற்கு ஸமானமாக வேறு சுலோகங்கள் யாராலேயும் செய்யப்பட்டதுமில்லை, செய்யப்படப்போகிறதுமில்லை. இத்தகைய அத்புதமான ஸ்தோத்ரத்தைச் செவியுற்றதும் மஹாதேவனும் தமது சிவகணங்களை அனுப்பினார். சூலம், பினாகம் முதலிய குரூரமான ஆயுதங்களோடு கூடிய இவர்களைப்பார்த்ததும் நமது ஸ்வாமிகளின் தாயார் மிகப்பயந்து "அப்பா! இவர்களுடன் நான் போகமாட்டேன்" என்றாள். உடனே ஸ்ரீசங்கரரும் அந்தச் சிவதூதர்களை அனுப்பிவிட்டு, ஸாக்ஷாத் மாதவனை ஸ்தோத்ரஞ்செய்தார். அவரும் தமது தூதர்களை விமானத்துடன் அனுப்பினார். இவ்வாறு ஸ்ரீமந் நாராயணனையே த்யானஞ் செய்துகொண்டு, மஹாபாக்ய சாலினியான அந்த மாதுசிரோமணி, தமது புத்திரனருகிலிருக்கும்பொழுதே அந்த விமானத்திலேறிக்கொண்டு அர்ச்சிராதிமார்க்கமாக ஸ்ரீவைகுண்டலோகமடைந்தாள்.

பிறகு ஸ்ரீசங்கரரும் தமது மாதாவுக்குரிய உத்தரக்ரியைகளைச் செய்யவேண்டி, அந்த அக்கிரஹாரத்திலுள்ளவர்களைக் கூப்பிட்டதில், அங்குள்ளவர்களெல்லோருமே வரமாட்டோமென்று சொல்லிவிட்டார்கள். இதனிலும் வேறு பரிதாபமான அவஸ்தையும் வேண்டுமோ? தாயாரைப் பறிகொடுத்துவிட்டு அவள் சரீரத்தை தஹனஞ்செய்வதற்காக ஒத்தாசைக்கு வரவேணுமாய் வீடுவீடாய்ப் போய்க் கெஞ்சியும், ஒருவராவது அதற்கிணங்கவில்லை. கல்நெஞ்சுடன் கூடிய அந்த அக்கிரஹாரவாஸிகள் நெருப்புக்கூடக்கொடுக்காமல் "ஸந்யாஸிக்கு மாதிருகர்மம் எங்கிருந்து வந்

த்து? இவன் சுத்த அயோக்கியன்; ப்ரஷ்டன்" என்பதாகப் பலவாறாக யதிசிரேஷ்டரான ஸ்ரீசங்கரரை நிந்தித்தார்கள். இதையெல்லாம் பார்த்ததும் பகவத்பாதருக்கு அடங்காக் கோபம் உண்டாயிற்று. அங்குள்ளவர்களையெல்லாம் அவர்கள் சபித்தார்கள். உடனே தமது இல்லத்தின் கொல்லைப் புறத்தின் வலது பாகத்தில் அங்கிருந்த வாழைமரங்களால் ஒரு சிதையை அடுக்கி, அதில் தமது தாயாரின் சரீரத்தைத் தாம் ஒருவராகத் தூக்கமுடியாததால் துண்டு துண்டாகச் சேதித்துக்கொண்டுவந்து சேர்த்து, தமது கமண்டுலு ஜலத்தால் தமது தாயாரின் வலதுகையில் நெருப்பை மூட்டி அதனால் தஹனகர்மாவைச்செய்து முடித்தார். இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் அந்த அக்கிரஹாரத்திலுள்ளவர்கள் வேதத்திற்கு அநதிகாரிகள் என்றும், அவர்கள் யதிகளை பிக்ஷைசெய்விப்பதற்கு அனர்ஹர்களென்றும், தம்மை இவ்வாறு நிர்ப்பந்தித்ததால் அங்குள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் அந்தந்த வீட்டின் கொல்லைப்புறத்திலேயே ச்மசானம் ஏற்படவேண்டுமென்றும், ஒவ்வொரு பிரேதத்தையும் சேதித்தே சிதைக்கு எடுத்துப்போகவேண்டுமென்றும் சபித்தார். இந்தக்கடோரமான சாபத்தை அங்குள்ளவர்கள் இன்னும் அனுபவிக்கிறார்கள். இன்னமும் யதிகள் அங்கு ஒருவர் வீட்டிலும் பிக்ஷைசெய்வதில்லை. ஒவ்வொரு வீட்டிலும் ச்மசானம் கொல்லைக்குள்ளேயேதான். ஆனால் இறந்தவர்களின் சரீரத்தைச்சேதித்துக் கோரப்படுத்துவதற்குப் பர்யாயமாக ஓர் கத்தியை எடுத்து வெட்டுவதுபோல அபிநயித்துவிட்டுப்பிறகு மேற்காரியங்களை நடத்துகிறார்கள். ஸர்வலோகபூஜிதர்களாயிருக்கும் மஹான்களை நிந்திப்பதின் பலன் இப்படித்தானாகும். அந்தக்கால

ழ்க்கிராமமே பின்பு உருவாகாமல் நசித்துப்பாழ்த்துப் போய் விட்டது.

"இந்தப்பிரகாரம் தமது தாயாரைத் திரும்பிவருதல் என்பதில்லாதிருக்கும்படியான ஸௌக்கியமான அத்யுந்நத பதவியில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு, யதிஸார்வபௌமரான ஸ்ரீசங்கரபகவத்பாதர் இவ்வுலகில் திக்விஜயம் செய்ய ஆரம்பித்தார்கள்."



# 19.

## திக்விஜயம்.

இப்பொழுதுதான் யாம் இம்மஹானுடைய சரித்திரத்தை எழுதப் புகுந்தபின் ஞாஹளம் நன்கு புலப்படுகிறது. அக்காலத்திலோ ஜகத்தில் பரவியிருந்த மதங்களுக்கு ஓர் எல்லையில்லை. ஆயிரக்கணக்காக மதங்கள் இருந்தன. இதற்கு முந்திச் சொல்லியபடி ஒவ்வொரு மதத்தினரும், தத்தமக்கு ஏற்றவாறு பலவகை ஆதாரங்களை நழுது சுருதி ஸ்மிருதி, முதலியவைகளிலிருந்தே எடுத்துக்கூறினார்கள். நமது ஸ்வாமிகள் ப்ரவசனம் செய்த அத்வைதமதமோ, பொதுவாக ஜனங்களிடத்து அக்காலத்தில் வியாபிக்கவில்லை. ஆதலால் அளவிறந்த அத்தகைய துர்மதங்கள் விசேஷமாய்ப் பரவியிருந்த ஒவ்வொரு இடத்திற்கும் இந்த யதிசக்ரவர்த்தி சென்று அங்குள்ள அந்த மதத்தின் தலைவர்களுடன் வாதித்து, அத்வைத மதத்தின் பெருமையை ஸ்தாபித்து,

அதனது தத்வத்தை ஜனங்களுக்குப் போதித்து, நாமடங்குமே அஸத்யத்தைத் தொலைத்து ஸத்யத்தை நிலைநாட்டினான் மஹிமையை யாரால் சொல்லமுடியும். ஸமஸ்த மதங்களுடையவும் ஸாராம்சத்தை நன்குணர்ந்து க்ரந்த ரூபமாக "ஸர்வதர்சன ஸங்கிரஹம்" என்று எழுதிருக்கும் ஸாக்ஷாத் வித்யாரண்யஸ்வாமிகள் கூட "क्वेदं शंकरसद्गुरोः स्वचरितं क्वाहं वराकी" ஸத்குருவாகிய ஸ்ரீசங்கரருடைய திவ்ய சரித்திரமெங்கே, அல்பனாகிய யான் எங்கே? என்று தம்மைத்தாமே இவ்விஷயத்தில் அல்பனாக நினைக்கும்பொழுது மற்றவர்களின் துணிவைப்பற்றி என் சொல்வது? ஸ்வாமிகளின் திக்விஜயத்தின் மஹிமையைப்பற்றி நினைக்கும்பொழுது அதனது காம்பீர்யத்திலீடுபட்டு ஒன்றும் எழுதத்தோன்றாமல் பயமே மேலிடுகிறது. அதை எவ்வாறு வர்ணிக்கிறது என்று மனக்குழப்பமும் உண்டாகிறது. நமது உபநிஷத்துக்களில் மந்த்ரத்ரஷ்டாக்களாயிருந்த மஹரிஷிகள் பிரம்ஹத்தைக் குறித்துச் சொல்லும்பொழுது "यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह" அதை அடைவதற்கு என்ன பிரயத்தினம் செய்தும் அடையாமல் மனமும் வாக்கும் திரும்பிவிட்டனவென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் முக்காலமுமறிந்த மஹரிஷிகளாதலால் அவர்களுக்கு பிரம்ஹத்தை யறிய முடியாமலிருந்தது. மந்த புத்திகளான ஸாதாரண மனிதர்களுக்கோவெனில் இம்மஹானுடைய மஹிமையைப்பற்றி எடுத்துச் சொல்லவாவது அல்லது பகுத்தறியவாவது அஸாத்தியமான விஷயம். அது வாக்குக்காவது மனத்துக்காவது எட்டாதது. ஆதலால் எமக்குத்தெரிந்தவரையில் மிகவும் சுருக்கமாய் அதை எழுதி இச்சரித்திரத்தை முடிப்போம்.

# திக்விஜயம்.

தமது மாதாவின் கர்மா முடிந்தவுடன் ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் சிருங்ககிரிக்குச் சென்று அவ்விடத்தில் மடத்தை ஸரிவர சாசுவதமாய் நடத்தவேண்டியதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்துவிட்டு ஸுரேசுவரரை அங்கிருக்கச் செய்து தமது மற்றைய சிஷ்யர்களுடன் ரமேசுவர யாத்திரைக்குச் சென்றார்கள். தாம் போகும் ஒவ்வோரிடத்திலும் ஆங்காங்குள்ள ராஜ ஸதஸ்ஸுகளிலும் வித்வத்கோஷ்டிகளிலும் அத்வைதமதத்தினத்விதீயமகிமையை எடுத்துப் பிரஸங்கித்துப், பிறமதங்களிலுள்ள குறைகளையும், துராசாரங்களையும் களைந்துரைத்து அந்நாட்டார்களையெல்லாம் தமது கோட்பாட்டுக்குள்ளாக்கினார்கள். வழியில் ஜகன்னாதத்தில் ஓர் மடத்தை ஸ்தாபித்தார்கள். அது இன்னும் கோவர்த்தனமடமென்று விளங்குகின்றது. அங்கிருந்து காஞ்சீபுரம் சென்று அவ்விடத்திலுள்ள சாக்தர்களையெல்லாம் வென்று, சிவகாஞ்சீயென்றும் விஷ்ணுகாஞ்சீயென்றும் இரண்டு பட்டணங்களை ஸ்தாபித்து அங்குமோர் மடத்தை ஏற்படுத்திப் பிறகு சிதம்பரத்தின் வழியாக வைத்தீசுவரன் கோவிலையடைந்தார்கள். இவ்விடத்திலுள்ளவர்களுக்கு நமது ஸ்வாமிகள் அத்வைதோபதேசம் என்ன செய்தும் அவர்களுக்குப் புலப்படாமையால், அவர்களை அழைத்துக்கொண்டு அவ்வூர் ஈசுவர ஸந்நிதானத்திற்குச் சென்று அவ்விடத்திலுள்ள லிங்கத்தை நோக்கி எந்த மதம் ஸத்யம் என்று ஸ்ரீசங்கரர் கேட்டதாகவும், உடனே அந்த லிங்கத்திலிருந்து எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது ஈசுவரனே நேரில் ஆவிர்ப்பவித்து அத்வைதமே ஸத்யம், அத்வைதமே ஸத்யம் அத்வைதமே ஸத்யம், என்பதாக மூன்றுதரம் சொல்லிவிட்டு அந்தர்த்தானமானதாகவும், அது முதல் சோழராஜ்யம் முழு

லைதும் ஸ்ரீசங்கரரையே தெய்வமாகக் கொண்டாடி அவ ரையே குருவாக அடைந்ததாகவும் ஓர் ஐதிஹ்யமுண்டு. வைத்தீசுவரன் கோவிலிலிருந்து மதுரைக்குச்சென்று அங் கிருந்த சக்திபூஜையின் வேகத்தையும் நிறுத்தி, வைதிகமார்க் கத்தை அவர்களுக்குப் போதித்து, பாண்டியராஜனையும் தமது வசமாக்கிப் பாண்டி நாட்டின் வழியாக ராமேசுவரம் போய்ச்சேர்ந்தார்கள். அங்கு சிலகாலம் இருந்து வேதார் த்தங்களையும், ராமநாத பூஜனமும் செய்தானபிறகு, சிருங்ககிரியி லிருந்து அடிக்கடி இந்த தக்ஷிண தேசங்களிலெல்லாம் அந்த மடத்து ஸ்வாமிகள் விஜயம் செய்து அவைகளைப் பரிசுத்த மாக்கும்படி ஏற்படுத்தி, சாக்தர்கள், காணபதர்கள், காபாலி கர்கள் முதலியவர்களைத் தலையெடுக்கவொட்டாமல் செய்த பிறகு தாம் தமது சிஷ்யர்களுடன் வடக்குத் திக்கை நோக் கிப் புறப்பட்டார்கள். விதர்ப்பதேசமார்க்கமாகச் சென்று உஜ்ஜயினியை அடைந்தார்கள். இவ்விடத்தில் பைரவர்கள் என்பதாக ஓர் குரூரமான மதத்தார் இருந்தார்கள். அவர் கள் மதம் என்னும் வியாஜத்தால் செய்த குரூரமான செய் கைகளுக்கு ஓர் அளவில்லை. இவ்வளவு பலிகள் தாம் இன்ன வித பலிகள் தாம் கொடுக்கப்பட்டனவென்று கூறுவது அஸாத்தியம். ஸ்ரீ சங்கரரோவெனில் இந்த துராசாரங் களைக் கண்டவுடன் மிகுந்த ஆக்கிரஹத்துடன் அவர்களு டைய குரூரமான பாப நடவடிக்கைகளை எடுத்துக் கண்டித் தார்கள். ஆனால் அந்த மந்தமதிகள் இம்மஹானின் வார்த் தைகளைக் கேளாமல் தங்களது தலைவனான க்ரகசன் (கரகச என்றால் ரம்பம் என்று அர்த்தம். இப்பெயர் இவனுக்குத் தான் தகும்) என்பவனோடு நமது ஸ்வாமிகளை எதிர்த்துப் பிடித்துக் கொலைசெய்யத் தலைப்பட்டார்கள். உடனே இந்த

யதிஸார்வபௌமரும் அத்தேசத்தரசனைத் தமது வசமாக்கி அவனைக்கொண்டு அந்த பைரவர்களை யெல்லாம் தண்டித்து பலாத்காரமாய்த் தமக்குக் கீழ்ப்படியும்படி செய்துகொண்டார்கள். பின்பு அங்கிருந்து குஜராத்துக்குச் சென்று, துவாரகையில் ஓர் மடத்தை ஸ்தாபித்தார்கள். இம்மடமும் இன்னும் பிரஸித்தியாய் விளங்குகிறது.

பிறகு கங்கா தீரத்திலுள்ள பற்பல க்ஷேத்ரங்களுக்குச் சென்று அவ்விடங்களிலுள்ள, பாஸ்கரர், பாணன், தண்டி, மயூரன் முதலான அநேக ப்ரமுகர்களை வாதத்தில் வென்று, ஸமாச்ரயணம் என்று சொல்லிச் சரீரத்தில் தாம்ர முத்திரைகளால் சூடுபோட்டுக்கொள்வது முதலான பல அசாஸ்திரீய வாடிக்கைகளைக்கண்டித்து எங்குப்பார்த்தாலும் அத்வைதத்தையே வேரூன்றும்படி செய்தார்கள். சுருக்கச்சொல்லுமிடத்து, ஸ்ரீவித்யாரண்யஸ்வாமிகள் சொல்லுகிறபடி.

बुद्धो युद्धसमुद्यतः किल पुनः स्थित्वा क्षणाद्विद्रुतः
कौणे द्राक्कणभुग्व्यलीयततमः स्तोमावृतो गौतमः ।
भग्नोऽसौ कपिलः पलायत ततः पातञ्जलश्चाञ्जलिं
चक्रुस्तस्य यतीशितुश्चतुरता केनोपमीयेत सा ॥

புத்தோ யுத்தஸமுத்யத꞉ கில புந꞉ ஸ்தித்வா க்ஷணாத்வித்ருத꞉
கௌணே த்ராக்கணபுக்வ்யலீயததம꞉ ஸ்தோமாவ்ருதோ கௌதம꞉ ।
பக்நோ஽ஸௌ கபில꞉ பலாயத தத꞉ பாதஞ்ஜலச்சாஞ்ஜலிம்
சக்ருஸ்தஸ்ய யதீசிதுச்சதுரதா கேநோபமீயேத ஸா ॥

"யுக்தத்திற்காக ஸந்நத்தனாக வந்த புத்தன் ஒரு க்ஷணப் பொழுதில் விரட்டப்பட்டான். காணாதனும் ஒரு மூலையில் தள்ளப்பட்டான். கௌதமனோ இருட்டால் மூடப்பட்டான். காபாலிகனோ அவமானப்படுத்தப்பட்டு ஓட்டம் பிடித்தான். பாதஞ்சலன், அஞ்ஜலிபந்தனம் செய்தான். இவற்றையெல்லாம் செய்த அந்த யதிபதியின் ஸாமர்த்தியத்தை என்னென்று சொல்வது.

शान्तानां सुभटाः कपालिकपतद्ग्राहग्रहव्यापृताः
काणादप्रतिहारिणः क्षपणकक्षोणीशवैतालिकाः ।
सामन्ताश्च दिगम्बरान्वयभुवश्चार्वाकवंशाङ्कुरा
नव्याः केचिदलं मुनीश्वरगिरा नीताः कथाशेषताम् ॥

ஶாந்தாநாம் ஸுபடா: கபாலிகபதத்ராஹக்ரஹவ்யா
ப்ருதா:
காணாதப்ரதிஹாரிண: க்ஷபணகக்ஷோணீஶவைதா-
லிகா: ।
ஸாமந்தாஶ்ச திகம்பராந்வயபுவஶ்சார்வாகவம்ஶாங்குரா
நவ்யா: கேசிதலம் முநீஶ்வரகிரா நீதா: கதாஶேஷ
தாம் ॥

இவ்வாறாக மற்றைய மதங்களை யெல்லாம் கதாசேஷமாகச் செய்து, எண்டிசைகளிலும் த்வைதவார்த்தையே இல்லாமலடித்து, ஸமஸ்த ஸந்தேகத்தையும் விலக்கி, அத்வைத மார்க்கத்தை நன்கு பிரகாசிக்கச் செய்தார்கள்.

இதனடுவில் இவர்கள் எப்பொழுது சிறந்த மாந்திரிகனான அபிநவகுப்தனென்பவனை ஜயித்தார்களோ அப்பொழுதே அவன் மிகவும் சினங்கொண்டு எவ்வாற்றானும் இவர்களைத் தொலைக்க வேண்டுமென்ற துரெண்ணத்துடன்

நமது ஸ்வாமிகள்மேல் ஆபிசாரமந்திரங்களைப் பிரயோகம் செய்தான். அதனால் இவர்களுக்கு பகந்தரம் என்று சொல்லப்படும் ஓர் குரூரமான ரோகம் உண்டாயிற்று. அதைச்சற்றேனும் லக்ஷியம் செய்யாமல் ஸ்வாமிகளிருந்தபோதிலும், இவர்களுடைய சிஷ்யர்களெல்லோரும் இவர்களை வெகுவாகப் பிரார்த்தித்துப் பற்பல வைத்தியர்களைக்கொண்டு, இவர்களுக்குச் சிகித்ஸை செய்தார்கள். ஆனால் அந்த வியாதியானது ஒன்றிலும் கேட்கவில்லை. கடைசியாக அசுவினீ தேவதைகள் மனுஷ்ய ரூபமாக அங்கு வந்து, அவ்வியாதியை ஸ்வஸ்தப்படுத்தினதுமன்றி அதை ஏவவிட்டது அபிநவகுப்தன் என்றும் சொல்லிப் போனார்கள். உடனே பத்மபாதர் மிகக் கோபாக்ராந்தராய் மந்திரத்தாலேயே அந்த அபிநவகுப்தனைக் கொன்றார்.

பிறகு ஸ்வஸ்தராகவே ஸ்ரீ சங்கரர் கங்காநதிக் கரையில் சிலகாலம் வாஸஞ்செய்தபொழுது ஒருநாள் ஸாயங்காலம் மாண்டூக்யோபநிஷத்துக்குக் காரிகை செய்தவராகிய கௌடபாதரைச் சந்தித்து இருவரும் ஒருவரோடொருவர் மிகவும் ஆநந்தபரிதர்களாகத்தானே ஸல்லாபித்துவிட்டுப் பிரிந்தார்கள். இச்சமயத்தில் ஊரெங்கும் ஓர் வதந்தியுண்டாயிற்று. அதாவது காஷ்மீரத்திலுள்ள சாரதா பீடமிருக்கும் மண்டபத்தின் தெற்கு வாசலைத் திறந்து உள்ளே செல்வதற்கு யோக்யர்களான பண்டிதர் தென் தேசங்களிலொருவருமில்லாததால் தெற்கு வாசல் மூடினபடியே இருக்கிறதென்பதுதான். இது செய்தி நமது ஆசார்யஸ்வாமிகள் காதில் படவே தமது சிஷ்யவர்க்கங்களுடன் அவர்கள் உடனே காஷ்மீரத்திற்குச் சென்றார்கள். அந்த சாரதாபீடத்தின் ஸ்வாரஸ்யம் யாதெனில் ஸர்வஜ்ஞரான பண்டிதர் வந்

னால்தான் கதவு திறக்கும்; அந்த பீடத்திலும் அவருக்கு உட்கார இடமுண்டாகும். ஏதாயினும் கொஞ்சமேனும் குறையிருந்தால் அந்தக் கதவு ஒருக்காலும் திறக்காது. 'இந்த யதிசக்ரவர்த்தியைக் கண்ட மாத்திரத்திலோவெனின் அக்கதவு தானாகவே திறந்துகொண்டது. இவர்களும் உள்ளே நுழைந்து சாரதாபீடத்திலேறி உட்கார்ந்தார்கள். தமக்கு ஓர் கௌரவத்தை உத்தேசித்து இவர்கள் இதில் ஏறவில்லை. தமது அத்வைதமதத்தின் மஹிமையை உலகத்திற்குக் கற்பிக்கவேண்டியே இவ்வாறு செய்தார்கள். இவர்கள் உட்கார்ந்ததும் அங்குள்ள பண்டிதர்கள் ஸமஸ்தமானவர்களும் இவர்களிடத்து வந்து பற்பல மதங்களைக் குறித்து வாதிக்க ஆரம்பித்தார்கள். ஆனால் இவர்களுடைய பிரஸங்கமாகிற சண்டமாருதத்தால் அவர்களெல்லோருமே அடிபட்டு ஓடிப்போனார்கள். இவ்விடத்தில் ஸாயணமாதவர் சொல்லுகிறார்.

काणादः क मणादः क च कपिलवचः [illegible]
[illegible] योगकन्था [illegible] क्वापि भाट्टप्रपञ्चः
[illegible]
[illegible] यतिपतेः [illegible] ॥

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥



ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்

ஜகத்குரு, ஶ்ருங்கேரி.

## 20.

# சாரதாபீடவாஸம்.

ஸ்ரீ சங்கரர் சாரதா பீடத்திலேறினதும் மற்ற மதங்களெல்லாம் எங்கே யென்று தேடும் படியாக ஆய்விட்டன. உடனே தேவதைகளெல்லாம் புஷ்பவர்ஷம் வர்ஷித்தார்கள். இத்தகைய் அளவில்லாக் கீர்த்தியுடன் பிரகாசித்துக்கொண்டு நமது ஸ்வாமிகள் காஷ்மீரத்தை விட்டகன்று பதரிகாச்ரமத்திற்குச் சென்றார்கள். அங்கு சிலகாலம் வஸித்து அவ்விடத்திலும் ஓர் மடத்தை ஸ்தாபித்துவிட்டு, கலிகாலத்திய கல்மஷங்களையெல்லாம் தொலைத்துக்கொண்டு விளங்கினார்கள். இச்சமயத்தில் ஸாக்ஷாத் ஈசுவரனுடைய அவதாரமான ஸ்ரீ சங்கரருக்கு முப்பத்திரண்டு வயது பூர்ணமாயிற்று. தாம் வந்த காரியங்களெல்லாம் ஆய்விட்டதால் இனித்திரும்பிப் போகக்கருதி பதரிகையிலிருந்து கேதாரத்திற்குச் சென்றார்கள். அவ்விடத்தில் மிகுந்த குளிரினால் வருந்திய சிஷ்யர்

களின் பிரார்த்தனைக்கிணங்கி நமது ஸ்வாமிகள் பரம தயாளுவானபடியால் நான்கு பக்கங்களிலும் பனிக்கட்டிகள் ஏராளமாய்க் கிடக்கும் அந்த இடத்திலேயே மிகவும் உஷ்ணமான ஒரு உதககுண்டத்தைத்தமது சரணாரவிந்தங்களிலிருந்து உண்டாக்கினார்கள். இந்த யதிநாதருடைய கீர்த்திதான் அவ்வாறு பரவுகிறதோவென்று சொல்லும்படி அந்த உஷ்ணகுண்டம் இக்காலத்தும் அங்கு காணப்படுகிறது.

இவ்வாறாக தேவகார்யத்தை முடிப்பதற்கென்றே கைலாஸகிரியினின்றும் இறங்கி வந்த ஸ்ரீசங்கரரைத்திருப்பிக் கூட்டிக்கொண்டு போவதற்காக, பிரஹ்மா, விஷ்ணு, இந்திரன், முதலான ஸமஸ்த தேவதைகளும், மஹரிஷிகளுடனும் ஸித்தர்களுடனும் அங்கு வந்தார்கள். ஒரு நிமிஷப் பொழுதில் ஆகாயத்தில் கொஞ்சமேனும் இடமில்லாமல் மிகவும் நெருக்கமாய் முப்பத்து முக்கோடி தேவதைகளின் விமானங்களும் தோன்றின. எல்லோருமாகப் பின் வருமாறு, திரிபுரதஹனம் செய்தவரும் இப்பொழுது ஸந்யாஸி வேஷம் தரித்திருப்பவருமான ஸ்ரீ சங்கரரை ஸ்தோத்தரித்தார்கள்.

भवानाद्यो देवः कवलितविषः कामदहनः
पुरारातिर्विश्वप्रभवलयहेतुस्त्रिनयः ।
यदर्थं गां प्राप्तो भवमथन वृत्तं तदधुना
तदायाहिस्वर्गं सपदि गिरिशास्मत्प्रियकृते ॥

ഭവാനാദ്യോ ദേവഃ കവലിതവിഷഃ കാമദഹനഃ
പുരാരാതിർവിശ്വപ്രഭവലയഹേതുസ്ത്രിനയനഃ ।
യദർത്ഥം ഗാം പ്രാപ്തോ ഭവമഥന വൃത്തം തദധുനാ
തദായാഹി സ്വർഗ്ഗം സപദി ഗിരിശാസ്മത്പ്രിയകൃതേ ॥

தாங்கள்தாம் முதல் தெய்வம். தாங்கள்தாம் விஷத்தைச்சாப்பிட்டீர்கள். மன்மதனை யெரித்தீர்கள். திரிபுர ஸம்ஹாரம் செய்தீர்கள். ஜகத்தின் உற்பத்தி, நாசம் இவைகளுக்குக்காரணம் தாங்களே. திரிலோசனனான மஹாதேவனும் தாங்களே. தாங்கள் எதை ஸ்தாபிப்பதற்காக பூலோகத்திற்கு வந்தீர்களோ அந்த ஸம்ஸார நிவாரகமான அத்வைத மதம் இப்பொழுது நன்றாகப் பரவி விட்டது. தாங்கள் வந்த கார்யம் நிறைவேறிற்று. ஆதலால் சீக்கிரத்தில் தயவுசெய்து ஸ்வர்க்கலோகம் வந்து எங்களை அநுக்கிரஹம் செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

उन्मीलद्विनयप्रधानसुमनोवाक्यावसाने महा-
देवे संभृतसंभ्रमे निजपदं गन्तुं मनः कुर्वति ।
शैलादिः प्रमथैः परिष्कृतवपुस्तस्थौ पुरस्तत्क्षणा-
दुक्षाशारदवारिदुग्धवरटाहंकारहुंकारकृत् ॥

உந்மீலத்விநயப்ரதாநஸுமநோவாக்யாவஸாநே மஹா-
தேவே ஸம்ப்ருதஸம்ப்ரமே நிஜபதம் கந்தும் மந: குர்வதி ।
ஶைலாதி: ப்ரமதை: பரிஷ்க்ருதவபுஸ்தஸ்தௌ புரஸ்தத்க்ஷணா-
துக்ஷாஶாரதவாரிதுக்தவரடாஹங்காரஹுங்காரக்ருத் ॥

இவ்வாறு மிகவும் விநயத்துடன் தேவதைகள் மொழிந்த வார்த்தையைக்கேட்டு ஸ்ரீசங்கரரும் தமது நிஜபதவியை அடைய வேண்டுமென்று எண்ணியதத்க்ஷணத்திலேயே ஸமஸ்த கணங்களோடும் கூடினதாகத்தானே அதிக வெண்மையான நந்திகேசுவரர் எதிரில் வந்து நின்றார்.

इन्द्रोपेन्द्रप्रधानैस्त्रिदशपरिवृढैः स्तूयमानः प्रसूनैः
दिव्यैरभ्यर्च्यमानः सरसिरुहभुवा दत्तहस्तावलम्बः ।
आरुह्योक्षाणमग्र्यं प्रकटितसुजटाचूडचन्द्रावतंसः
शृण्वन्नालोकशब्दं समुदितमृषिभिर्धाम नैजं प्रतस्थे ॥

𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌪𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑌪𑌰𑌿𑌵𑍃𑌢𑍈𑌃 𑌸𑍍𑌤𑍂𑌯
𑌮𑌾𑌨𑌃 𑌪𑍍𑌰𑌸𑍂𑌨𑍈𑌃
𑌦𑌿𑌵𑍍𑌯𑍈𑌰𑌭𑍍𑌯𑌰𑍍𑌚𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 𑌸𑌰𑌸𑌿𑌰𑍁𑌹𑌭𑍁𑌵𑌾 𑌦𑌤𑍍𑌤𑌹𑌸𑍍𑌤𑌾
𑌵𑌲𑌮𑍍𑌬𑌃 ।
𑌆𑌰𑍁𑌹𑍍𑌯𑍋𑌕𑍍𑌷𑌾𑌣𑌮𑌗𑍍𑌰𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑌟𑌿𑌤𑌸𑍁𑌜𑌟𑌾𑌚𑍂𑌡𑌚
𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌵𑌤𑌂𑌸𑌃
𑌶𑍃𑌣𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌲𑍋𑌕𑌶𑌬𑍍𑌦𑌂 𑌸𑌮𑍁𑌦𑌿𑌤𑌮𑍃𑌷𑌿𑌭𑌿𑌰𑍍𑌧𑌾𑌮 𑌨𑍈𑌜
𑌪𑍍𑌰𑌤𑌸𑍍𑌥𑍇

இந்திரன் உபேந்திரன் முதலான தேவதைகளெல்லோரும் எண்டிசைகளிலும் சூழ்ந்துகொண்டு ஸ்தோத்ரம் செய்ய, ஆகாயத்திலிருந்து தேவஸம்பந்தமான புஷ்பவர்ஷங்கள் வர்ஷிக்க, ஸாக்ஷாத் பிரஹ்ம தேவனே கைலாகு கொடுக்க ஸ்ரீசங்கரர் அந்த சிரேஷ்டமான நந்தியின் மேல் ஏறிக்கொண்டு, தமக்குரித்தான ஜடை, சந்திரன் முதலிய அடையாளங்களை வெளியாக்கி, மஹரிஷிகளால் நமஸ்கரிக்கப் பெற்றுத் தமது நிஜமான ஸ்தானத்திற்குச் சென்றார்கள்.



மகாமகோபாத்திய
டாக்டர் உ. வே. சா
நூல் நிலைய
சென்னை - 60